பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 08 செவ்வாய்க்கிழமை (25.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 333

# ரணிலின் தீர்வு யோசனை குறித்து அவருடன் சந்திரிகா ஆலோசனை

## இணைந்து செயற்படும் அவசியத்தை ஏற்றனர்

கொழும்பு, ஒக்ரோபர் 25

ஏதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்த யோசனைகள் குறித்து அவருடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று நீண்ட கலந்தாலோசனைகளை நடத்தினார்.

நாட்டின் அதிபிரச்சினைக்குரிய விவகாரமான யுத்தம் மற்றும் சமாதானம் தொடர்பான விடயத்திற்கு தீர்வு காண்பதற்கு, நாட்டின் அனைத்துப் பெரிய கட்சிகளும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை இச்சந்திப்பின்போது இருவருமே ஏற்றுக்கொண்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், எதிர்க்கட்சித் தலைவரும் நேற்று மாலை சுமார் இரண்டு மணிநேரம், உதவியாளரின்றி நேரில் சந்தித்துப் பேசினர்.

இச்சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் நேற்றிரவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று (திங்களன்று), எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சிநேகபூர்வ சூழ்நிலையில் சந்தித்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினார்.

ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் தமது

(16 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.பொலீஸாருக்கு நேற்று60 ஜீப்புகள் அனுப்பி வைப்பு!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்காக யாழ்ப்பாணத்தில் பொலிஸாருக்குத் தேவைப்படும் 60 ஜீப்புக்களையும் கொழும்பிலிருந்து அனுப்பிவைப்பதற்குப் பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

கொழும்பு மாவட்டத்தின் பல்வேறு பொலீஸ் நிலையங்களிலிருந்து பெறப்பட்ட ஜீப்புகள் நேற்று கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்காக பொலீஸாருக்குப் போதிய வாகன வசதிகள் செய்யப்பட வேண்டுமெனத் தேர்தல் ஆணையாளர் விடுத்த அறிவுறுத்தலுக்கு அமைய பொலீஸ் திணைக்களம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. (க)

### பொ.ஐ.மு.தலைவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, ஒக்.25

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களையும் அந்தக் கட்சிகளின் மூத்த உறுப்பினர்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று காலை சந்திக்கவிருக்கிறார்.

ஜனாதிபதி மாளிகையில் இன்று காலை பத்துமணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தின்போது தற்போதைய அரசியல் நிலை

(16 ஆம் பக்கம் பார்க்க)

### மஹிந்த வீட்டருகே 11 தமிழர்கள் கைது!

கொழும்பு,ஒக்.25

தங்காலையில் உரிய ஆவணங்களின்றி நடமாடினார்கள் என்ற குற்றச்சாட்டில் 11 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தங் காலை வீட்டிற்கருகிலுள்ள மதுபானசாலையில் மது அருந்திக்கொண்டிருந்த இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

தங்காலை வைத்தியசாலையில் கட்டட நிர்மாண வேலைகளுக்காக லிந்துலை மற்றும் மலையகத்தின் ஏனைய பிரதேசங்களிலி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரஸல்ஸில் ஈழத் தமிழர் ஆர்ப்பாட்டம்!



ஐரோப்பிய மண்ணில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றும் நிகழ்வு...

தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய நாடுகளில் வரவேற்பதில்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் எடுத்த தீர்மானத்தைக் கண்டித்து பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் நேற்று ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் கூடி பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பிரஸல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தலைமை அலுவலகம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ஐரோப்பிய நேரப்படி நண்பகல் 12 மணியளவில் தமிழர்களின் இந்த உரிமைப் போர் ஆரம்பமானது. நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழ்ப் பாரம்பரியப்படி நாதஸ்வர இசை முழங்கியது.



பேரணியில் ஒரு காட்சி...

தமிழ் நாட்டின் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் பொதுச் சுடரினை ஏற்றி வைத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அதன்பின்னர் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

"சூரியத் தேவனே எங்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கார்த்திகை விளக்கீடு, திருவெம்பாவை எப்போது என்ற சர்ச்சைக்குத் தீர்வு

### இந்து கலாசார அமைச்சு தெளிவுபடுத்தியது

கொழும்பு, ஒக்.25

திருக்கார்த்திகை விரதம் மற்றும் திருவெம்பாவை எப்போது என்பது தொடர்பாகக் கிளப்பப்பட்டு வந்த சர்ச்சைக்கு முடிவு காணப்பட்டிருக்கின்றது.

இந்த விரதங்கள் எப்போது என்பது குறித்து இந்து கலாசார அமைச்சு முடிவெடுத்து அறிவித்திருக்கின்றது.

இவ்விவகாரம் தொடர்பாக இந்துப் பெருமக்களுக்கு இந்து கலாசார அமைச்சு விடுத்துள்ள விஷேட அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் உள்ள பஞ்சாங்கங்களுக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோ - மினிபஸ் மோதி விபத்து; ஒருவர் உயிரிழப்பு; மூவர் படுகாயம்!

### கைதடியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.25

கைதடியில் நேற்று அதிகாலை மினிபஸ்ஸும் ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்; மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

ஏ-9 வீதியில் கைதடிக்கும் நாவற்குழிக்கும் இடையே பனை அபிவிருத்திச் சபைக் கட்டடத்தின் முன்பாக நேற்றுக்காலை 6 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

சாவகச்சேரியிலிருந்து வீடியோ படப்பிடிப்புக் குழுவினர் திருமண நிகழ்வொன்றைப் படம் பிடிக்கயாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஓட்டோவும், யாழ்ப்பாணத்தி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் குகதாசன் மறைந்தார்



உதயனின் வார வெளியீடான சஞ்சீவியில் 'அங்கிகள் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒரு விதம்' என்ற தலைப்பில் வாசகர்களைக் கவரும் பல நூற்றுக்கணக்கான கட்டுரைகளை வரைந்து வந்த குகா (கே.எஸ். குகதாசன்) நம்மை விட்டுப் பிரிந்தார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய தேசியக் கல்லூரிகளின் அதிபராக இருந்து ஓய்வுபெற்ற கே.எஸ். குகதாசன், குடாநாட்டு மக்கள் மத்தியில் இப்போது வாழ்ந்த புத்திஜீவிகளில் முன்னிலையில் வைத்துப் போற்றப்படவேண்டியவர்.

உயிர்கள், அங்கிகள் பற்றிய ஆழமான - விஞ்ஞானபூர்வமான - தகவல்களையும், உண்மைகளையும், நடத்தைகள் பற்றிய விவரங்களையும் எளிமையான தமிழில், நகைச்சுவை உணர்வு கலந்து, தெளிவாக விளங்க வைக்கும் விதத்தில் கட்டுரைகளை விரித்துச் செல்லும் அவரது பாங்கு, விஞ்ஞானக் கட்டுரைகளைத் தமிழில் வடிவமைப்பதற்கான ஒரு முன்மாதிரியாக அமைந்தது என்பது பலராலும் போற்றப் (02 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தனிநாடுதான் சிறந்ததொரு தீர்வு

### வைகோ தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.25

"இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்குத் தனிநாடுதான் சிறந்த தீர்வு"- என தமிழக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே வைகோ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்:-

இலங்கை வாழ் தமிழர்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்படாது மறுக்கப்படுகின்றன. இலங்கையின் ஆளும் தரப்பினர் தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களையே கொண்டிருக்கிறார்கள்"- என்றார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# பட்டதாரிகளின் மறியற் போராட்டத்தால் கல்விப் பணிமனைப் பணிகள் முடக்கம்!

யாழ்ப்பாணம்,ஒக்.25

பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் மேற்கொண்ட மறியற் போராட்டத்தால் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் யாழ்.கல்வி வலய அலுவலகம் ஆகியவற்றின் பணிகள் நேற்று முடங்கின.

யாழ்.முத்திரைச் சந்தி செம்மணி வீதியில் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் யாழ்.கல்வி வலய அலுவலகம் ஆகியவை ஒரே வளாகத்துக்குள் அமைந்துள்ளன. பயிலுநர் அல்லாத பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கக்கோரி இந்த வளாக வாயிலின் முன்பாக வடக்கு - கிழக்கு மாகாண சபை, மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினால் நடத்தப்பட்ட ஆசிரியர் நியமனப் போட்டிப் பரீட்சையில் தோற்றியும், நேர்முகப் பரீட்சையில் தோற்றியும் நிரந்தர நியமனம் கிடைக்கப்பெறாத பயிலுநர் அல்லாத பட்ட தாரிகள் செயற்குழுவின் அழைப்பின் பேரில் நேற்று முற்பகல் 10 மணிமுதல் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர். வளாக வாயிலில் திரண்ட பயிலுநர் அல்லாத பட்ட தாரிகள் வளாக வாயிற் கதவைப் பூட்டி மறியல் செய்தனர்.



கல்விப் பணிமனை முன்பாக நேற்று மறியற்போராட்டத்தில் ஈடுபட்ட பயிலுநர் அல்லாத பட்டதாரிகளுடன் அதிகாரிகள் பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படம். (படம்:பிரபா)

முன்னதாகவே அலுவலகங்களுக்குள் அலுவலர்கள் சென்றிருந்தனர். இந்த நிலையில் மறியற்போராட்டத்தால் அலுவலகங்களில் இருந்து எவரும் வெளியில் செல்லவோ உள்ளே நுழையவோ முடியவில்லை. இதனால் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும், அலுவலக வளாகத்துக்குள் முடக்கப்பட்டவர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. நிலைமையை சுமுகமாக்கும் நோக்கில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.செல்வரத்தினம், நிர்வாக உத்தியோகத்தர் நாகராஜா உள்ளிட்ட அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டோருடன் பேச்சு நடத்தி பதற்றத்தைத் தணித்தனர். இதன் பின்னர் நண்பகல் 12 மணிவரை மறியற் போரராட்டம் இடம்பெற்றது.

தொடர் போராட்டத்தின் ஆரம்பமாகவே நேற்று மறியல் நடத்தப்பட்டது என்றும் - இன்று தொடக்கம் மறியற் போராட்டம் தொடர்ச்சியாக நடைபெறும் என்றும் - போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் தெரிவித்தனர். (ஒ-7-86-ரி)

## வீடமைப்புக்கான பயிற்சி வகுப்பு

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டுக்கான 2ஆம் கட்ட வீடமைப்புத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக உலக வங்கியின் வீடமைப்புத்திட்ட யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்தார்.

இத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகங்களையும் சேர்ந்த தரவு நிரற்படுத்துநர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல பிரதேச செயலகங்களையும் சேர்ந்த தரவு நிரற்படுத்துநர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பிரதேச செயலகர்களுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. (எ-204-203)

# உரிமைகளை வழங்கக்கூடிய வேட்பாளருக்கு வாக்களியுங்கள்

## சிங்களப் பேராசிரியரின் விருப்பு இது

கொழும்பு,ஒக்.25

தமிழ் மக்கள் தமக்கு விடுதலையைப் பெற்று உரிமைகளை வழங்கக் கூடியவர்களுக்கே வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு பேராசிரியர் எஸ்.வீரகொட தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வென்று ஜனாதிபதியாபவர் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருபவராக இருத்தல்வேண்டும். இல்லையெனில் இலங்கையிலிருந்து பிரிந்து தனி நாட்டை அமைக்கும் சந்தர்ப்பத்தைச் சர்வதேச சமூகம் தமிழ்மக்களுக்கு வழங்க வேண்டும் என சிங்களக் கல்விச் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பேராசிரியர் எஸ்.வீரகொட கருத்துத் தெரிவிக்கையிலேயே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:-

இலங்கையில் நீடித்துச் செல்லும் பிரச்சினையால் அனைத்துச் சமூகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாகத் தமிழ் மக்கள் பல இழப்புகளைச் சந்தித்துள்ளனர். இலங்கையை மரணங்கள் மலிந்த பூமியாக தொடர்ந்தும் வைத்துக் கொண்டிருக்க முடியாது.

இன்றைய நவீன காலத்தில் ஏமாற்றிவிட முடியாத ஒரு தலைவராக, தமிழ் மக்களின் தலைவராக வேலுப்பிள்ளை பிரபாகரன் இருக்கிறார். அவர் நீண்ட காலமாக உரிமைகளைக் கேட்டுப் போராட்டம் நடத்துகிறார்.

ஐக்கிய நாடுகள் விதிகளின்படி நீண்ட காலம் போராட்டம் நடத்தும் ஒரு சமூகம் பிரிந்து செல்வதற்கான உயர் தகுதியைப் பெற்றுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள சமூகம் தமிழ் மக்களை அரவணைத்து உரிமைகளை வழங்கப் போகிறதா அல்லது தமிழ் மக்கள் தாமாகவே உரிமைகளைப் பெற்றுக்கொள்ள நாம் வழிசமைக்கப் போகின்றோமா என்பதை ஒவ்வொரு சிங்களவரும் சிந்திக்கவேண்டும். (3-202)

### சமாதான பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,ஒக்.25

கொழும்பு மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் அனுசரனையுடன் சமூக அபிவிருத்திமன்றம் நடத்தும் சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்திட்டப் பயிற்சி நெறி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு உரும்பிராய் வடக்கு சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன்றத்தலைவி திருமதி நவநீதம் ஜெகதீஸன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பலரின் உரைகள் இடம்பெறவுள்ளன. (3-203)

# கொழும்பிலிருந்து வாக்குச்சீட்டுகள் நேற்று விமானத்தில் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஒக்.25

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள் நேற்று யாழ்.செயலகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. கொழும்பில் இருந்து விமானம் மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்ட வாக்குச்சீட்டுகள் பலத்த பாதுகாப்புடன் வாகனங்கள் மூலம் யாழ்.செயலகத்துக்கு கொண்டு வரப்பட்டன. ஆறு லட்சத்து 96 ஆயிரத்து 938 வாக்குச்சீட்டுகளும் 4ஆயிரத்து 568 தபால்மூல வாக்குச்சீட்டுகளும் - நேற்று எடுத்து வரப்பட்டுள்ளன. யாழ்.தேர்தல் தொகுதிக்கான மொத்த வாக்காளரான 7 லட்சத்து ஆயிரத்து 938 பேரில், 5 ஆயிரம் பேருக்குரிய வாக்குச்சீட்டுகள் புத்தளத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வசிக்கும் வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக அங்கு இந்த வாக்குச்சீட்டுகள் அனுப்பப்பட்டுள்ளன. (ஒ-3-203)

### போராளி வீரச்சாவு

23.10.2005 அன்று தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தின்போது போராளி ஒருவர் சாவடைந்தார் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். லெப்.குமுதன் அல்லது அக்கினிக்காந்தன் (நாகராஜா புலேந்திரன் - பாடசாலை வீதி, கிரான், மட்டக்களப்பு - தற்போதைய முகவரி - இலுப்பையடி, மாரி, கிரான் மட்டக்களப்பு) என்ற போராளியே சாவடைந்தவராவார். (ஒ-12)

# தென்னிலங்கைக் கட்சிகள் 'சுடர் ஒளி' மீது காய்ச்சல்!

பதுளை,ஒக்.25

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவுகோரி நடத்தப்பட்ட பிரசாரக்கூட்டத்தில் உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி' மீது கண்டனக்கணைகள் தொடுக்கப்பட்டன.

தென்னிலங்கைப் பேரினவாதக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் பலர் 'சுடர் ஒளி'யை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊதுகுழல் என்றும், தமிழ்த் தேசியம் மற்றும் தமிழரின் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றுக்காகக் குரல்கொடுக்கும் பிரிவினைவாதப் பத்திரிகை என்றும், பயங்கரவாதிகளின் பிரசார ஏடு என்றும் 'சுடர் ஒளி'யை வாங்கு வாங்கென்று வாங்கினர் அவர்கள்.

கடந்த ஞாயிறன்று தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தினால் பதுளை சேனநாயக்கா அரங்கில் நடத்தப்பட்ட பிரசாரக்கூட்டத்திலேயே 'சுடர் ஒளி' இவ்வாறு மோசமான - கடுமையான - விமர்சனத்துக்கு உள்ளாகியது.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, தேசப்பிரேமி இயக்கச் செயலாளர் வண. பெங்கமுவே நாளக்க தேரர், தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைச் செயலாளர் வண. சந்தானந்த தேரர் ஆகியோரும் 'சுடர்ஒளி'யை வன்மையாகக் கண்டித்து காட்டமாக உரையாற்றியவர்களுள் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் பேச்சாளர்களின் தாக்குதல் இலக்கில் 'சுடர் ஒளி'க்கும் முக்கிய இடம் இருந்ததாக செய்தியாளர் தெரிவிக்கிறார். (க)



கைதடிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் சம்பந்தப்பட்ட 'ஒட்டோ' பிளந்து கிடப்பதைப் படத்தில் காணலாம். (படம்:கைதடிச் செய்தியாளர்)

# அதிபர் குகதாசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் உண்மையாகும்.

வடமராட்சி, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட குகதாசன் ஆரம்பக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வராவிலும், மேல்நிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் முடித்துக்கொண்டு, உயர்கல்வியை சென்னை பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்து உயிரியல் பட்டதாரியானவர்.

உயிர்கள் குறித்து - குறிப்பாகத் தாவரங்கள், அவற்றின் வர்க்கங்கள், இனங்கள், வகைகள் குறித்து - ஆழமான அறிவு கொண்ட குகதாசன் தொண்டமானாறு நீர் ஏரி குறித்து தமது சகாக்கள் இருவரோடு சேர்ந்து நீரேரி உயிரியல் ஆய்வு நடத்திச் சாதனை புரிந்தவர். இதன் காரணமாக இவருக்கு அமெரிக்க அரசின் ஒழுங்கில் அங்குள்ள பல்கலைக்கழகத்தில் விசேட புலமைப்பரிசில் கிடைத்தது. அங்கு முதுநிலைப் பட்டம் பெற்றார் அவர். அப்போது அவர் வெளிப்படுத்திய திறமை கண்டு, அந்தப் பல்கலைக்கழக சான்றோரினால் பட்டமளிப்பின்போது அவருக்கு விசேடமாக வழங்கப்பட்ட மோதிரம் அவரது உயிர் ஓய்வுவரை அவரது கரத்தை அலங்கரித்திருக்கிறது.

உயிரியல் ரீதியாகத் தாவரங்களை இனங்காண்பதில் கைதேர்ந்தவர் அவர். இந்தத் திறமை இலங்கையில் குகதாசன் உட்பட ஒரு சிலரிடமே உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கப் பல்கலைக்கழகக் கல்வியே இந்த அறிவாற்றலை அவருக்குப் பெற்றுக்கொடுத்தது.

யாழ். பல்கலைக்கழகத்திலும், சுற்றாடலிலும் உள்ள அனைத்துத் தாவரங்களையும் விருட்சங்களையும் தாவரவியல் ரீதியாக இனங்கண்டு அவற்றுக்குரிய விஞ்ஞானப் பெயர்களை அவர் சூட்டியுள்ளார். இந்தப் பெயர்களை இன்னும் யாழ். பல்கலைக்கழகத்துக்குச் சென்றால் அங்குள்ள மரங்களில் காணலாம்.

தமக்கு அறிவை வழங்கிய கல்வித் தாயாகிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலேயே நீண்டகாலம் கல்வி போதித்து அந்தக் கல்லூரியை நீண்ட காலம் வழிநடத்தும் பேறு பெற்ற குகதாசன், யாழ். இந்துக் கல்லூரிச் சமூகத்தால் பெரிதும் மதிக்கப்படும் சான்றோனாவார்.

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் தலைவர் உட்படப் பல்வேறு பதவி நிலைகளை வகித்து அவற்றின் ஊடாக அரும் கல்விப் பணியாற்றியவர் அவர்.

உயிரியல், தாவரவியல் தொடர்பான பல்வேறு நூல்களையும் பாடப்புத்தகங்களையும் எழுதி வெளியிட்டு அத்துறைக்கு வலுச் சேர்த்தவர் குகதாசன்.

விஞ்ஞான விடயங்களை பல்வேறு பத்திரிகைகளில் அழகு தமிழ்ச் சொட்ட - எளிமையான சொற்களில் - ஆழமான கருத்தோடு - வரைந்த குகதாசன் தமது 75ஆவது வயதில் நேற்றுமுன்தினம் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்.

தமது மனைவியையும் இரண்டு பெண்கள் உட்பட நான்கு பிள்ளைகளையும், குடும்பத்தவர்களையும் விட்டுப் பிரிந்து சென்றுள்ளார் அண்ணல் குகதாசன்.

தடைப்பட்டு நிற்கும் 'சஞ்சீவி' மீண்டும் வாசகர்களின் கைகளுக்கு வந்தாலும் - உயிரியல் உலகின் விந்தைகளை அழகிய படங்களின் வரிசையோடு, எளிய தமிழில் தரும் நடுப்பக்கக் கட்டுரைகளை - வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் அந்த ஆழமான விடயங்களை - 'குகா'வின் கட்டுரை வாயிலாகத் தரிசித்து வந்த வாசகர்களுக்கு அது இனிக் கிட்டுவது துர்லபமே.

இரண்டாயிரத்தின் ஆரம்பம் வரை 'சஞ்சீவி' வெற்றிகரமாக வெளிவந்ததன் மையத்தில் குகதாசனின் பங்களிப்பு கணிசமானது. பிரதிபலன் எதிர்பராமல் - சன்மானம் ஏதும் பெறாமல் - உதயன் - சஞ்சீவிக்காக அதன் குடும்ப அங்கத்தினர் போன்று உழைத்த அந்த உத்தமருக்கு 'உதயன்' தலைசாய்த்து அஞ்சலி செலுத்துகின்றான்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# குழப்பத்தின் உச்சத்தில் சந்திரிகா

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் பதினொரு ஆண்டுகள் இருந்து, இந்த நாட்டைத் தனது இரும்புப் பிடி ஆட்சியில் நிர்வகித்து முடித்த சந்திரிகா குமாரதுங்க, தமது ஆட்சிக் காலத்தில் பண்ணிய அதே கொள்கைக் குழப்பப் பிரசாரத்தை இப்போது ஆட்சியை விட்டுப் போகும் போதும் கைவிடுவதில்லை என்று திடசங்கற்பம் பூண்டிருக்கிறார் போலும். அவரின் சேவைகளைப் பாராட்டுதல் என்ற பெயரில் கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத் தில் அவர் ஆற்றிய உரை இத்தகைய எண்ணத்தைத் தான் நமக்குத் தருகின்றது.

அமைதி முறையில் - சமாதான வழியில் - பேச்சு மூலம் - அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு வாயிலாக - இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பேன் என்று கூறி ஆட்சிப் பீடத்தில் ஏறியவர் அவர்.

ஆரம்பத்தில் சமாதான தேவதையாகத் தோற்றிய அவர் பின்னர் போர்வெறிமிக்க தமது கொடூர முகத்தைக் காட்டியபோது தான் மக்களுக்கு அவரின் உண்மைச் சொரூபம் வெளிப்படத் தொடங்கியது. சமாதானத்திற்கான யுத்தம் என்ற புதுவிதக் கொள்கையைப் பிரகடனப்படுத்தி, சரித்திரத்தில் முன்னெப்போதுமில்லாத குரூரப் போரைத் தமிழர் தாயகம் மீது திணித்து, வரலாற்றில் என்றுமே அனுபவித்தறியாத பேரழிவுகளைத் தமிழர் தேசத்துக்கு ஏற்படுத்தினார்.

அவரையும் விஞ்சி, ஆட்சிக்கு வந்த அடுத்த அரசு அமைதி வழியில் தீர்வுகாண எடுத்த முயற்சிகளை, தமது நிறைவேற்று அதிகாரம் என்ற ஆதிக்க நடவடிக்கை மூலம் அந்த அரசை வீட்டுக்கு அனுப்பி, அந்தச் சமாதான எத்தனங்களைக் குழப்பிக் குட்டிச்சுவராக்கினார்.

இவ்வாறு அமைதி முயற்சிகளையும், அகோரப் போர் நடவடிக்கைகளையும் மாறி, மாறித் திணித்து தான் தவறாகக் கைக்கொண்ட கொள்கைக் குழப்பதினால் முழு இலங்கைத் தீவையுமே கெட்டழித்த அம்மையார், தாம் ஆட்சியிலிருந்து போகும்போதும் குழப்பப் போக்கைக் கைவிடுகிறார் இல்லை.

தானே தமது அணியின் ஜனாதிபதி வேட்பாளராகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரைப் பிரேரித்து, வேட்பாளர் நியமனமும் கொடுத்து, களத்தில் இறக்கிவிட்டு விட்டு, இப்போதும் அவ்விடயத்தில் குழப்பப் பேச்சை அரங்கில் நிகழ்த்துகின்றாரே தவிர, திட்டவட்டமாக - தெளிவாக - தனது கருத்து இதுதான் என்பதைத் தெளிவுபடுத்துகின்றார் இல்லை.

அவரால் வேட்பாளர் நியமனம் வழங்கப்பட்ட பிரதமர் மஹிந்த தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர் ஜனாதிபதி குமாரதுங்கவை விட்டுப் பிரிந்து வெகுதூரம் சென்றுவிட்டார். ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாதக் கும்பல்களின் கொள்கைகளில் சிக்குண்டு கைதியாகிவிட்டார் அவர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுடையவை என்று ஜனாதிபதி குமாரதுங்க இன்று கூறும் கொள்கைகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தூக்கிக் கடாசி நாள்களாகிவிட்டன. 'மஹிந்தவின் சிந்தனை' தேர்தல் விஞ்ஞாபனம் தெட்டத் தெளிவாகத் தெரிவிக்கும் தகவல் இதுதான்.

இவ்வளவற்றுக்கும் பின்னரும் -

திட்டவட்டமான ஒரு முடிவை அறிவிக்காமல், மக்களைப் பார்த்துக் குழப்பமான கருத்துகளைக் கூறி, தம்மைப் போலவே மக்களையும் குழப்பத்திற்குள் ஆழ்த்தப் பார்க்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டுக் கொடுக்கவோ, காட்டிக் கொடுத்துத் துரோகம் பண்ணவோ அனுமதிக்கமுடியாது என்று கண்டிக் கூட்டத்தில் காட்டமாகக் கூறிய ஜனாதிபதி, சிங்கள, பௌத்த தீவிரவாதப் போக்குடைய ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றை ஒருபுறமும் விடுதலைப் புலிகளை மறுபுறமுமாகத் திட்டித் தீர்க்கவும் தவறவில்லை.

தமிழர் தரப்பை - புலிகளை - அவர் ஏசுவதை விட்டுவிடுவோம். அது அவரது வழமையான போக்குத்தான்.

அவரே தென்பகுதித் தீவிரவாதிகள் கூட்டம் என்று கூறும் அந்த அணியுடன், இன்று கூட்டுச் சேர்ந்திருப்பவர் யார்? ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகத் தெரிவாகிய பின்னர் - ஜனாதிபதி சந்திரிகா சுட்டிக்காட்டும் அவரின் கட்சிச் கொள்கைகள் என்று கூறுபவற்றை - தூக்கி வீசிய மஹிந்த ராஜபக்ஷதானே..?

ஒருபுறம் அந்தப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்து அவரை வெற்றிபெறச் செய்யக் கோரும் ஜனாதிபதி குமாரதுங்க, மறுபுறம் அவரை சரியான வழியில் - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாதையில் - செல்வதற்கு வழிகாட்டும் படியும் மக்களைக் கோருகின்றார். அப்படிக் கோருவதன் மூலம் மக்களை என்ன செய்யச் சொல்கிறார் அம்மையார்?

இலங்கைத் தீவின் மக்களைப் பொறுத்தவரை இனி அவர்கள் செய்யக் கூடியது ஒன்றே ஒன்றுதான். அது - தேர்தலில் ஒரு தரப்புக்கு வாக்களிப்பது அல்லது வாக்களிக்காமல் விடுவது. இதைத்தான் அவர்கள் செய்யமுடியும்.

ஜனாதிபதி சந்திரிகா தமது அணியின் சார்பில் தாமே பிரேரித்து முன்நிறுத்திய ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ விடயத்தில் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று இப்போது எதிர்பார்க்கிறார்? அவரே தென்னிலங்கைத் தீவிரவாதிகள் என்று குறிப்பிடும் அணியினரின் கொள்கைக்குள் மூழ்கிப் போயிருக்கும் பிரதமர் மஹிந்தவுக்கு வாக்களிப்பதன் மூலம், சு.கவின் கொள்கைகளை விட்டுக்கொடுத்துக்காட்டிக் கொடுக்கும் செயலுக்கு மக்களை துணை போகக் கோருகிறாரா அம்மையார்? அல்லது அவரது கருத்துப்படி, சு.க கொள்கைகளை தென்பகுதி தீவிரவாதிகளிடம் விலைபேசி விற்றுவிட்ட பிரதமர் மஹிந்தவுக்கு அதற்காக வாக்களிக்காமல் விடுவதன்மூலம் அவரை, நல்வழிப்படுத்தும்படி கோருகின்றாரா?

அரசியல்அதிகாரத்திலிருந்து தாம் வெளியேறும் - வெளியேற்றப்படும் - இந்த இறுதிக் காலத்தில்கூட தாம் என்ன நிலைப்பாட்டை எடுப்பது என்று தெரியாமல் குழம்பிப் போயிருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க, தமது கருத்துகளால் மக்களையும் குழப்புகிறார். அவ்வளவேதான்.

# சு.கவின் கொள்கைகளுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும்

## கண்டியில் ஜனாதிபதி வலியுறுத்து

கொழும்பு,ஒக்.25

சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை யாருக்கும் விற்க இடமளிக்கப்படமாட்டாது. அதுவும் அடிப்படைவாதிகளுக்கு அது ஒருபோதும் விற்கப்படவேமாட்டா. இந்த விடயத்தில் கட்சி மிகத் தெளிவாக இருக்கிறது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கே மக்கள் வாக்களிக்கவேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார். கண்டி, கெட்டம்பேயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்தும் ஜனாதிபதியின் சேவையைப் பாராட்டியும் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதியின் சகோதரரும் வெளிவிவகார அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்க, ஜனாதிபதிக்கு நெருக்கமான அமைச்சர்களான சரத் அமுனுகம, டி.எம். ஜயரத்ன ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

ஜனாதிபதி உரையாற்றி முடியும் வரை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அங்கு வருகைதரவில்லை.

கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காண்பது என்பது பகற்கனவு. அதிகாரப் பரவலாக்கல் மூலமே தீர்வு காணமுடியும்.

இனப்பிரச்சினைகளை யுத்தம் மூலம் தீர்க்க முடியாது என்பதற்கு இலங்கையில் மட்டுமல்ல உலக வரலாற்றிலேயே நிறைய உதாரணங்கள் உள்ளன. யுத்தம் மூலம் தீர்வு காண முயன்ற நாடுகளில் எல்லாம் லட்சக்கணக்கானோர் பலியாகியுள்ளனர். சைபீரியா, அயர்லாந்து போன்ற நாடுகள் அதற்குச் சிறந்த உதாரணங்கள்.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. பிரபாகரனுக்கு மட்டுமல்ல முழுத் தமிழர்களுக்குமே அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அதனாலேயே அவர்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று கூறுகின்றோம். பிரபாகரனுக்கு அல்ல தமிழ் மக்களுக்காகவே அதிகாரப் பரவல் தேவையானது. சுதந்திரக் கட்சியும் அதே கொள்கையையே கொண்டுள்ளது. அடிப்படைவாதிகள் இதனை எதிர்க்கின்றனர்.

தெற்கில் நீதி, நியாயமான ஒரு தேர்தல் நடைபெற்றால் அதில் அடிப்படைவாதிகள் 10 சதவீத வாக்குகளைக் கூடப் பெறமாட்டார்கள். அவர்களுக்காகச் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை மாற்ற முடியாது.

கட்சியின் கொள்கைகள் தெளிவானவை. அவை இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காண்பதையே ஆதரிக்கின்றன. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் கொள்கைளுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும். கட்சியின் கொள்கைகளை ஆதரிக்கும் மஹிந்தவுக்கே வாக்களிக்க வேண்டும்.

சமாதானத்துக்கான சூழல் தோன்றியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு அவசியம். மீண்டும் ஒரு யுத்தத்துக்கு இந்த நாடு செல்லக் கூடாது. - என்றார் ஜனாதிபதி. (எ-க)

# அச்சுவேலி ஆஸ்பத்திரிக் கட்டட வேலைகள் தாமதமாக ஒப்பந்தகாரரே காரணம்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 25

அச்சுவேலி ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் கட்டடத்தின் மூன்றாம் கட்ட வேலைகள் மிகவும் மந்த கதியில் நடைபெறுவதை யாழ். சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஒப்புக்கொண்டுள்ளார். வேலைகள் தாமதமாக நடைபெறுவதற்கு ஒப்பந்தகாரர்களே பொறுப்பு என்று அவர் உதயனுக்குத் தெரிவித்திருக்கிறார்.

'அச்சுவேலி ஆஸ்பத்திரிக் கட்டடத்துக்கு ஒதுக்கீடு செய்த நிதி திரும்பிவிடும் நிலை' என்று தலைப்பிட்டு கடந்த 16ஆம் திகதி உதயனில் - 3ஆம் பக்கதில் - ஒரு செய்தி வெளியாகி இருந்தது.

அந்தச் செய்தி தொடர்பாக உதயனுக்கு அனுப்பிய விளக்கக் கடிதத்திலேயே பிரதி சுகாதாரப் பணிப்பாளர் மேற்கண்ட தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அவர் தமது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-

16.10.2005ஆம் திகதிய பத்திரிகையில் 'அச்சுவேலி ஆஸ்பத்திரி நிதி ஒதுக்கீடு திரும்பிவிடும்' என்ற தலைப்பில் வெளியான செய்தி சம்பந்தமாக சுகாதாரத் திணைக்களத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவிரும்புகின்றோம்.

அச்சுவேலி வைத்தியசாலையின் வெளிநோயாளர் கட்டடத்தின் 3ஆம் கட்ட வேலைகளுக்காக இவ்வருடம் 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. நாம் உரிய காலத்திலேயே கட்டடத் திணைக்களத்திற்கு இதனை அறிவித்து கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு இவ்வேலை 10.06.2005 இல் ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டது. ஆனால், கட்டடப் பணிகள் மந்தகதியிலேயே நடைபெறுகின்றன. இது சம்பந்தமாக கட்டடத் திணைக்களத்தினூடாக ஒப்பந்தகாரருக்கு இவ்வேலையைத் துரிதப்படுத்துமாறு அறிவித்துள்ளோம். தங்களது பத்திரிகையில் வெளியான செய்தியில் இவ்வேலையை ஆரம்பிப்பதற்கு எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டமை சரியல்ல என்பதை தெரிவிக்கவிரும்புகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாளை

ஐப்பசி 09
புதன்கிழமை
26.10.2005
திதி: நவமி
முன்னிர : 11.34 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
பின்னிரவு: 05.10 வரை
சுபநேரம்: 04.33-06.03
ராகுகாலம்: 12.03-01.33
(யாவும் பழைய நேரப்படி)

# சோனகதெருவில் முஸ்லிம்களின் காணி போலி ஆவணத்துடன் விற்பனையாம்

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ். நாவாந்துறை வடக்கு சோனகத் தெருவில் அமைந்துள்ள முஸ்லிம் மக்களின் காணியை போலியான ஆவணங்களுடன் விற்பனை செய்யும் மோசடியில் ஒருவர் ஈடுபட்டுள்ளார். இது குறித்து மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்.

யாழ். முஸ்லிம் பறைச்சேரி வெளி குடியேற்றத்திட்ட உதவியாளர்கள் இவ்வாறான கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ்.மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் எம். ஜி.பசீர், அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு முஸ்லிம் மக்களின் குடியேற்றத் திட்டத்திற்கென குறித்தொதுக்கப்பட்ட காணியையே விற்பதற்கு மோசடி செய்யப்படுவதாக சுட்டிக்காட்டுகிறார்.

இது விடயமாக அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு சோனகத்தெருவில் உள்ள பறைச்சேரி வெளி குடியேற்றக் காணி 42 பேருக்குச் சொந்தமானது.


இந்தக் காணியை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 'தூக்கு மரக்காடு' என்று கூறி போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து பெரும் தொகையான முற்பணத்தை ஒருவர் பெற்று மோசடியில் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே,இந்த மோசடியில் சிக்காது எமது காணிகளை சம்பந்தப்பட்ட 42 குடும்பங்களும் மீளப்பெறுவதற்கு மக்கள் ஆதரவு தரவேண்டும் - என்று அதில் உள்ளது. (எ-3)

## உதயவாக்கு

இருட்டு, இருட்டு என்று கூறிக்கொண்டிருப்பதை விட ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றுவது நல்லது.

-ஓர் அறிஞர்



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலய மாணவரும்
திரு .திருமதி புலேந்திரராசா ஜெராயேஸ்வரி அவர்களின்
செல்வப் புதல்வனுமாகிய

**செல்வன் ஜனோஜ்**

2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் உயர்கல்விகற்று பல்லாண்டு வாழ பாராட்டி வாழ்த்துகிறோம்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (41928)(46-11-17) **ராசன் சித்தப்பா, கௌரி சித்தி.**



ஸ்கந்தவரோதயக் கல்லூரி
ஒறேற்றர் **சி.சுப்பிரமணியம்** அதிபர்
நினைவுநாள்



**தலைவர் :-** திரு.க.சிவாஜி
[முதல்வர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்]
**காலம் :-** *இன்று (25.10.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணி*
**இடம் :-** *கல்லூரி மண்டபம்*

**நினைவுப் பேருரை**
நினைவுப் பேருரை வழங்குபவர்:
பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன்
[முதல்வர், கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம்]

**விடயம்**
*''ஆங்கிலேயர் காலத்தில் வாழ்ந்த ஓர் இலட்சியவாதியும், ஒரு யதார்த்தவாதியும்''*

**நிறைவுரை :-**
செஞ்சொற்செல்வர் - திரு.ஆறு.திருமுருகன்
[உப அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி]

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

ஒறேற்றர் குடும்ப உறுப்பினர்கள். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
[41932][46-32-11-17] ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.


# வாகன விபத்தைத் தடுக்க பரிசோதகரின் ஆலோசனைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ்.குடாநாட்டில் மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்த வேண்டும் என்று மோட்டார் வாகனப் பரிசோதகர் எஸ்.குலஸ் கேட்டுள்ளார்.

அண்மைக்காலமாகக் குடாநாட்டில் அதிகரித்துவரும் விபத்துகள் தொடர்பாக அவரிடம் கருத்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் அதிகரித்துள்ள விபத்துகளால் ஏற்படும் உயிராபத்துகளைத் தடுப்பதற்கும் விபத்துக்களைக் குறைப்பதற்கும் வாகனப் பரிசோதகர் தெரிவித்த ஆலோசனைகள் வருமாறு:-

- வாகன சாரதிகள் ஒவ்வொருவரும் மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்தவேண்டும்.
- மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்வோர் தலைக்கவசம் அணிந்து அதற்குரிய பட்டியைச் சரியாக அணிந்து செல்லல் வேண்டும்.
- சந்திகளை அண்மிக்கும்போது வாகனங்களின் வேகத்தைக் குறைத்து சிக்னல் போட்டு இரண்டு கண்ணாடிகளிலும் இரு பக்கங்களையும் பார்த்து நிதானமாக வீதியைக் கடக்கவேண்டும்.
- வாகனம் செலுத்துவோர் வீதிகளில் தமக்குரிய பக்கத்தால் செல்லுதல் வேண்டும்.
- வாகனங்களில் செல்லும்போது ஒருவரை ஒருவர் முந்தியடித்துக்கொண்டு வேகமாகச் செல்லக்கூடாது.
- உங்களது வாகனத்தை இன்னொரு வாகனம் கடந்து செல்லும்போது அதற்கு வழிவிட்டுச்செல்லவேண்டும். (3-203-204)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வரணி மகா வித்தியாலய மாணவனும்
திரு திருமதி உதயகுமார் தம்பதியரின் புதல்வனுமாகிய

**செல்வன் பிரியங்கன்**

2005 இல் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 135 புள்ளிகளைப் பெற்ற சித்தி எய்தியமையையிட்டு அவரையும் அவரை வழிநடத்தி ஊக்குவித்த ஆசிரியர்களான செல்வி க.இரத்தினமலர், திரு.சி.பிரபாகரன் ஆகியோரையும் பாராட்டுவதுடன் நன்றி கூறி வாழ்த்துகிறோம்.

நாவற்காடு,
வரணி.
(41923)(46-11-17)
வாழ்த்துவோர்:- அப்பா,அம்மா, அக்காமார், அண்ணா, அப்பப்பா, அம்மப்பா குடும்பம், பெரியப்பா குடும்பம், சித்தப்பா குடும்பம்.



**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
**BY: BRITTO**

புதிய பிரிவு ஆரம்பம்:
செவ்வாய், வியாழன் வகுப்புகள்
நேரம் : மாலை 5.00 (புதிய நேரம்)
ஆரம்பம் : 27.10.2005
இடம் :கொக்குவில் ஞான பண்டிதா பாடசாலை அருகில்
(சி/45915)



# மருதனார்மடத்தில்



**ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி அவர்களின்**
**வாழும் கலைப் பயிற்சி**
**இன்று ஆரம்பம்**

இடம்:- இராமநாதன் கல்லூரி. கே.கே.எஸ். வீதி. மருதனார்மடம்.
பயிற்சி நாள்கள்:- 25.10.2005 முதல் 30.10.2005 வரை
பயிற்சி நேரம்: மாலை 6 மணி முதல் 8 மணி வரை
மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0776160214
*அன்பில் மலருங்கள்* *உங்களை உணருங்கள்*
*அனைவரும் வருக!*
www.artofliving.org www.srisriravishankar.org



# MBBS / MD

**BECOME A DOCTOR**

**Medical Degree (Doctor of Medicine MD) offered by**



**CRIMEA MEDICAL INSTITUTE**
**(CRIMEA STATE MEDICAL UNIVERSITY)**
**East EUROPE (Ukraine)**

**Recognized by the SRI LANKAN MEDICAL COUNCIL**

**M.B.B.S Degree Program (6 years)**
**Eligibility : G.C.E A/L passes in Biology Physics and Chemistry**

**Premedical Program + MBBS (7 years)**
**Eligibility : G.C.E O/L passes in All subjects including English, Maths and Science**

UKRAINE ஆனது கிழக்கு ஐரோப்பிய நாடென்பதால், UKRAINE STUDENT VISA உடையமாணவர்கள் ஐரோப்பாவில் உள்ள அண்டைநாடுகளாகிய Poland Romania, Austria, Italy, France, Spain, Germany, U.K, ஆகியநாடுகளுக்கு மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி நிமித்தம் சென்றுவருவதற்கான அரியவாய்ப்புண்டு.

# யாழ்ப்பாணத்தில்.......

30ஆம் திகதி (ஞாயிற்று கிழமை) எமது காரியாலய பிரதிநிதிகளை சந்தித்து சகல விபரங்களைப்பெற்றுக்கொள்வதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கலாம்

இடம் : **COSY Restaurant, 15 Sirampiadi Lane, (Stanley Road) Jaffna.**
நேரம் : 30ம் திகதி ஞாயிற்றுகிழமை-மாலை 3.30 pm - 6.30 pm

**Authorized Agents for Asian Region:**
**M/s. MAJU INDRA SDN BHD, Kuala Lumpur Malaysia.**

**Admissions Co-ordinated in Sri Lanka by**
Scholars Information Center,
2nd Floor, 'Colombo Plaza', 50, Galle Road, Wellawatta, Colombo - 06.
e-mail : peter@scholars-info.com **Tel: 0777-767818**

ஐரோப்பிய நாடொன்றிற்கு சட்டபூர்வமாக செல்வதற்கு அரியவாய்ப்பு


## பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.25

விசேட தேவை உள்ளவர்களுக்கு உதவி செய்வதற்கென புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார். (எ-204-203)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ்.சைவபரிபாலன சபை நடத்தும் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி வ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் கலந்துகொள்வார். (3-202)


# கண்ணீர் அஞ்சலி



*18.10.2005* அன்று அகாலமரணமான கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவனாகிய

**சிவஞானம் சிவகுமார்**

அவர்களின் திடீர் மறைவால் ஆழ்ந்த துயர் அடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

கோப்பாய் கிறிஸ்தவ
கல்லூரி. (41933)(46-11-17) **2001ஆம் வருட நண்பர்கள்.**



# 31ஆம் நாள் நினைவஞ்சலிகள்

தோற்றம் 05 - 06 - 1930



மறைவு 25 - 09 - 2005

**அமரர் சோமசுந்தரம் செல்வவிநாயகம்**

கடந்த 25-09-2005 சிவபதம் அடைந்த எமது கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரியர் அமரர் சோமசுந்தரம் செல்வவிநாயகம் அவர்களின் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்திற்கும் எமது ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சாந்தி! சாந்தி! சாந்தி!!!*

-கல்லூரிச் சமூகம்.

யா/சிதம்பரக்கல்லூரி,
வல்வெட்டித்துறை. (சி/45914)(46-11-17)



**உங்களுடைய வாக்குரிமையின் பெறுமதியை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? வாக்கினை தவறாக பிரயோகிப்பதால் உங்கள் மீதும், உங்கள் பிள்ளைகள் மீதும், நாட்டின் மீதும் அழிவையே கொண்டு வருகிறீர்கள். அறிவுபூர்வமாக சிந்தித்து வாக்களியுங்கள் சித்தாலேப வைத்தியருக்கு வாக்களியுங்கள்**

போரை முடிவிற்கு கொண்டு வருவார் விக்டர் ஹெட்டிகொட சின்னம் கோப்பை

S.V.H.

# விடுதலைப் புலிகள் மீதான பயணத் தடை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியத் தலைவருக்குக் கிளிநொச்சியிலிருந்து மகஜர்

கிளிநொச்சி,ஒக்.25

விடுதலைப் புலிகளின் பயணம் தொடர்பாக தாம் விதித்த தடையை ஐரோப்பிய யூனியன் மறுபரிசீலனை செய்யவேண்டும்.

- இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுவிடயமாக மேற்படி ஒன்றியம் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில்:-

இலங்கைத் தீவில் வாழும் தமிழ் பேசும் தேசிய இனமானது கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகச் சிங்களப் பேரினவாத அரசின் கீழ் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எமது அனைத்து அரசியல், சமூக, பொருளாதார, குடியியல் உரிமைகளும் முற்றாக மறுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் எமது இனத்தின் மீட்சிக்கான தலைமைத்துவமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளை நாம் பரிபூரணமாக ஏற்றுக் கொண்டுள்ளோம்.

எமது இனப்பிணக்கு வரலாற்றில் உயர் நாகரிக வழிமுறையான பேச்சுகள் மூலம் எமக்கான அரசியல் தீர்வினைப் பெற்றுக் கொள்ள பல தடவைகள் முயற்சித்தோம். அவ்வேளைகளில் எல்லாம் நாம் ஏமாற்றப்பட்டோம் - தோற்கடிக்கப்பட்டோம். எமது பூர்வீக நிலம் அரசினர் வன்பறிப்புக்குள்ளாக்கப்பட்டதுடன், தமிழ் மக்களின் சகல மனித குல மாண்புகளும் சிறப்புரிமைகளும் இல்லாது செய்யப்பட்டமையே எமது இனத்தின் மென்முறை அரசியல் தளங்களுக்குக் கிடைக்கப்பெற்ற பலாபலன்களாகும்.

ஸ்ரீலங்கா அரசின் இத்தகைய இன ஒடுக்கல் நடவடிக்கைகளால் விரக்தியுற்றுள்ள நிலையில் புறமார்க்கம் எதுவுமின்றி எமது இனம் ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டது. இத்தகைய போராட்டம் மூலம் பெற்றுக்கொண்ட தற்காப்புப் பலத்தை அடிப்படையாகக் கொண்டும், சர்வதேச சமூகத்தின் பெருவிருப்பிற்கும் - கருத்து நிலைப்பாட்டிற்கும் மதிப்பளித்து சமர்தான முயற்சிகளில் 2002ஆம் ஆண்டில் இருந்து ஈடுபட்டுள்ளோம். இதற்குப் புரிந்துணர்வு உடன்படிக்கை அடிப்படையாக அமைந்தது என்பதையும் தாங்கள் நன்கு நம்புவீர்கள் எனத் திடமாக நம்புகின்றோம்.

இத்தகைய சமாதான செயற்பாடுகளின் நம்பகத்தன்மைக்கும் நேர்மைத்தனத்திற்கும் எமது இனம் நம்பியது நோர்வே அனுசரணையாளர்கள் உள்ளிட்ட ஐரோப்பிய சமூகத்தினரையே என்பதைத் தவிர ஸ்ரீலங்கா அரசை அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்தச் சமாதான செயற்பாட்டுக் காலத்தில் எமது தீர்வு முயற்சிகளில் ஏற்பட்ட தடைகள், தாமதங்கள் ஏமாற்றுகள் இழுத்தடிப்புக்கான காரணியாக அமைந்தவர்கள் யார்? என்பதை நோர்வே அரசு நன்கு அறியும்.

சமத்துவமானதும், தேசிய இனங்களுக்குரிய அரசியல் தர்மத்தினையும் அடிப்படையாகக் கொண்டதுமான எமது இனத்தின் அபிலாசைகளை எய்துவதற்காக இந்தச் சமாதான காலத்தில் நாம் இழந்த போராளிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் ஏராளம். சமாதான செயல்முறைகளை இல்லாது செய்யும் மிகையான நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டபோதும் நாம் பொறுத்துள்ளோம். ஏனெனில், நாம் சர்வதேச சமூகம் மீது கொண்டுள்ள தார்மீக எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமேயாகும்.

எனவே, எமது இனத்தினுடைய ஆழ்மன அரசியல் விருப்பங்களுக்கு மதிப்பளித்துத் தேசிய இனங்களுக்கென சர்வதேச சமூகம் வழிகாட்டும் தீர்வினை எமக்குப் பெற்றுத்தர ஸ்ரீலங்கா அரசைத் தாங்கள் வழிப்படுத்த வேண்டும் என்றும் -

அரசியல் பாகுபாடற்ற வகையில் எம்மையும் எமது தலைமையான தமிழீழ விடுதலைப் புலிகளையும் தங்கள் சமூகம் வரவேற்று எமது இனத்திற்குரிய அரசியல் தீர்வினைப் பெற்றுத்தர தாங்கள் முனைப்புடன் செயற்படவேண்டும் என்றும் - கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது.(எ-301-201)

## வெள்ளம் வழிந்தோட கால்வாய் இல்லை!


கிளிநொச்சி,ஒக்.25

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் வெள்ளம் வழிந்தோடுவதற்கான கால்வாய்கள் இல்லாததால் பெரும் அசௌகரியம் எதிர்கொள்ளப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பெய்துவரும் மழையினால் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வெள்ளம் தேங்கி நிற்கின்றது என்றும் - அவை வழிந்தோடுவதற்குத் தேவையான கால்வாய்கள் இல்லாமையே இந்த நிலைக்குக் காரணம் என்றும் - வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, புதிதாகக் கால்வாய்களை அமைப்பதோடு தூர்ந்துபோயுள்ள கால்வாய்களையும் புனரமைத்துத் தருமாறு கரைச்சிப் பிரதேச சபையினரை வர்த்தகர்கள் கோரியுள்ளனர்.

(எ-305-202)



கண்டாவளைப் பிரதேச செயலர் செயலகத்தில் காலங்கடந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டன. ஓலைக் கொட்டகையில் அமைந்துள்ள கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் திரளாக நின்று மக்கள் தமது பதிவு வேலைகளை மேற்கொள்வதையும் -

பதிவுகள் மேற்கொள்ளும் வடமாகாண உதவிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் தலைமையிலான கண்டாவளைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம். (படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

## கரிப்பட்டமுறிப்பிலும் கட்டடம் திறக்கப்பட்டது

ஒட்டுசுட்டான்,ஒக்.25

முல்லைத்தீவு மாவட்டம், கரிப்பட்ட முறிப்புக் கிராமத்தில் உள்ள அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் புதிய கட்டடத் திறப்புவிழா கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் திருமதி த.ஜீவகுமார் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரைக் கரிப்பட்ட முறிப்பு தடைமுகாம் பொறுப்பாளர் கவி, கிராமப் பொறுப்பாளர் செந்தூரன் ஆகியோர் ஏற்ற, தமிழீழத் தேசியக்கொடியை மாங்குளம் பிரதேசப் பொறுப்பாளர் நாகமைந்தன் ஏற்றினார். தொடர்ந்து ஈகச்சுடரைத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ், உதவிக் கல்விப் பணிப்பாளர் நாதர், கிராம அலுவலர் சிதம்பரநாதன் ஆகியோர் ஏற்றினர்.

புதிய கட்டடத்தை வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். (9-341)

# வவுனியா எழுச்சி நிகழ்வை சிறப்புற நடத்த ஏற்பாடு

ஒட்டுசுட்டான்,ஒக்.25

வவுனியா பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக எதிர்வரும் 27ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள தமிழ்த்தேசிய எழுச்சிநாளை சிறப்புற நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, இதுவிடயமாக பல்வேறு அமைப்புகளுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருவதுடன், வீடுவீடாகச் சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான பிரசாரங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் - இதுதொடர்பாக வவுனியா கல்விச் சமூகத்துடன் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் கடந்த 17ஆம் திகதி புளியங்குளம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

அன்றையதினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற கலந்துரையாடலில் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ஆகிய கல்வி வலயங்களின் கோட்டக் கல்வி அலுவலர்கள், அதிபர்கள் உட்படச் சுமார் 200 பேர் கலந்துகொண்டனர்.

பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்ற கலந்துரையாடலில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய பயிலுநர்கள், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அலை தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா, வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

(எ-202-341)

# காதுகளைத் துப்புரவுசெய்ய பருத்தித்துணிகளைப் பயன்படுத்துக!

## தமிழீழ சுகாதார சேவை அறிவுறுத்து

கிளிநொச்சி,ஒக்.25

காதுகளைத் துப்புரவுசெய்வதற்கு மென்மையான பருத்தித்துணிகளைப் பயன்படுத்துமாறு தமிழீழ சுகாதார சேவையின் நடுவப் பணியகம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இதுவிடயமாக நடுவப் பணியகம் விடுத்த செய்திக் குறிப்பில் -

காதுகளைத் துப்புரவுசெய்வதற்குப் பொதுமக்களால் பயன்படுத்தப்படும் காதுக்குத்திகள்மற்றும்துடைப்பான்கள்(Ear Buds) காதிற்குத் தீங்கு விளைவிக்கின்றன என்று விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே, காதுக்குத்திகளின்பாவனையை நிறுத்தி மென்மையான பருத்தித்துணிகளைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்று அதில் உள்ளது. (எ-202)

# முத்தையன்கட்டு பாடசாலையில் வகுப்பறைக் கட்டடங்கள் திறப்பு

ஒட்டுசுட்டான்,ஒக்.25

முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலையில் 'நிக்கொட்' நிறுவன நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடங்கள் வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கடந்த புதன்கிழமை பாடசாலை அதிபர் க.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றினார். பாடசாலைக் கொடியை அதிபரும், சாரணர் கொடியைச் சாரணர் தலைவரும் ஏற்றினர்.

தொடர்ந்து கட்டடங்கள் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டன.

அதிபர் அறையைத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ரி.குரூஸ் நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

நூலகத்தை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தனும் ஆய்வுகூட அறையை உதவிக்கல்விப் பணிப்பாளர் சு.பரந்தாமனும் வகுப்பறைக் கட்டடத்தை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் சுபாஜினி கந்தையாவும் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தனர். (9-341-204)

ஒக்டோபர் - வாசிப்பு மாதம் வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!

எமது மண்ணுக்கான கல்வியை கண்டடைதல்

வாசியுங்கள்!

ஆசிரியர்களுக்கான மாத இதழ்

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

வருடச் சந்தா ரூ.300 மட்டுமே

தொடர்புகளுக்கு: இல.3, டொறிங்ரன் அவனியு, கொழும்பு 07. தொலைபேசி:011 2506272

## மீன்பிடி வள்ளம் கொள்வனவு செய்ய நிதி

நவாலி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஐ.நா.அபி விருத்தித் திட்ட நிறுவனம் நாலரை லட்சம் ரூபா நிதியினை வழங்கியுள்ளது. இந்த நிதி கடற்றொழிலாளர்கள் வள்ளம், மீன்பிடி இயந்திரம், வலைகள் என்பனவற்றைக் கொள்வனவு செய்வதற்கென கடனாக வழங்கப்படவுள்ளது என்று சங்கத் தலைவர் க.தருமகுலசிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை - காக்கைதீவு இறங்குதுறையையும் இங்குள்ள தங்குமிடத்தையும் புனரமைப்புச் செய்வதற்கும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒன்றரை லட்சம் ரூபா தமது சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது- என்றும் அவர் மேலும் கூறினார். (எ-100)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் குணதாசன் இராகவன்
*(யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்)*

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2005 இல் 126 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த செல்வன் கு.இராகவனைப் பாராட்டி வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.

(41908)(46-45-34)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் 07.10.2005 அன்று நடைபெற்ற 24ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் வரணி மகாவித்தியாலய பொருளியல் ஆசிரியர்

**திரு.வீரகத்தி குமாரவேற்பிள்ளை**

*B.A (HONS), P.G DiP.in.Edu.,M.Ed.*

அவர்கள் கல்வி முதுமாணிப் பட்டம் - M.Ed. பெற்றதையிட்டு, அவரை வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

**சக ஆசிரிய நண்பர்கள்.**

வரணி. (41907)(46-17-45)

## உள்ளூராட்சி வார போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட பொதுஅறிவுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு உள்ளூராட்சி வார விழாவின் போது பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன என ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் ஏ.கணேசானந்தராஜா தெரிவித்தார். போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**கீழ்ப்பிரிவு:-** ர.சயந்தா (கரம்பன் சண்முகநாதன் மகா வித்தியாலயம்), ச.ராகவன் (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி), த.வித்தியாதரன் (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி).

**மத்தியபிரிவு:-** ம.மேரிடிசானி (ஊர்காவற்றுறை சென் மேரிஸ் வித்தியாலயம்), வி.பாலேந்திரன் (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி), ம.மரின் தர்மிகா (ஊர்காவற்றுறை சென் மேரிஸ் வித்தியாலயம்).

**மேற்பிரிவு:-** அ.மேரிகொன்செப்ரா (ஊர்காவற்றுறை சென்மேரிஸ் வித்தியாலயம்), கீ.சுரேஸ் காரைநகர் (யாழ்ற்ரன் கல்லூரி), பு.சயந்தன் (கரம்பன் சண்முகநாதன் மகாவித்தியாலயம்). (203-16)

## சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை

பருத்தித்துறை அரசினர் ஆயுள்வேத மத்திய மருந்தகத்தை வாரத்தில் நான்கு தினங்கள் பருத்தித்துறை நகரிலும்-

ஏனைய இருதினங்கள் தம்பசிட்டியிலும் இயங்க வைக்க வேண்டும் என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரனும் வடக்கு-கிழக்கு மாகாண சுதேச வைத்தியப் பணிப்பாளர் டாக்டர் இ.தர்மராசாவிடம் கோரியுள்ளனர். மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்தினால் அண்மையில் பருத்தித்துறையில் ஆரம்பிக்கப்பட்ட ஆயுள்வேத மத்திய மருந்தகம் ஒருசில தினங் களில் தம்பசிட்டிக்கு மாற்றப்பட்டது. இதனை ஆட்சேபித்து நகரமக்கள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்திடமும் பருத் தித்துறைப் பிரதேச செயலர் இ. வரதீஸ்வரனும் புகார் செய்திருந்தனர். இது தொடர்பாக அவர்கள் பொது மக்களையும் பொது அமைப்புகளையும் அழைத்து கருத்துகளைக் கேட்டறிந்ததுடன் மேற்கண்ட வேண்டுகோளை மாகாண சுதேச வைத்தியப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ளனர். (எ-173)

## உளமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய மாணவன்

**கி.ஞானராசா.கபிலன்**

அவர்கள் 2005 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவரை மென்மேலும் பல்கலையும் பெற்று வாழ்வில் உயர்ந்திட பாராட்டி வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அன்பு மாமா குடும்பத்தினர்.
(சிறி)

"துவாரகை"
நெடுந்தீவு 1

(41859)(51-)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*வரணி இடைக்குறிச்சி, ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவி*

**செல்வி பாலசுந்தரம் கௌசனா**

2005ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 141 புள்ளிகளைப்பெற்று சித்தியெய்தியமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவருக்கு கற்பித்து ஊக்கமளித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் தனியார் கல்வி நிலைய ஆசிரியை திருமதி கிருபாலினி அவர்களுக்கும் பாராட்டும் நன்றியும் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இவர் கல்வியில் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

வரணி வடக்கு,
வரணி.

அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பம்மா,
மாமா, தேவு சித்தப்பா குடும்பத்தினர்,
ரவி சித்தப்பா குடும்பத்தினர்.

(41887)(46-45-34)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு. சோமசுந்தரம் சசிகரன்**



*(B.Sc.With Ed.)*

எமது கல்லூரி ஆசிரியர்
**திரு. சோமசுந்தரம் சசிகரன்**
யாழ்.பல்கலைக்கழகத்தில் 07.10.2005 இல் நடைபெற்ற 24ஆவது பட்டமளிப்பு விழாவில் (***B.Sc.With Education***) பட்டம் பெற்றதையிட்டு அவரை வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.**

(41885)(46-45-34)

Norwegian People's Aid | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH | solidar An INGO consortium including NPA, SAH and ASB

## கூறுவிலை கோரல்

செம்பியன்பற்று வடக்கிலேயோ அல்லது வத்திராயனிலேயோ (வடமராட்சி கிழக்கு) சுனாமியால் அழிக்கப்பட்ட வீடுகளை மீளப் புனரமைத்தல்

ஏ.எஸ்.பி. என்.பி.ஏ. மற்றும் எஸ்.ஏ.எச். ஆகிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமாகிய சொலிடாரினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செம்பியன்பற்று வடக்கிலும் வத்திராயனிலும் சேதமாக்கப்பட்ட வீடுகளை மீண்டும் புனரமைப்பதற்காக சீல்வைக்கப்பட்ட கூறுவிலைப் பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறீர்கள். பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் 20 தொடக்கம் 50 வீடுகள் தத்தமது தராதரத்துக்கும் தகுதிக்கும் ஏற்றவாறு கட்ட விரும்புவோரை இதில் பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஒப்பந்தகாரர்கள் கூறுவிலைப் பத்திரங்களையும் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் கீழ்க்காணும் முகவரியில் ரூபா 3000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி கூறுவிலை விண்ணப்பப்படிவங்களும் ஆவணங்களும் 26.10.2005 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

**Solidar / ASB Construction Office**
**160, Mile Post,**
**Farm Point,**
**A-9 Road,**
**Paranthan.**
**தொலைபேசி:021 228 5147**

(சி/45860) (24-26-11-19)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



வி.ஜோன்ரில்லர்
B.B.A (HONS)
HRM Spl.HNDA.



ந.கரன்
*அரசியல் சிறப்புக்கலை*
B.A (HONS)



மா.மனோகரர்
B.F.A (HONS)



பொ.தயாகாந்தி
B.B.A

06.10.2005 வியாழக்கிழமை, 07.10.2005 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற இவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
மோகனதாஸ் சனசமூக நிலையம்,
மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

(41903)(46-45-34)



இன்று (25.10.2005)

# மகா சக்தி பெஷன்



தனது முதலாவது வருட சேவையில் அநேக வாடிக்கையாளர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு மகத்தான சேவையாற்றி இப்போது இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது, என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். தீபாவளியை முன்னிட்டு சகல புடவைத் தினுசுகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும் என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

**மகா சக்தி பெஷன்**

இல.(14) 333/2, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

# முகமாலையில் படையினரைப் பின் நகர்த்தி வாக்களிப்பு நிலையம் அமைக்க ஏற்பாடு

## யாழ். செயலகக் கூட்டத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஒக்.25

வன்னிப் பிரதேச வாக்காளர்களுக்கான கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் முக மாலைச் சோதனை நிலையத்தின் வடக்குப் பக்கமாகப் படையினரைப் பின்நகர்த்தி அமைக்கப்படவிருக்கின்றன.

யாழ். செயலகத்தில் கடந்த வெள்ளிக் கிழமை நடந்த தேர்தல் தொடர்பான கூட்டத் தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தலை மையில் நடந்த இக்கூட்டத்தில் படை அதி காரிகள், தேர்தல் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

முகமாலையில் வாக்களிப்பு நிலையம் அமைத்தல், பாதுகாப்பு ஆகியன தொடர் பாக ஆராயப்பட்டது.

இக்கூட்டம் தொடர்பாகத் தெரிவத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமான கே. கணேஷ் தெரிவித்ததாவது:-

முகமாலைப் பிரதேசத்தில் 103 வாக்க ளிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இவற்றை எந்தெந்த இடங்களில் அமைப்பது என்று நேரடியாகச் சென்று பார்த்த பின்னரே தீர்மானிக்கவேண்டும்.

வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப் படவுள்ள இடங்களைப் பார்வையிடுவதற்கு எதிர்வரும் முதலாம் திகதியன்று நாங்கள் முகமாலை செல்லவுள்ளோம்.

உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாகவே வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வுள்ளன.

வாக்காளர்கள் சீராக வாக்களிப்புகளை மேற்கொள்வதற்கு அவர்களுக்குத் தேவை யான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக் கப்படும்.

வாக்களிக்கச் செல்பவர்கள் பைகள், குடை கள் எனப் பல்வேறு பொருள்களைக் கை களில் எடுத்துச் செல்வதால் வாக்குச் சாவடி களில் பெரும் நெருக்கடிகள் ஏற்படும்.

எனவே, அவற்றைத் தவிர்த்துக்கொள் வது நல்லது. அத்துடன், வாக்களிக்கச் செல் லும்போது சிறுவர்களைத் தம்முடன் அழைத் துச் செல்வதையும் தவிர்க்கவேண்டும் - என் றார் அவர். (3-203)

## சைக்கிள்கள் அன்பளிப்பு

வலி.மேற்கு,ஒக்.25

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குடும்பங்களின் அங்கத்தவர்களுக்குத் துவிச் சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப் படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸ் மேற் கொண்டுள்ளார்.

உலக தரிசன நிறுவனத்தின் உதவியுடன் 100 ஆண்களுக்கான துவிச்சக்கரவண்டி களும் 25 பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி களும் வழங்கப்படவுள்ளன.

சுழிபுரம், மூளாய், பொன்னாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட வருமானம் குறைந்த மீனவக் குடும்பங்களின் அங்கத்தவர்களுக்கே இந் தத் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள் ளன. (9-175)



சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் மங்கள விளக்கேற்றுவதையும் கட்டடத்திற்கான அடிக்கல்லை ஜப்பான் நாட்டு எவ்.ஆர்.டி..ஆர். நிறுவனப் பிரதிநிதி எம்.கே.கொயாமா நடுவதையும் விழாவில் கலந்துகொண்ட திணைக்களத் தலைவர்கள், பொதுமக்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரிச் செய்தியாளர்)

## கதிரைகள் அன்பளிப்பு

சாவகச்சேரி,ஒக்.25

சாவகச்சேரி தேவாலய வீதியைச் சேர்ந்த நாகசுந்தரம் நாகராஜன் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு 25 பிளாஸ்ரிக் கதிரை களை அன்பளிப்பாக வழங்கினார்.

இந்தக் கதிரைகள் மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரியிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வைத்தியசாலை அபிவிருத் திச் சபையினர் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர். (3-31)

# ஆழிப்பேரலையால் உயிரிழந்த ஊழியர்களின் பிள்ளைகளுக்கு உதவி

## தொழில் அமைச்சு வழங்கியது

யாழ்ப்பாணம்,ஒக்.25

ஆழிப்பேரலையின்போது உயிரிழந்த வடக்கு - கிழக்கைச் சேர்ந்த ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களின் ஆறு பிள்ளைகளுக்குப் புல மைப்பரிசில் மற்றும் பாடசாலை உபகரணங் கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சசிதரன், ஆறுமுகம் தர்சினி, முல்லை மாவட்டத் தைச் சேர்ந்த என்.பிருந்தாபன், என்.சாகரன், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பி.லுக் ஷான், பி.ஷிரோமிகா ஆகியோர் பரிசில் களைப் பெற்றுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட 60 பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இப்பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்புத் தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. தொழில்சார் அமைச்சின்கீழ் இயங்கும் 'சிரம வாசனா' நிதியச் சபையினால் இந்த உதவி வழங்கப்பட் டுள்ளது. (3-9-ரி)

## அதிபர் வெற்றிடம்

வலி.தெற்கு,ஒக்.25

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை அதி பர் பதவிக்குப் பொருத்தமானவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.

இலங்கை அதிபர் சேவை தரம் 1, தரம் 2:1, தரம் 2:2 (பட்டதாரிகள்), இலங்கை ஆசி ரியர் சேவை தரம் 1, தரம் 2:1, தரம் 2:2 (பட்ட தாரிகள்) ஆகியோர் இப்பதவிக்கு விண் ணப்பிக்கமுடியும்.

விண்ணப்ப மாதிரிப் படிவத்தை வலி காமம் கல்வி அலுவலகத்தில் பார்வை யிட்டு அதற்கமைவாக விண்ணப்பங்களை இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்பாக உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்தில் சேர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப் பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஒ-152)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# யாழ். - காரைநகர் பஸ்ஸில் திருட்டுகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து நவாலியூடாகக் காரை நகர் செல்லும் 786ஆம் இலக்க பஸ்ஸில் திரு டர்களின் கைவரிசை அதிகரித்து வருவதாகப் பிரயாணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் நவாலியைச் சேர்ந்த இராசம்மா என்பவர் தங்கச் சங்கிலியை அணிந்து கொண்டு வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்குச் சென்றுவிட்டு அங்கிருந்து வீடு செல்வதற்காக 786ஆம் இலக்க பஸ்ஸில் ஏறியுள்ளார். அந்த பஸ் ஒரு வாசலையுடைய சிறிய பஸ்ஸாக இருந்ததினால் சனநெரிசலும் அதிகரித்துக் காணப்பட்டதாம். இதனால், ஒரு கையில் பொருள்களையும் மறுகையால் பஸ்ஸின் கம்பி யையும் பிடித்தவண்ணம் பிரயாணம் செய் துள்ளார்.

தமது வீட்டுக்குச் சமீபமாக பஸ் வந்தும் அதனை நிறுத்தி இறங்கியவுடன் தனது கழுத் தைத் தடவிப் பார்த்துள்ளார். 5 பவுண் நிறை யுடைய தங்கச் சங்கிலியைக் காணாததால் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளார்.

இதேபோன்று அண்மையில் வட்டுக்கோட் டையைச் சேர்ந்த நபர் ஒருவரின் இருபதினா யிரம் ரூபா பணமும் மற்றொரு நபரின் பன் னிரண்டு ஆயிரம் ரூபா பணமும் இன்னொரு பெண்ணின் தாலிக்கொடியுமாகப் பல திருட்டு கள் தந்திரமாக இடம்பெற்று வருகின்றதாம்.

இதனால், இந்த பஸ் வண்டியில் பிரயாணம் செய்பவர்கள் மிகவும் அச்சத்துடன் செல்ல வேண்டியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்ற னர். (3-100)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.25

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை ரீதியான முடிவுகள் உதயனில் தொடர்ந்து வெளிவருகின்றன.

மேலும் சில பாடசாலை முடிவுகள் வரு மாறு:-

**யாழ்.சென்.ஜேம்ஸ் ம.வி.**

டி.வி.அருந்தவராஜ் (125).

**புங்குடுதீவு மகாவித்தியாலயம்**

றொபின் றொசானந்தினி (150).

**புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியம் மகளிர் வித்தி.**

நடேசலிங்கம் கீர்த்தனா (131).

**பன்னாகம் மெய்கண்டான்**

உ.ரகுராஜன் (142), ஜெ.துவாரகன் (137), சி.சர்மிலன் (137), வ.விதுஷன் (129).

**யாழ்.வண்.ஸ்ரீவைத்திலிங்கம் வித்தி.**

அ.சஞ்ஜீவன் (143), அ.ஜிந்துஷன் (133), ம.ராஜினி (128).

**கோண்டாவில் இந்து ம.வி.**

தி.யதுர்சன் (161), அ.குருநந்தன் (142), ர.ருக்ஸ்மன் (125), கி.விபுனா (126), பா.வைஷ்ணவி (129), ல.எழிலரசி (134), நா.நதியா (134).

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

பி.தர்சிகா (160), எஸ்.சிவதர்சிகா (154), ஏ.அனோஜா (149), எஸ்.திவ்யா (146), எஸ்.வாகினி (149), ரி.விதுஷனா (126), ரி.கௌதமி (124), எஸ்.சஜீதா (132), எஸ்.பகீரதி (125), எஸ்.கிருசாந்தினி (130), என்.துஷிகா (138).

**புற்றாளை ம.வி.**

ஆர்.சத்தியன் (138), எஸ்.வாகினி (149).

**வல்வை மகளிர்**

**தொண்டைமானாறு வீரகத்தி வித்தி.**

பி.கீர்த்தனன் (128).

**தும்பளை சிவப்பிரகாசா ம.வி.**

ரி.சனுஜன் (168), ரி.மயூரதி (124), சி.எழவேணி (129), ஏ.ஜெனித்தா (124), எம்.மாதுரி (128), என்.சுகனேசன் (129), எஸ்.நிவேதன் (145), எஸ்.கோபிசங்கர் (127), யு.பானுஜன் (145), ஆர்.டிவாகர் (136), ஜி.வை.கிருத்திகா (129), சி.அங்கவை (137).

**சென்.தோமஸ் றோ.க.**

ஜெஸ்லின் நித்தியராணி சேவியர் (124).

**பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி.**

எஸ்.வைகுந்தன் (133), எஸ்.வசீகரன் (133).

**வல்வை சிவகுரு வித்தி.**

எஸ்.கபிலன் (143), கே.லாவன்னியா (132). (ஒ-12-70-28-51)

## உடுவிலில் சைவத்திருமுறை விழா

வலி. தெற்கு,ஒக்.25

வருடம்தோறும் நடைபெற்றுவரும் உடு வில் கோட்ட சைவத்திருமுறை விழா எதிர் வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை மன் னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் நடைபெறும் என உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேர நாதன் தெரிவித்துள்ளார்.

சைவத்திருமுறை விழா தொடர்பாக பாட சாலை மாணவர்களிடையே போட்டிகளை நடத்தி முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களின் விவரங்களை அறிவிக்குமாறு அவர் பாடசாலை அதிபர்களைப் பணித்துள்ளார்.

சைவசமயத் தொண்டுபடும் செயன்முறை, நீதிச் செய்யுள் மனன முற்றோதல், திருமுறைப் பண்ணிசை, கதாப்பிரசங்கம், புராணபடனம் போன்ற பல போட்டிகள் நடைபெறவுள்ளன.

புராணபடனம், கதாப்பிரசங்கம், சைவ சமய அறிவு வினாவிடைப்போட்டி என்பன திறந்தநிலைப் போட்டிகளாக அமையும்.

போட்டிகள் யாவும் ஆண்களுக்கும் பெண் களுக்கும் எனத் தனித்தனியாக நடைபெறும்.

பாடசாலைப் போட்டிகளில் முதல் இடம் பெறுபவர்கள் கோட்டமட்டப் போட்டியில் பங்கு பற்றலாம். கோட்டமட்டப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. அப்போட்டிகள் தொடர்ந்து நான்கு தினங்கள் இடம்பெறும். (3-152)

## கணனி நிறுவனப் பட்டமளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.25

'ஐ.ஐ.எஸ். சிற்றி கம்பனின்' எச்.என்.டி. மாணவர்களுக்கான முதலாவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். பரியோ வான் கல்லூரியின் யூபிலி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

சிற்றி கம்பஸ் இயக்குநர் கே.விக்னேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழா விற்குப் பிரதம விருந்தினராக 'எடக்ஸெல்' நிறுவனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக் கான முகாமையாளர் இசான் சிடிகியூ கலந்து கொள்ளவுள்ளார்.

நிறுவனத்தில் எச்.என்.டி கற்கைநெறி யைப் பூர்த்திசெய்து சிறப்புத் தேர்ச்சி பெற்ற தே.வாசீசன், த.மேனராஜ், பே.ச.நிருஷன் ஆகி யோருக்கு இந்தப் பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருதுகள் வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-202)



தென்மராட்சி தனங்களப்பு வயல்வெளிப் பகுதியில் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட ஒரு தொகுதி வயல் நிலப்பரப்பு தொடர்பான அறிக்கையை படையினரின் மிதிவெடி அகற்றும் பிரிவின் மாவட் டப் பொறுப்பதிகாரி மேஜர் கமகே தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.சிறீனிவாசனிடம் கையளிப் பதைப் படத்தில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரிச் செய்தியாளர்)

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு

தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புப் பெறவுள்ள மேலும் 5 ஆயிரத்து 800 பேரின் பெயர்களைத் தமிழீழ விடு தலைப் புலிகளின் நிதித்துறையினர் வெளியிட்டுள் ளனர். யாழ். உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவு செய் யப்பட்ட வர்களில் எஞ்சியோரின் பெயர்களும் நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவானோரில் ஒரு பகுதியினரின் பெயர்களும் வருமாறு:-

313யா/யா/6071 திருமதி. கிரிஸ்தீன்னம்மா இன்பநாதன்
314யா/யா/6079 திருமதி. இராசம்மா கருப்பையா
315யா/யா/6115 திருமதி. அன்னம்மா மலக்கியாஸ்
316யா/யா/6161 திரு. ஜோன் அலோசியஸ் ராஜரட்ணம்
317யா/யா/6220 திரு. கனகரத்தினா
அலோசியஸ்ஜெயராஜ்
318யா/யா/6228 திருமதி. நாகரத்தினம் சின்னத்துரை
319யா/யா/6237 திரு. நாகமணி தம்பிராசா
320யா/யா/626 திரு. இராசையா திலகராசா
321யா/யா/6268 திருமதி. கிறிஸ்டபெல்
அன்புமணி மகேசன்
322யா/யா/6281 திருமதி. தங்கரெத்தினம் பத்மநாதன்
323யா/யா/6345 திருமதி. அன்னம்மா யோசேப்
324யா/யா/6405 செல்வி. பொன்னம்மா சிதம்பரநாதர்
325யா/யா/6433 திருமதி. லில்லி மேரியம்மா
பாக்கியநாதன்
326யா/யா/6464 திருமதி. மகேஸ்வரி செல்வராசா
327யா/யா/6468 திரு. கந்தையா குமாரகுலசிங்கம்
328யா/யா/6473 திருமதி. அன்னலட்சுமி கணேசன்
329யா/யா/6479 திரு. பெஞ்சமின் குணரட்ணம்
330யா/யா/6538 திருமதி. மகேஸ்வரி பரமநாதன்
331யா/யா/6539 திரு. முத்துக்குமாரசுவாமிஐயர்
சந்திரகலாதரசர்மா
332யா/யா/6550 திருமதி. சின்னப்பிள்ளை ஜோசப்
333யா/யா/6557 திருமதி. சிவமணி நல்லையா
334யா/யா/6606 திரு. ஐயன் பிச்சன்

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு

1யா/ந/20 திரு. தம்பு லோகநாதபிள்ளை
2யா/ந/44 திருமதி. சீத்தாலக்சுமி
சுப்பிரமணியசிவம்
3யா/ந/68 திருமதி. விசாலாட்சி குகதாசன்
4யா/ந/93 திரு. கந்தப்பிள்ளை கோபாலசிங்கம்
5யா/ந/96 திரு. வைத்திலிங்கம்
கோபாலகிருஷ்ணா
6யா/ந/104 திரு. பொன்னையா கனகலிங்கம்
7யா/ந/113 திரு. முருகேசு நவரத்தினராசா
8யா/ந/124 திரு. தியாகராசா பரமநாதன்
9யா/ந/141 திரு. முருகேசு சந்திரசேகரம்
10யா/ந/175 திருமதி. கண்மணி நல்லையா
11யா/ந/179 திரு. முருகன் கந்தையா
12யா/ந/201 திரு. கந்தையா சந்திரசேகரம்
13யா/ந/217 திருமதி. தவமணி கணேசமூர்த்தி
14யா/ந/272 திரு. மாணிக்கம் இரத்தினம்
15யா/ந/282 திரு. கனகமணி சிவலிங்கம்
16யா/ந/293 திரு. இராசையா சந்திரசேகரம்
17யா/ந/313 திரு. துரைராசா பாலசுந்தரம்
18யா/ந/315 திரு. சுப்பையாபிள்ளை பாலகிருஷ்ணன்
19யா/ந/325 திரு. அம்பலவாணர் கனகசபை
20யா/ந/357 திரு. பொன்னையா நல்லையா
21யா/ந/358 திருமதி. நாகம்மா சுப்பிரமணியம்
22யா/ந/370 திரு. சின்னையா பஞ்சலிங்கம்
23யா/ந/456 திரு. கனகரத்தினம் வேலாயுதபிள்ளை
24யா/ந/485 திரு. சோமசுந்தரம் கங்காதரன்
25யா/ந/505 திரு. ஐயாத்துரை பத்மநாதன்
26யா/ந/519 திரு. செல்வவிநாயகமூர்த்தி சிவலிங்கம்
27யா/ந/528 திரு. பொன்னுத்துரை சண்முகராஜா
28யா/ந/549 திரு. இரத்தினசபாபதிஐயர்
வெங்கடேசஐயர்
29யா/ந/585 திரு. வைத்திலிங்கம் நல்லையா
30யா/ந/639 திருமதி. புனிதவதி திருநாவுக்கரசு
31யா/ந/644 திரு. செல்லையா தில்லைநாதன்
32யா/ந/681 திரு. நாகலிங்கம் குணலிங்கம்
33யா/ந/697 திருமதி. கமலாம்பிகை பரமநாதன்
34யா/ந/698 திரு. கந்தையா குமாரசாமி
35யா/ந/703 திரு. பொன்னுத்துரை குமாரகுலசிங்கம்
36யா/ந/710 திருமதி. இராசலட்சுமி குணரட்ணம்
37யா/ந/730 திரு. சிவசோதி முத்துக்குமாரு
38யா/ந/739 திருமதி. தைரியலட்சுமி நடராசா
39யா/ந/759 திரு. கணபதிப்பிள்ளை நவரத்தினம்
40யா/ந/766 திரு. இரத்தினசிங்கம் பத்மநாதன்
41யா/ந/777 திருமதி. புவனேஸ்வரி மயிலானந்தன்
42யா/ந/797 திருமதி. இராஜேஸ்வரி நவரத்தினம்
43யா/ந/812 திரு. தம்பியப்பா சபாநாதன்
44யா/ந/833 திரு. பரமேஸ்வரக்குருக்கள்
சோமாஸ்கந்தக்குருக்கள்
45யா/ந/834 திரு. தம்பு செல்லத்துரை
46யா/ந/870 திரு. துரையப்பா தியாகராசா
47யா/ந/879 திரு. கனகரெத்தினம் தெட்ஷணாமூர்த்தி
48யா/ந/933 திரு. கணபதிப்பிள்ளை குணசிங்கம்
49யா/ந/942 திரு. இராமலிங்கம் குமாரு
50யா/ந/945 திருமதி. விஜயராணி கந்தசாமி
51யா/ந/955 திரு. செல்லையா கோடீசுவரன்
52யா/ந/965 திரு. முத்துக்குமாரு லோகமாணிய
திலகன்
53யா/ந/971 திரு. அப்பாக்குட்டி மகேந்திரன்
54யா/ந/975 திரு. மயில்வாகனம் முருகையா
55யா/ந/1039 திரு. பழனித்துரை சிவலிங்கம்
56யா/ந/1066 திரு. செல்வரத்தினம் சிவன்தாசன்
57யா/ந/1096 திரு. இரர்ஜரட்ணம் திருச்செல்வம்
58யா/ந/1131 திருமதி. பகவதி சண்முகராஜா
59யா/ந/1139 திருமதி. இராமநாதன் ஞானம்பிகை
60யா/ந/1148 திருமதி. இராசமணி கனகசிங்கம்
61யா/ந/1189 திரு. பழனி மார்க்கண்டு
62யா/ந/1206 திரு. சின்னப்பு நடேசபிள்ளை
63யா/ந/1221 திரு. சண்முகம் பரமேஸ்வரன்
64யா/ந/1333 திருமதி. பூமணி கதிர்காமத்தம்பி
65யா/ந/1334 திருமதி. பொன்னம்மா பொன்னுத்துரை
66யா/ந/1355 திரு. பொன்னுத்துரை தனபாலசிங்கம்
67யா/ந/1358 திரு. நாகலிங்கம் துரைசிங்கம்
68யா/ந/1364 திரு. செல்லப்பா வல்லிபுரம்
69யா/ந/1376 திருமதி. கனகம்மா கனகசபை
70யா/ந/1385 திரு. சண்முகம் இராமநாதன்
71யா/ந/1413 திருமதி. மனோன்மணி சண்முகவேல்
72யா/ந/1456 திரு. குப்புசாமி நாகப்பு
73யா/ந/1516 திருமதி. மகேஸ்வரி வேலாயுதபிள்ளை
74யா/ந/1520 திரு. அய்யாத்துரை நாகரத்தினம்
75யா/ந/1530 திரு. செல்லையா இராசலிங்கம்
76யா/ந/1531 திரு. கந்தையா சண்முகசுந்தரம்
77யா/ந/1569 திரு. செல்லையா பாலசுப்பிரமணியம்
78யா/ந/1584 திரு. சிவசம்பு கந்தசாமி
79யா/ந/1588 திரு. சங்கரி கந்தசாமி
80யா/ந/1601 திரு. செல்வராசா மகாலிங்கம்
81யா/ந/1620 திருமதி. மங்களேஸ்வரி கதிரவேல்
82யா/ந/1640 திரு. முருகப்பா பழனியப்பன்
83யா/ந/1645 திருமதி. புனிதசீலி பரமேஸ்வரன்
84யா/ந/1648 திருமதி. பார்வதி நடராசா
85யா/ந/1662 திருமதி. கெங்காதேவி இரத்தினசிங்கம்
86யா/ந/1682 திரு. சுப்பிரமணியம் சற்குணம்
87யா/ந/1685 திருமதி. சொர்ணபவானி
சண்முகலிங்கம்
88யா/ந/1728 திரு. குமாரசாமி தர்மலிங்கம்
89யா/ந/1737 திரு. ஏகாம்பரம் தெய்வேந்திரராசா
90யா/ந/1748 திரு. ஐயாத்துரை வேலாயுதபிள்ளை
91யா/ந/1805 திருமதி. இரத்தினம் நல்லையா
92யா/ந/1810 திரு. வல்லிபுரம் இரத்தினசபாபதி
93யா/ந/1925 திரு. சுந்தரம் முத்தையா
94யா/ந/1946 திரு. கந்தையா நாகராசா
95யா/ந/1963 திரு. நடராசா பத்மநாதன்
96யா/ந/1972 திருமதி. பரமேஸ்வரி கனகசுந்தரம்
97யா/ந/1978 திரு. கந்தையா பேரம்பலம்
98யா/ந/1983 திரு. வல்லிபுரம் பொன்னுச்சாமி
99யா/ந/2045 திரு. இரத்தினசபாபதிக்குருக்கள்
சந்தானகோபாலசர்மா
100யா/ந/2046 திருமதி. சரஸ்வதி தம்பிராஜா
101யா/ந/2052 திரு. நடராசா சச்சிதானந்தன்
102யா/ந/2109 திரு. பொன்னு வைத்திலிங்கம்
103யா/ந/2114 திரு. பொன்னுத்துரை அன்ரனிப்பிள்ளை
104யா/ந/2117 திரு. கந்தையா அன்னலிங்கம்
105யா/ந/2152 திருமதி. கனகம்மா நல்லையா
106யா/ந/2166 திரு. நடராசா கந்தசாமி
107யா/ந/2167 திரு. ஆறுமுகம் கந்தையா
108யா/ந/2172 திருமதி. கண்மணி தவரத்தினம்
109யா/ந/2181 திரு. நாகலிங்கம் குணசிங்கம்
110யா/ந/2189 திரு. சுப்பிரமணியம் லோகதாசன்
111யா/ந/2197 திரு. இரத்தினராசா மகேஸ்வரன்
112யா/ந/2199 திரு. இராமநாதன் மகேசன்
113யா/ந/2202 திரு. சின்னத்துரை மகாதேவா
114யா/ந/2218 திரு. கந்தசாமி இராசரத்தினம்
115யா/ந/2243 திருமதி. பரமயோகம் கார்த்திகேசு
116யா/ந/2257 செல்வி. பிறிம்றோஸ் குணரட்ணம்
117யா/ந/2295 திருமதி. சரஸ்வதி
சுப்பிரமணியம்செட்டியார்
118யா/ந/2305 திரு. கனகசபை சிவசுந்தரம் சிவப்பிரகாசம்
119யா/ந/2339 திரு. வேலுப்பிள்ளை சொர்ணலிங்கம்
120யா/ந/2344 திரு. யக்கோப்பிள்ளை சிமியோன்
121யா/ந/2376 திருமதி. திரேசம்மா கிளமென்ற்
122யா/ந/2388 திருமதி. விமலா ஜெகநாதன்
123யா/ந/2396 திருமதி. யோகம்மா மனோகரா
124யா/ந/2416 திருமதி. மகேஸ்வரி சோமசுந்தரம்
125யா/ந/2441 திரு. நடராசா சிவராசா
126யா/ந/2467 திரு. நாகர் அம்பலவாணர்
127யா/ந/2470 திரு. சுப்பிரமணியம் பாலச்சந்திரன்
128யா/ந/2486 திரு. முத்து கணேசு
129யா/ந/2512 திரு. பெரியதம்பி இராசேந்திரன்
130யா/ந/2513 திருமதி. மகேஸ்வரி இரத்தினம்
131யா/ந/2514 திரு. சபாபதி இராசதுரை
132யா/ந/2518 திரு. பெரியதம்பி சிவகடாச்சம்
133யா/ந/2566 திரு. வேலுப்பிள்ளை ஆறுமுகம்
134யா/ந/2575 திருமதி. ஞானேஸ்வரி தர்மலிங்கம்
135யா/ந/2586 திரு. கந்தையா குணரத்தினம்
136யா/ந/2605 திரு. சிவசாமிஐயர்
குமாரராஜக்குருக்கள்
137யா/ந/2616 திரு. இராசரத்தினம் முத்துக்குமாரு
138யா/ந/2642 திரு. கனகரட்ணம் பத்மநாதபிள்ளை
139யா/ந/2645 திருமதி. பரமேஸ்வரி சபாரத்தினம்
140யா/ந/2662 திரு. கந்தையா இராசநாயகம்
141யா/ந/2681 திருமதி. இராசமணி சண்முகம்பிள்ளை
142யா/ந/2687 திருமதி. சறோஜினிதேவி தணிகாசலம்
143யா/ந/2689 திரு. தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்
144யா/ந/2707 திருமதி. மனோன்மணி செல்வரத்தினம்
145யா/ந/2708 திரு. கந்தையா சுப்பிரமணியம்
146யா/ந/2734 திரு. குமாரசாமி செல்வநாயகம்
147யா/ந/2743 திரு. அப்புக்குட்டி சுப்பிரமணியம்
148யா/ந/2753 திரு. தாமோதரம்பிள்ளை துரையப்பா
149யா/ந/2773 திரு. ஆத்மநாத வைத்தியநாதசர்மா
150யா/ந/2783 திருமதி. அருளம்மா குமாரசாமி
151யா/ந/2817 திருமதி. கணேஸ்வரி கந்தவனம்
152யா/ந/2835 திருமதி. கனகாம்பிகை பொன்னம்பலம்
153யா/ந/2840 திருமதி. கமலாம்பிகை தம்பிமுத்து
154யா/ந/2852 திரு. சுப்பிரமணியம் மயில்வாகனம்
155யா/ந/2872 திரு. கதிரேசு நவரத்தினம்
156யா/ந/2874 செல்வி. நகுலேஸ்வரி தம்பிமுத்து
157யா/ந/2887 திரு. குமாரசாமி பரமேஸ்வரன்
158யா/ந/2889 திரு. சபாரட்ணம் பத்மநாதன்
159யா/ந/2907 திருமதி. பொன்மலர் சின்னத்தம்பி
160யா/ந/2914 திரு. சிவஞானபோதம் ரவீந்திரன்
161யா/ந/2936 செல்வி. மாலினி இரகுநாதன்
162யா/ந/2951 திரு. கந்தையா செல்லத்துரை
163யா/ந/2954 திரு. கந்தையா சிவராசா
164யா/ந/2959 திருமதி. சிவபாக்கியம் கோணேசன்
165யா/ந/2974 திரு. கந்தையா சண்முகலிங்கம்
166யா/ந/2985 திருமதி. செல்லம்மா திருஞானசுந்தரம்
167யா/ந/2991 திருமதி. சரஸ்வதி மனோகரன்
168யா/ந/3046 திருமதி. காவேரியம்மா
அந்தோனிப்பிள்ளை
169யா/ந/3051 திருமதி. இரத்தினேஸ்வரி அரியரட்ணம்
170யா/ந/3126 திரு. பொன்னையா
கதிர்வேலாயுதபிள்ளை
171யா/ந/3131 திரு. இராஜரெட்ணம் புறுடி
172யா/ந/3135 திரு. மனுவல்பிள்ளை அருமைத்துரை
173யா/ந/3140 திருமதி. மங்களேஸ்வரி ரவீந்திரநாதன்
174யா/ந/3144 திருமதி. மகேஸ்வரி தர்மலிங்கம்
175யா/ந/3181 திரு. செல்லர் பொன்னுத்துரை
176யா/ந/3186 திருமதி. புவனேஸ்வரி துரைராசா
177யா/ந/3206 திரு. நாகர் இராசையா
178யா/ந/3290 திருமதி. சிவபாக்கியம் சுந்தரலிங்கம்
179யா/ந/3293 திரு. தில்லை சின்னையா
180யா/ந/3303 திருமதி. சந்திரவதனா விஜயதர்மா
181யா/ந/3313 திரு. கணபதிப்பிள்ளை சேந்திநாதன்
182யா/ந/3331 திருமதி. திருப்பதி நடராசா
183யா/ந/3347 திருமதி. திருபுவனேஸ்வரி கணபதி
184யா/ந/3360 திருமதி. ஜெயலட்சுமி துரைராஜா
185யா/ந/3363 திரு. ஆசீர்வாதம்.வேதநாயகம்
துரைரட்ணம்
186யா/ந/3407 திரு. சின்னத்தம்பி நடராசா
187யா/ந/3437 திரு. கணபதிப்பிள்ளை
சண்முகலிங்கம்
188யா/ந/3439 திரு. சின்னத்துரை மயில்வாகனம்
189யா/ந/3456 திருமதி. பரமேஸ்வரி நாகலிங்கம்
190யா/ந/3461 திரு. செல்லன் வைரமுத்து
191யா/ந/3468 திருமதி. அன்னலச்சுமி தியாகேசர்
192யா/ந/3471 திரு. இராசரத்தினம் தாஸ்
193யா/ந/3482 திரு. பொன்னையா சுந்தரம்
194யா/ந/3488 திரு. சின்னையா பொன்னுத்துரை
195யா/ந/3499 திரு. கணபதிப்பிள்ளை நாகராசா
196யா/ந/3556 திருமதி. சிவநாயகி நடராசா
197யா/ந/3574 திருமதி. நிருபராணி அருணாசலம்
198யா/ந/3609 திரு. இராமலிங்கம் அன்னலிங்கம்
199யா/ந/3611 திரு. மயில்வாகனம் மாணிக்கவாசகர்
200யா/ந/3667 திரு. வைத்திலிங்கம் கனகரத்தினம்
201யா/ந/3726 திரு. சிதம்பரப்பிள்ளை அரியபுத்திரன்
202யா/ந/3762 திரு. பிரான்சிப்பிள்ளை கனகரட்ணம்
203யா/ந/3765 திருமதி. உள்ளக்கமலம்
தனபாலசிங்கம்
204யா/ந/3772 திருமதி. பாக்கியம் பொன்னையா
205யா/ந/3794 திருமதி. தனலக்சுமி கனகசபை
206யா/ந/3817 திரு. கந்தையா கனகரத்தினம்
207யா/ந/3827 திரு. பொன்னையா ஜீவரட்ணம்
208யா/ந/3834 திருமதி. சிவபாக்கியம் இராசதுரை
209யா/ந/3864 திரு. கணபதிப்பிள்ளை துளசிகாமணி
210யா/ந/3882 திரு. நாகலிங்கம் சுந்தரலிங்கம்
211யா/ந/3900 திரு. திருவிளங்கம் யோகராசா
212யா/ந/3910 திருமதி. மகேஸ்வரி குமாரசாமி
213யா/ந/3922 திருமதி. கமலாதேவி சுந்தரலிங்கம்
214யா/ந/3929 திருமதி. மரகதம் சுந்தரமூர்த்தி
215யா/ந/3935 திருமதி. முத்துப்பிள்ளை சின்னத்தம்பி
216யா/ந/3942 திருமதி. தங்கம்மா ஐயாத்துரை
217யா/ந/3951 திரு. துரையப்பா இரத்தினசபாபதி
218யா/ந/3964 திரு. மாணிக்கவாசகபிள்ளை கனகசபை
219யா/ந/3974 திருமதி. லீலாவதி செல்லத்துரை
220யா/ந/3977 திரு. கதிரவேலு தனபாலசிங்கம்
221யா/ந/3989 திரு. செல்லத்துரை பாலசிங்கம்
222யா/ந/4056 திரு. பேரம்பலம் பாலசுப்பிரமணியம்
223யா/ந/4085 திரு. அருணாசலம் முத்துக்கிருஷ்ணன்
224யா/ந/4090 திருமதி. பவளக்கொடி சிவப்பிரகாசம்
225யா/ந/4111 திரு. நாகமுத்து இரத்தினசபாபதி
226யா/ந/4128 திரு. இராமச்சந்திரன் செல்லப்பா
227யா/ந/4136 திருமதி. சுகிர்தரட்ணம் சிவஞானம்
228யா/ந/4144 திரு. றோய் யோதிகராசன் செல்லப்பா
229யா/ந/4154 திரு. செல்வத்துரை தர்மலிங்கம்
230யா/ந/4165 திருமதி. தங்கம்மா தெய்வேந்திரம்
231யா/ந/4194 திருமதி. நல்லம்மா கந்தசாமி
232யா/ந/4201 திரு. தம்பு நடராசா
233யா/ந/4210 திரு. கந்தையா மாணிக்கம்
234யா/ந/4216 திரு. நடராசா சண்முகநாதன்
235யா/ந/4252 திரு. பொன்னையா சண்முகநாதன்
236யா/ந/4256 திருமதி. மதிவதனசோதி நடராசா
237யா/ந/4264 செல்வி. சிவபாக்கியம் வீரகத்திப்பிள்ளை
238யா/ந/4267 திரு. சின்னையா சந்திரசேகரம்
239யா/ந/4273 திருமதி. குணவதி தர்மலிங்கம்
240யா/ந/4277 திருமதி. நாகேஸ்வரி கனகரெத்தினம்
241யா/ந/4287 திரு. செல்லையா வன்னியசிங்கம்
242யா/ந/4309 திரு. இரத்தினசிங்கம் கிருஷ்ணமூர்த்தி
243யா/ந/4316 திருமதி. அன்னலட்சுமி முத்துலிங்கம்
244யா/ந/4330 திரு. நாராஜணசாமி நடராஜா
245யா/ந/4332 திருமதி. சரஸ்வதி சிவானந்தம்
246யா/ந/4337 திரு. குழந்தைவேலு பாலேந்திரா
247யா/ந/4350 திருமதி. வடிவாம்பிகை கணேஸ்
248யா/ந/4359 திருமதி. இந்திராதேவி கனகலிங்கம்
249யா/ந/4360 திருமதி. கமலாசனி அரியரட்ணம்
250யா/ந/4374 திருமதி. இந்திரா சீவரெட்ணம்
251யா/ந/4390 திரு. அம்பலவாணர் ஜெகநாதன்
252யா/ந/4406 திருமதி. பூரணம் இராசேந்திரம்
253யா/ந/4422 திருமதி. சிவபாக்கியம் தர்மலிங்கம்
254யா/ந/4443 திரு. கந்தையா விஷ்ணுகாந்தி
255யா/ந/4481 திருமதி. சிவகாமிப்பிள்ளை
பொன்னுத்துரை
256யா/ந/4498 திருமதி. ஞானம்மா இரத்தினம்
257யா/ந/4553 திருமதி. அன்னம்மா பரராசசிங்கம்
258யா/ந/4572 திரு. முத்துத்தம்பி துரைராஜா
259யா/ந/4595 திரு. சபாபதிப்பிள்ளை மாணிக்கராசா
260யா/ந/4626 திருமதி. விமலாதேவி துரைராசா
261யா/ந/4645 திரு. கந்தையா தில்லைநாதன்
262யா/ந/4668 திரு. தவசி பிள்ளையார்
263யா/ந/4695 திரு. முத்துக்குமாரு சண்முகசுந்தரம்
264யா/ந/4696 திருமதி. மகாலெட்சுமி இராசலிங்கம்
265யா/ந/4711 திருமதி. சின்னம்மா பேரின்பம்
266யா/ந/4713 திரு. செல்லப்பா இரத்தினசபாபதி
267யா/ந/4724 திரு. சபாபதிப்பிள்ளை குலராஜசிங்கம்
268யா/ந/4730 திருமதி. யுவராணி மகாதேவா
269யா/ந/4732 திருமதி. மங்கையற்கரசி சோமசுந்தரம்
270யா/ந/4741 திரு. தில்லையம்பலம் சிறிஸ்கந்தராஜா
271யா/ந/4746 திரு. பழனித்துரை அம்பிகாபதி
272யா/ந/4759 திரு. சின்னையா சிவப்பிரகாசம்

(வளரும்)

# தென்னிலங்கை மக்கள் கையிலேயே நாட்டின் எதிர்கால அமைதிக்கான பொறுப்பு

## சர்வதேச சமாதான தின உரையில் தெரிவிப்பு

வலி.தெற்கு.ஒக்.25

பல அவலங்களை ஏற்படுத்தித் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீரழித்த யுத்தம் மீண்டும் ஏற்படக்கூடாது என்பதே அனைத்துத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். கொடிய யுத்தம் ஒழிந்து சாந்தியும் சமாதானமும் ஏற்பட நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடவேண்டும். அமைதியான எதிர்காலத்தை எமது நாட்டில் ஏற்படுத்தும் பாரிய பொறுப்பு தென்னிலங்கை மக்களின் கைகளியேலே தங்கியுள்ளது.

சர்வதேச சமாதான தினத்தையொட்டி சங்குவேலி தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்ற விசேட வைபவத்தில் பாடசாலை அதிபர் அ.ஜெயக்குமார் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

அதிபர் தமது தலைமையுரையின் போது மேலும் தெரிவித்ததாவது: -

யுத்தம் காரணமாக நாம் எமது சொத்துக்கள், இனத்தவர்கள், கல்வி என்பனவற்றை இழந்துள்ளோம். பலர் அநாதைகளாக, விதவைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான அவலங்கள் தொடர்ந்தும் ஏற்படக்கூடாது என்பதில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும் - என்றார்.

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

யுத்தம் காரணமாக எமது நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துள்ளது. மக்களின் அமைதி வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஒற்றுமையாக வாழ்ந்த மக்களிடையே இன, மொழி, சமய வகுப்புவாதங்களை ஏற்படுத்தித் தமிழ் மக்களைத் தனிமைப்படுத்தியுள்ளது. வன்முறைகள், கலாசாரச் சீரழிவுகள், கசப்புணர்வுகள் மலிந்துவிட்டன. இவை யாவும் இல்லாமல் போய் நிரந்தர சமாதானம், சுபீட்சம் ஏற்பட வேண்டும். சமாதானத்துக்கான மக்கள் சக்தி அதிகரிக்கவேண்டும் - எனக் கூறினார்.

ஓய்வுபெற்ற உப அதிபர் ஏ.சி.சண்முகலிங்கம், நவாலி மகாவித்தியாலய அதிபர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் உட்படப் பலர் உரையாற்றினர்.

மாணவர்களது உரைகள், சமாதானத்தை வலியுறுத்தும் கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றன. (ப-152-204)

# எமது கலை, கலாசாரம் காக்கப்படவேண்டும் இது தான் இளைய தலைமுறையின் கடமை

## சிவாஜிலிங்கம் எம்.பி. தெரிவிப்பு



வலி.தென்மேற்கு, ஒக்.25

தென்னிலங்கைப் பேரினவாத சக்திகளும் மற்றும் சிங்கள அரசும் வேண்டும் என்றே திட்டமிட்டு எமது மொழிக்கு எதிரான பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. இந்த வகையில் எமது மொழியையும் தமிழ்க் கலை, கலாசாரங்களையும் பேணிக்காக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமது இளைஞர்களின் கைகளிலேயே உள்ளது என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

பண்ணாகம் அம்பாள் கலை மன்றத்தினால் சுமார் 25 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டபத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

கலைமன்றத் தலைவர் து.துரைராஜ் தலைமையில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற இந்த விழாவில் சிவாஜிலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

ஓர் இனத்தின் இருப்பையும் மதிப்பையும் தீர்மானிப்பது அந்த இனத்தின் மொழி, கலை, கலாசாரங்களே. இந்தக் கலை மன்றம் முத்தமிழ் கலைகளை வளர்ப்பதிலும் மாணவர்களுக்கு கல்வியறிவு ஊட்டுவதிலும் கடந்த பல வருடகாலமாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதை நான் அறிவேன். பல லட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக் கட்டடமும் கலாசார மண்டபமும் இப்பகுதி இளைஞர்களின் அயராத முயற்சிக்கும் ஆக்கத்திறனுக்கும் ஒற்றுமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்த மண்ணிலே பிறந்து தமிழ் வளர்த்து தமிழ் காத்ததலைவன் அண்ணன் அமரர் அமிர்தலிங்கத்தையும் இவ்விடத்தில் நினைவுகூற வேண்டியுள்ளது என்றார்.

கலாசார மண்டபத்தை இளைப்பாறிய ஆசிரியை செல்வி இரத்தினம் சுப்பிரமணியம் திறந்து வைத்தார். முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு கலாசார மண்டபத்தின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார். சிறுவர் பூங்காவை யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் திறந்து வைத்தார்.

விழா மலர் (நூல்) வெளியீட்டுரையை வட்டு.மத்திய கல்லூரி ஆசிரியர் சி.கேசவன் நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையை பளை பிரதேச செயலக நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் ச.ஐங்கரன் நிகழ்த்தினார். வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல், வலி.மேற்கு பிரதேச செயலர் இ.இராசதுரை, வலி.மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி ரஜனி கந்தசாமி, பண்ணாகம் கிராம அலுவலர் திருமதி திலகவதி சிவபாக்கியநாதன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்கள். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ப-135)

# குடாநாட்டு வைத்திய சேவை தாமதமின்றி அபிவிருத்தி செய்யவேண்டியது அவசியம்

## பின் தங்கிய நிலையைப் போக்க பணிப்பாளர் வலியுறுத்து



வடமராட்சி,ஒக்.25

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தான் வைத்திய சேவை மிகவும் பின் தங்கியுள்ளது.

இக்குறையை நீக்க வைத்திய சேவையைத் தாமதமின்றி அபிவிருத்தி செய்யவேண்டிய கட்டாய தேவை உள்ளது.

- இவ்வாறு யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர்.ஆறுமுகம் கேதீஸ்வரன் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அண்மையில் அபிவிருத்திச் சபைத் தலைவரும், வைத்தியப் பொறுப்பதிகாரியுமான டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:- ஒருகாலத்தில் யாழ். குடாநாடு ஏனைய மாவட்டங்களைவிட வைத்தியத்துறையில் முன்னணி வரிசையில் நின்றது. தற்போது மிகவும் பின்தங்கியுள்ளது.

இந்த வைத்தியசாலை ஒரு காலத்தில் சிறந்ததொரு வைத்தியசாலையாக இருந்தது. நிறைய வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் பணியாற்றியிருந்தார்கள். இவ்வைத்தியசாலையில் சிறுவனாக நான் இருந்த போது சிகிச்சை பெற்றுள்ளேன். முன்னைய வைத்தியசாலையைப் போல இவ்வைத்தியசாலையின் சேவையை அதிகரிக்க விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இதற்கு அனைத்துதரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

குடாநாட்டில் பல்வேறு தரத்தில் 38 வைத்தியசாலைகள் உண்டு. இவையனைத்தையும் அந்தந்தத் தரத்துக்கு ஏற்ப வசதிகளையும் வளங்களையும் ஏற்படுத்திக்கொடுக்க இயன்றமுயற்சிகளை மேற்கொண்டுவருகிறேன், குடாநாட்டு வைத்தியசாலைகள் பாரபட்சமின்றி அபிவிருத்தி செய்யப்படும். இதன்மூலம் மக்களுக்கு நிறைவான சேவைகளை வழங்கமுடியும் - என்றார். (ப-173)

# மாணவர் மத்தியில் ஆசிரியர்கள் எந்தவித பாகுபாடும் காட்டலாகாது

## பருத்தித்துறை நீதிவான் அறிவுரை



குடத்தனை,ஒக்.25

ஆசிரியர்கள், மாணவர் மத்தியில் எந்தவித பாகுபாடும் காட்டக்கூடாது. அவர்களை சமமாக மதிக்கவேண்டும்.

- இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் தெரிவித்தார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியர்தினவிழாவிலே பிரதமவிருந்திராகக் கலந்துகொண்டு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் உரைநிகழ்த்தினார்.

விழா, பாடசாலையின் அபிவிருத்திச் செயலாளர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் வரவேற்புரையை சிரேஷ்ட மாணவத் தலைவி செல்வி. ஜே.அந்தோனிப்பிள்ளை நிகழ்த்தினார்.

பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் தொடர்ந்து உரையாற்றுகையில்:

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை இலங்கையிலேயே சிறந்த முன்னணிப் பாடசாலை என்பதை நான் பத்திரிகை வாயிலாகவும், பாடசாலையின் பெறுபேறுகள் ரீதியாகவும் முற்காலங்களிலே அறிந்துள்ளேன்.

பாடசாலைகளில் மாணவர்கள் சமமாக மதிக்கப்படவேண்டும். மாணவர்களுக்குள் எந்தவிதமான வேறுபாடுகளையும் ஆசிரியர்கள் காட்டக்கூடாது. சில பாடசாலைகளில் மாணவர்கள் மீது ஆசிரியர்கள் வேறுபாடுகளைக் காட்டுவதால் விரும்பத்தகாத பல்வேறு பிரச்சினைகள் உருவாகிவிடுகின்றன. இவை நீதிமன்றங்கள் வரை வரவேண்டிய அவலநிலையையும் ஏற்படுத்திவிடும்.

ஏழை மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதைத் காண்கின்றோம். ஆனால், சில வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெறுபேறுகளில் வீழ்ச்சியடைவதையும் காணமுடிகிறது. இவர்கள் குறைந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள ஆசிரியர்களும், பெற்றோர் களுமே காரணமாகின்றனர்.

ஆசிரியத் தொழில் புனிதமான தெய்வீகத் தொழிலாகும். இத்தொழிலைப் புரியும் ஆசிரியர்கள் தூய்மையுடனும் பொறுப்புணர்வுடனும் செயற்படவேண்டும். இன்று ஒருசில ஆசிரியர்களின் நடத்தைகளால் முழு ஆசிரியச் சமூகத்திற்குமே அவமானம் ஏற்பட்டுவிடுவது மிகக் கவலைக்குரியதாகும். நான் நீதிபதியாகப் பணியாற்றுவதால் இக் குறைபாடுகள் பற்றி அதிகம் அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆசிரியர்கள் சமூகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து தொழிலுக்கும் பெருமை தேடிக்கொள்ள வேண்டும் - என்று கூறினார்.

மாணவர்களுக்கு ஒழுங்கு, கட்டுப்பாடுகளைப் போதிக்கும் ஆசிரியர்கள் தாமும் ஒழுங்கு கட்டுப்பாடுகளுடன் செயற்பட்டு நல்லாசிரியராக மாணவர்களை நல்வழிப்படுத்தத் தவறக்கூடாது. ஆசிரியர்கள் ஒழுங்கீனமாகச் செயற்பட்டால் மாணவர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக அமைந்து விடும். ஆசிரியர்கள் ஒழுங்கீனமாகச் செயற்படுவதைச் சமுதாயம் அனுமதிக்க மாட்டாது என்று அவர் மேலும் பேசுகையில் கூறினார். இந்த நிகழ்வின் நன்றியுரையினை செல்வி.ஆர். கோகுலவாணி நிகழ்த்தினார். (ப-78)




# அரிய பொக்கிஷமான தமிழர் கலைகளை அழியவிடாது பாதுகாக்க வேண்டும்

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் எம்.பி.



நல்லூர்,ஒக்.25

தமிழர்களது கலைகள் முதன்மை மிக்க அரிய பொக்கிஷங்கள். உன்னதமான இந்தக் கலைகளை எம்மிடம் இருந்து விலக்கிக் கொள்ளாது பாதுகாக்க வேண்டும்.

-இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்தார்.

சங்கீதா இராமநாதனின் பரத நாட்டிய அரங்கேற்றம் அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தனது தலைமையுரையில் கூறியதாவது:

தமிழர்களுடைய கலைகள் உலகின் முதன்மைமிக்க அரிய பொக்கிஷங்கள். உன்னதமான இந்தக் கலைகள் எம்மிடம் இருந்து விலகிக் கொள்ளாது பாதுகாக்க வேண்டியது எங்கள் கடமை. தமிழர்களது பாரம்பரிய கலைகளை வளர்ப்பதில் இந்து, கிறிஸ்தவமதங்கள் இணைந்து செயற்படுகின்றன. மதங்களில் வேறுபட்டவையாக இசையும் பரதமும் எமது மக்களிடம் நன்கு வளரவேண்டும். துன்ப துயரங்களில் சிக்குப்படினும் நாம் எமது கலாசாரத்தை கலைகளை மறக்கவில்லை. புலம் பெயர்ந்த மக்கள் அங்கே இசை நடனக் கலைகளை வளர்த்து வருகிறார்கள்.

ஒழுக்கம், பெரியவர்களை மதிக்கும் பண்பாடுகளை மக்கள் மத்தியில் வளர்க்க இது போன்ற நிகழ்வுகள் இடம் பெறவேண்டும். பரதநாட்டியத்தைப் பலர் பயின்றாலும் கூட மிகக் குறைந்த அளவினரே அரங்கேற்றம் செய்கிறார்கள். இந்தக் கலைகளே எமது தேசியத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது. கிளிநொச்சியில் கூட அண்மையில் ஒரு அரங்கேற்றம் இடம் பெற்றது. எமது தேசியம் கலாசாரம் பாதுகாக்கப்படவேண்டுமெனில் மக் கள் எமது கலைகளை வளர்ப்பதில் ஈடுபாடு கொள்ள வேண்டும். தேசத்தின் விடுதலைக்கும் வெற்றிக்கும் இது இன்றியமையாதது. நடனக் கலையின் சிறப்புக்களையும் நுணுக்கங்களையும் சங்கீதாவிடம் காணமுடிந்தது. எமது தேசத் தின் வளர்ச்சிக்கு இந்தக் கலையினூடாக தனது பங்களிப்பை அவர் வழங்கவேண்டும் என்றார்.

திருமதி சாந்தினி சிவனேசன் பேசும் போது கூறியதாவது:-

எமது கலாசாரத்துடன் ஒன்றிய சங்கீதம், நடனம் பேன்ற கலைகள் பக்திக்குரியவை. இவற்றை வளர்ப்பவர்களுக்கு சகல நன்மைகளும் கிட்டும் என்பது ஆன்றோர் கருத்தாகும். செல்வி சங்கீதா தனது சிறுவயதில் இருந்தே நடனக்கலையில் ஆர்வம் கொண்டிருந்தார் என்பதை நான் அறிவேன். தன்னுடைய அங்க அசைவுகளினூடாக சுருதி லயத்திற்கு அமைய ஆடற்கலையின் சிறப்பை வெளிப்படுத்தி ஒரு சிறந்த நர்த்தகியாக அரங்கேற்றம் செய்துகொண்டார். சிறப்பான முறையில் பயிற்சிகளை அளித்த திருமதி ஆனந்தஜோதி தர்சனனைப் பாராட்டாமல் இருக்க முடியாது. பழமைவாய்ந்த இந்தத் தெய்வீகக்கலையை மேலும் சிறப்புடன் கற்று தனது நாட்டிற்கும் பெற்றோருக்கும் குருவுக்கும் பெருமை சேர்க்க இறைவன் ஆசீர்வதிக்கவேண்டும் - என்றார். சட்டத்தரணியும் பதில் நீதிபதியுமான க.கேசவன், சுகநல வாழ்வு நிறுவன இயக்குனர் கலாநிதி டேமியன் அடிகளார், யாழ். மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றியத் தலைவர் சூ.சிறில் ஆகியோரும் உரைநிகழ்த்தினார்கள்.

(ப-111-204)

அமெரிக்கன் DV 2007 லொத்தர் விசாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன



DV 2006 இற்கான எமது நிறுவனம் மூலம் விண்ணப்பத்திவர்களில் பலருக்கு விசா கிடைத்துள்ளதை மிகவும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

அதேவேளை DV 2007 இற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 2''x2'' கலர் படம் ஒன்றுடன் எமது நிறுவனங்களுக்கு உடன் சமுகம் தரவும்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

முருகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993


## மாதிரிக் கிராமம் தெரிவு

நவாலி,ஒக்.25

ஆனைக்கோட்டை கூழாவடி கிராமம் மாதிரிக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. 'சொண்ட்' நிறுவனம் இந்தத் தெரிவை மேற் கொண்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இதேவேளை - மேற்படி கிராமத்தில் முதல் கட்டமாக புளியங்கண்டு வீதி, கூழாவடி கிழக்கு வீதி, கூழாவடி மேற்குவீதி ஆகிய வீதிகளுக்கு வீதி விளக்குகளைப் பொருத்தவும் - கூழாவடி கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக ஆங்கிலக் கல்வியைப் போதிப்பதற்கும் கிராமத் தில் பழமரக்கன்றுகளை நடுகை செய்யவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. (எ-100)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மருந்துவகை அன்பளிப்பு

சாவகச்சேரி,ஒக்.25

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு லண்டனில் சேகரிக்கப்பட்ட ஒருதொகுதி மருந்துப் பொருள் கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

லண்டனில் கல்வி கற்கும் மாணவர்க ளால் சேகரிக்கப்பட்ட ரூபா 50 ஆயிரம் பெறு மதியான மருந்துப் பொருள்களே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரியைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசிப்பவருமான மகாலிங்கம் சிவ குமார் ஊடாக அனுப்பிவைக்கப்பட்ட இந்த மருந்துப் பொருள்களை ஆசிரியர் எஸ். சந் திரதேவன் வைத்தியசாலை வைத்திய அதிகாரி ச.அம்பிகைபாகனிடம் கையளித்தார். (எ-31)

## விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.25

மாதகல் துறைமுக விநாயகர் கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு நிர்வாகத் தினர் கேட்டுள்ளனர். (3-202)

## வலிகாமம் வலய பேச்சுப் போட்டி

வலி.தெற்கு,ஒக்.25

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்டுவரும் பேச்சுப் போட்டிகளில் வலிகாமம் கல்வி வலயத்திற்கான போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரி வித்தார்.

மாணவர்களின் விண்ணப்பங்கள் யாவும் வியாழக்கிழமைக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு பாடசாலை அதிபர்களை அவர் கேட்டுள்ளார்.

கவிதை, கட்டுரை, சித்திரம் ஆகிய போட்டி களுக்கான விண்ணப்பதாரர்களின் ஆக்கங் கள் யாவும் 28 ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண் டும் எனவும் - பிந்திய ஆக்கங்கள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாதெனவும் அவர் அறி வுறுத்தியுள்ளார். (3-152)

## சங்கீதசபையின் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.25

வடஇலங்கை சங்கீத சபையின் 2006 ஆம் ஆண்டுப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத் தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் ''வட இலங்கைச் சங்கீத சபை, யாழ்.கல்வி அலுவ லகம், நல்லூர்'' என்ற முகவரியில் விண்ணப் பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது. (3-202)


திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (41278)

தொடர்பு: [illegible] சோமசுந்தரம் பாலர் பாடசாலை, 22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



## தேவை
## Despatch Clerk

கொழும்பிலுள்ள நிறுவனமொன்றின் விநியோகப்பகுதியில் கடமையாற்ற விநியோக லிகிதர்கள் தேவை. 20-35 வயதிற் கிடைப்பட்ட, G.C.E. O/L சித்தியடைந்த, மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் உடைய, சுறுசுறுப்பான இளைஞர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு 28.10.2005 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும். கொழும்பில் தங்குமிட வசதி வழங்கப்படும்.

விள.இல. 2725,
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.

(C/45865)(42.16.17)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 13 - 03 - 1936

ஆண்டவன் அணைப்பில் 25 - 09 - 2005

### அமரர் செல்லர் சிவசுப்பிரமணியம்
(கார் சுப்பு)

அச்சுவேலியூரதனில் அவதரித்த அணிபெறு நாயகனே!
அன்பான சோதரனே! பாசமிகு தந்தையே!
எமையெல்லாம் வளர்த்தெடுத்து இவ்வுலகில் நாமுயர
நல்வழி காட்டிவிட்டு நலமாய் நீர் இருந்தீர்.

வாழ்வாங்கு வாழ்ந்தெம்மை வாழவைத்த சோதரனே! தந்தையே!
ஊரினை நேசித்தீர் ஊரவர்கள்'கார் சுப்பு' என்றனரே
வந்தகடன் முடித்துவிட்டேன் வாழ்வெனக்குப் போதுமென்று
வானுலகம் சென்றாயோ வானவர் பாதம் நீர் விரும்பி

பந்தமது நீர் துறந்து பரமசிவன் பாதம் பற்றினையோ
நாள்கள் முப்பத் தொன்றாயின நானிலத்தில் நீர் மறைந்து
ஆறாது உம் நினைவு அவனியில் நாமிருக்கும் வரை
தீராத அன்புடனே சிந்தை வைத்து வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (25.10.2005) செவ்வாய்க்கிழமை அச்சுவேலி, நவக்கிரியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு, தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

விளாத்தியடி, நவக்கிரி
அச்சுவேலி.

நீங்காத நினைவுகளுடன்:
சகோதரர்கள்,மைத்துனர்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(41889)(42-16-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 05 - 05 - 1928

உதிர்வு 26 - 09 - 2005

### அமரர் குணரத்தினம் சின்னத்தம்பி
(முன்னாள் நடத்துநர், இ.போ.ச.)

கடந்த 26.09.2005 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங் கள் அன்புத் தந்தை கு.சின்னத்தம்பி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.10.2005) செவ்வாய்க்கிழமை அவரது இல் லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக் கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் கண் ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

தாமோதரா வித்தியாசாலையடி,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

சி.கிருஷ்ணமூர்த்தி குடும்பத்தினர்.

(41880)(42-16-17)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தங்கச்சி சின்னத்தம்பி



திருமதி சின்னத்தங்கச்சி சின்னத்தம்பி அவர்கள் 23.10.2005 அன்று அதிகாலை காலமானார். அன்னார் சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் ஏழாலை கிழக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னத்தம்பி (ஆசிரியர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கருணாநிதி (ஓய்வுபெற்ற தபாலதிபர்), தனலட்சுமி, நித்தியலட்சுமி, பகவதி (ஆசிரியை, ஏ/றோ.க. பாடசாலை), கருணானந்தம், கருணாகரன், பவானி, மகாதேவன் (ஜேர்மனி), பாக்கியலட்சுமி (யா/கொக்குவில் இ.ஆ.பாடசாலை), நந்தினி (கனடா), சுகந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும் கௌரி, பத்மலிங்கம் (முன்னாள் ஊழியர், இ.போ.ச.), சண்முகராஜா (முன்னாள் நேரக்காப்பாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற ஜெயராசா (இளைப்பாறிய அதிபர்), கனகேஸ்வரி, இராமச்சந்திரன் (வர்த்தகர்), உசா சுதாநிதி (ஜேர்மனி), ஜெயக்குமார் (உரிமையாளர், றொப் வைன் சொப், திருநெல்வேலி ), சபேசன் (கனடா), சிவயோகன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும் விமலன் (லண்டன்), சுதர்சன் (கணக்காளர், கொழும்பு), உமா, சந்திரகாந்தன் (கொழும்பு), சிவஞானவேல் (இ.போ.ச.), ஜயந்தினி, கௌசலா (ஆசிரியை, கிளி/மத்தியகல்லூரி), சுதர்மன், துவாரகா, மதுரா, ரஜிகா (கனடா), விஹிதா, கோபி நாத் (கனடா), கணநாத், காலஞ்சென்ற கமலகாந்தன், இமயகாந் தன் சுபாசினி, அனுஷா, சுஜிதா, தேனுஷன், ஆதிரை (ஜேர்மனி), அனுசன் (ஜேர்மனி), கீர்த்திகன், ஆர்த்தன், ஆரபி, அபிசன், ஆரூரன் (கனடா), மயூரன் (கனடா), யதூர்சன் (நோர்வே),தச்ஷான் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் விஸ்ணுஜன் (லண்டன்), அர்ச்சனா (கனடா), ஆகாஷ் (கனடா), டிசாந்தன், கிருசாந்தன், சங்கீர்த்தன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.10.2005 அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காடாகரம்மை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(41909)(42-16-17)


### ஒத்துமாறல்

பளைப் பிரதேச செயலகத்தில் மாகாண திட்டமிடல் செயலக திட்டமிடல் உதவியாளராக நியமனம் பெற்றுள்ள ஒருவர். யாழ்.மாவட்ட செயலகம் ஒன்றில் அதே நியமனம் பெற்ற ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு: 0776218396, 0777592572, 0212225351.

திருமதி ச.மாதவி, 58, லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(41904)(42-16-17)



### தீபாவளி மலிவு விற்பனை

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார் மற்றீரியல்கள், சுடிதார், சாறிவகைகள், ஸ்கேட் & பிளவுஸ், T சேட் வகைகள் அனைத்திற்கும் தரச்சிறப்பில் முன்னணி பெற்ற ஒரே நிறுவனம்

பபு கொமினிக்கேசன்

இல.80, வளாகவீதி,
திருநெல்வேலி
(மக்கள் வங்கி அருகில்).

(41890)
(42-16-17)


## 21 ஆம் ஆண்டு நினைவு நாள்



அன்னையின் மடியில் 11.04.1972

ஆண்டவன் பிணைப்பில் 25.10.1984

### செல்வி
### நிமாலினி வீரசிங்கம் (பாப்பா)

எங்கள் அன்புத் தெய்வமே!
அன்பு என்னும் பாதையிலே வாழ்ந்து
ஆசை என்னும் ஓடத்திலே ஓடினோம்
மகளே! நீ பூவாக மலர்ந்தாய்- எம்
இரு கரம் கொண்டு நெஞ்சோடு சேர்த்தணைத்து
கை எடுத்த வேளையில்- காலனவன்
பறித்து விட்ட செய்தி இடிபோல் வந்ததம்மா!
ஒன்றா இரண்டா - நாம் கண்ணீர் எனும்
கடலில் வீழ்ந்து விட்டோம்
எங்கள் நெஞ்சம் என்னும் வானத்தில்
உங்கள் நினைவுகள் தேயாத நிலவு
கண்ணீருடன் நினைவுகள் கூறும்......

34/1, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுகளுடன்:
அப்பா, அம்மா, சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்.

(41705)(42-16-17)

# சங்கானைக் கோட்ட மட்டத்திலான உதைபந்தாட்டம்: அராலி இந்து, வட்டு. சென்றல், விக்ரோறியா சம்பியன்கள்

வலி.வடக்கு,ஒக்.25

சங்கானைக் கல்விக் கோட்டப் பாட சாலைகளுக்கிடையில் நடைபெற்ற உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 14,16, 18 வயதுப் பிரிவுகளில் முறையே அராலி இந் துக் கல்லூரி, வட்டுக்கோட்டை மத்திய கல் லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆகி யன சம்பியனாகத் தெரிவாகின.

இறுதிப்போட்டிகள் அனைத்தும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்றன.

14 வயதுப்பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் அராலி இந்துக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இதில் அராலி இந்துக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரியை வெற்றிகொண்டது.

16 வயதுப் பிரிவின் இறுதியாட்டத்தில் அராலி இந்துக் கல்லூரியும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியும் மோதிக் கொண்டன.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் அராலி இந்துக் கல் லூரியை வெற்றிகொண்டது.

18 வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டத் தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

இந்த அணிகள் வலய மட்டத்தில் இடம் பெறவுள்ள போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.(3-86)

# பிலிப் நினைவாக உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒ...

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் டாக் டர் பிலிப் ஞாபகார்த்தமான உதைபந்தாட் டப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங் களில் யாழ்.பொது விளையாட்டு மைதானத் தில் நடைபெறவுள்ளது என யாழ். உதைபந் தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ர னிப்பிள்ளை தெரிவித்தார். (3-190)

விளையாட்டு

# தீவக வலயப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன

வலி.வடக்கு, ஒக்.25

தீவகக் கல்விக் கோட்டங்களிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலய மட்டப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் இடம்பெறவுள் ளன.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய கல்விக் கோட்டங்களுக்கு உட்பட்ட 14 வயதுப் பிரிவில் ஆறு பாடசாலைகளும் 16,18 வயதுப்பிரிவுகளில் 7 பாடசாலை களும் கலந்துகொள்கின்றன.

லீக் முறையில் நடத்தப்படும் இப்போட் டிகளில் இன்று ஊர்காவற்றுறை புனித அந் தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

### சென்.பற்றிக்ஸ் – ஹென்றீஸ் வருடாந்த மோதல் வெள்ளியன்று

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக் கும் இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான வருடாந்த உதைபந் தாட்டப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.சென்.பற்றிக்ஸ் கல் லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் 15,17, 19 பிரிவின ருக்கான ஆட்டங்கள் இடம்பெறும்.(3-51-190)

**16 வயதுப் பிரிவு**

* புங்குடுதீவு மகாவித்தியாலயம் எதிர் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்.
* நயினாதீவு கணேசா வித்தியாலயம் எதிர் காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியால யம்.
* புங்குடுதீவு மகாவித்தியாலயம் எதிர் நயினாதீவு கணேசா வித்தியாலயம்.
* காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியா லயம் எதிர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.
* புங்குடுதீவு மகாவித்தியாலயம் எதிர் காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம்.
* நயினாதீவு கணேசா வித்தியாலயம் எதிர் காரைநகர் ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

* ஊர்காவற்றுறை புனித அந்தோனி யார் கல்லூரி எதிர் புங்குடுதீவு மகாவித்தியா லயம்.
* புங்குடுதீவு மகா வித்தியாலயம் எதிர் நயினாதீவு கணேசா வித்தியாலயம்.
* நயினாதீவு கணேசா வித்தியாலயம் எதிர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல் லூரி. (3-86)

### தெல்லிப்பழை கோட்ட மட்ட உதைபந்தாட்டம்:

# மகாஜனாவும் அருணோதயாவும் இணைச் சம்பியன்களாகத் தெரிவு

வலி.வடக்கு,ஒக்.25

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாட சாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 16 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனாவும் அள வெட்டி அருணோதயாவும் இணைச் சம்பி யன்களாகின.

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந் துள்ள தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இறுதியாட்டங்கள் இடம்பெற் றன. 16 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் அளவெட்டி அரு ணோதயக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதையும் போடா ததால் இருஅணிகளும் இணைச் சம்பியன் களாகத் தெரிவாகின.

14 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் அளவெட்டி அரு ணோதயக் கல்லூரியும் மோதின. ஆட்டம் முடிவடையும்போது இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றுச் சம நிலையில் காணப் பட்டமையால் சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் அளவெட்டி அருணோதயக் கல் லூரி 4:3 என்ற கோல்கணக்கில் மகாஜனாக் கல்லூரியை வெற்றி கொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

18 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை மகா ஜனாக் கல்லூரியும் யூனியன் கல்லூரியும் மோதிக்கொள்ள இருந்த போதிலும், மழை காரணமாக போட்டி இடம்பெறவில்லை.

இந்த அணிகளுடைய வெற்றி ஏற் கனவே விளையாடிய போட்டிகளில் பெற்ற கோல்களின் அடிப்படையில் தீர்மானிக்கப் படவுள்ளது.

அதிக எண்ணிக்கையான மாணவர்கள், பொதுமக்கள் இப்போட்டியைக் காணச் சென்றிருந்த போதிலும் உரிய போட்டி நடத்தப்படாமையால் போட்டியைக் கண்டு களிக்க வந்தவர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள். (3-86)

# வீரர்களோடு சேர்த்து பயிற்றுவிப்பாளர்களையும் கௌரவித்துப் பரிசில் வழங்கி ஊக்குவிக்கவேண்டும்!


ஜோக்கின் பிறின்ஸ்.

**யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பயிற்சி முகாம்களை நடத்திவரும் ஜேர்மனியின் தடகளப் பயிற்றுவிப்பாளர் ஜோக்கின் பிறின்ஸ் உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வியின் இரண்டாவது பகுதி இது. முதற்பகுதி நேற் றைய உதயனில் வெளியாகியிருந்தது.**

ஜூலையில் நடைபெற்ற தேசிய தடகள விளையாட்டுப்போட்டியில் யாழ்.மாவட் டத்திலிருந்து பங்குபற்றியோர் எண்ணிக்கை மிகக்குறைவாக இருந்ததனை அவதானிக் கக் கூடியதாக இருந்தது.

அது தொடர்பாக நான் கடுமையாகயோசித் தேன். இங்கு பல திறமைசாலிகள் இலை மறைகாயாக இருக்கிறார்கள். அவர்களை இனங்கண்டு பயிற்சி வழங்குவதன் மூலம் இந்த மாவட்டத்தில் விளையாட்டுத்துறை மேலும் வளர்ச்சியடையும்.

போட்டி ஒன்று நடைபெற்றால் அதில் வேண்டும். அப்பொழுதுதான் தம்மால் இயன்றளவில் முழுமையான பயிற்சிகளை வழங்க அவர்கள் முன்வருவார்கள்; ஊக்கு விக்கப்படுவார்கள் - என்று செவ்வியின் ஒரு கட்டத்தில் தெரிவித்தார் ஜோக்கின்.

* கேள்வி:- தாங்கள் தற்போது வழங் கும் 10 நாள் பயிற்சியின் மூலம் முழுமையான நுட்பங்களை அறிந்து கொள்ள முடியுமா?

* பதில்:- இல்லை. நான் தற்போது சில வகையான நுட்பங்களையே அறிமுகப் படுத்துகின்றேன். சகல தொழில் நுட்பங் களையும் பயிற்றுவிப்பது என்றால் கணனி போன்ற தொழில்நுட்பச் சாதனங்களும் நிறைய நிதியும் தேவை. நான் தொழில்நுட் பம் தொடர்பான பயிற்சியை [illegible]ழங்குவது டன் அது தொர்பான கருத்தம[illegible]வுகளையும் இந்த 10 நாள்களும் செய்யவுள்ளேன்.

விளையாட்டு வீரர்களை இப்பயிற்சி முகாமுக்கு அழைக்காமல் பயிற்றுவிப்பா

## ஜேர்மனியின் தடகள பயிற்றுநர் ஜோக்கின் இப்படிக் கூறுகிறார்...

பங்குபற்றி வெற்றியீட்டிய வீரவீராங்கனை களைக் கௌரவித்து ஊக்குவிக்கின்றோம். இது அனைத்து நாடுகளிலும் உள்ள நடை முறை. இது மாற்றியமைக்கப்படவேண்டும். வெற்றி பெற்ற வீரர்களை ஊக்கப்படுத்து வதற்காக வெகுமதிகளை வழங்கிக் கௌர விப்பது போல அவர்களுக்குப் பயிற்சி வழங்கும் பயிற்றுவிப்பாளர்களுக்கும் வெகுமதிகளை வழங்கிக் கௌரவப்படுத்த

ளர்களை அழைத்தமைக்கு முக்கிய காரணம் உள்ளது. அவர்கள் தமது சுற்றாடலைப் பற்றி யும் தாம் பயிற்றுவிக்கும் வீரர்களுடைய திறமைகளையும் நன்கு இனம் கண்டு வைத் திருப்பார்கள். அதற்கு ஏற்றவாறு அவர்கள் பயிற்சிகளை வழங்குவார்கள். அதனால் தான் முதலில் பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்க முன்வந்துள்ளோம்.

* கேள்வி: தடகளப் பயிற்றுவிப்பாளர் களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?



* பதில்: பயிற்சிகளை வழங்குவதற்கு வெளிநாடுகளில் இருந்து நிபுணர்களை வரவழைப்பது மிகவும் தவறானது. இந்த நாட் டிலுள்ள அனுபவம்வாய்ந்த பயிற்சியாளர் களைக் கொண்டு பயிற்றுவிப்பதே சாலச் சிறந் தது. எமது அனுபவங்கள் அறிவு மற்றும் திறமைகள் என்பவற்றைப் பயிற்சியின் போது வழங்குகின்றேன். இங்கு பயிற்சி பெறுவோர் அவற்றைப் பெற்று தமது வீரர்களுக்கு வழங்கி சிறந்த தடகள வீரர்களை உருவாக்கக் கடு மையாக உழைக்கவேண்டும்.

பயிற்றுவிப்பாளர்கள் தமது நிலையை உணர்ந்து செயற்படவேண்டும். விளையாட் டுத்துறையில் முன்னணியில் இருப்பவர் களுக்கு மட்டும் பயிற்சி வழங்குவதோடு மட்டும் நின்று விடாது பின்னணி வீரர்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும்.

**செவ்வி கண்டவர்: வசந்தன்**

**சுஸந்திகாவுக்கு நடந்தது....**

தற்போது இலங்கையைப் பொறுத் தவரை முன்னணித் தடகள வீராங்கனையாக இருந்த சுஸந்திகாவை மேலும் முன்னுக்குக் கொண்டுவரவே அனைவரும் பிரயத்தனம் செய்தனர். ஆனால் அவர் தற்போது ஓய்வு பெறும் நிலைக்கு வந்துவிட்டார். ஆனால் அவருடைய இடத்தை நிவர்த்தி செய்வ தற்கு எந்த ஒரு வீரரையும் நாம் தயார் படுத்தி வைத்திருக்கவில்லை. இது இங்கு மட்டு மல்ல எல்லா நாடுகளிலும் உள்ள பெரும் குறை பாடு. குறிப்பாக, எமது நாடும் இது போன்றே முன்னைய காலங்களில் தவறு செய்து வந்தது. அதனை உணர்ந்து தற் போது முன்னணி வீரர்களுக்கு பயிற்சி வழங்கும் அதேநேரம் இரண்டாம், மூன் றாம் நிலையில் உள்ளவர்களுக்கும் கடுமை யான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அதே போல பயிற்சி வழங்கும் ஒவ்வொருவரும் முதல் தர வீரர்களுக்கு மட்டுமல்லாது ஏனையவர்களுக்கும் சமமான பயிற்சிகளை வழங்க வேண்டும்.

* கேள்வி: விளையாட்டுத்துறையை மேம்படுத்த என்ன செய்யவேண்டும்?

* பதில்: விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு நிறையப் பணம் செல வழிக்கவேண்டும். அதன் மூலம் நிறையப் பயன்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். எமது நாட்டைப் பொறுத்தவரை விளை யாட்டை மேம்படுத்துவதற்கு பெருமளவான நிதியை ஒதுக்கி யுள்ளது.

சீனாவில் நடை பெறவுள்ள ஒலிம் பிக் போட்டிக்கென அந்த நாடு பெருமள வான நிதியைச் செலவீடு செய்துள்ளது. இவ் வாறு நிறையச் செலவு செய்தாலும் அதன் மூலம் நிறைய நிதியைப் பெற்றுக்கொள்ள லாம். அதேபோல இலங்கை அரசும் விளை யாட்டுத்துறையின் மேம்பாட்டிற்கு பெரும ளவு நிதியை ஒதுக்கீடு செய்து பயிற்சிகளை யும் அதற்கான உபகரணங்களையும் பெற் றுக்கொடுக்குமானால் இன்னும் குறிப் பிட்ட சில ஆண்டுகளில் இலங்கையின் விளையாட் டுத் தரம் சர்வதேச அளவிற்கு உயர்வடையும்.

* கேள்வி: இந்தப் பயிற்சிகள் எதிர் காலத்தில் தொடர்ந்து இடம்பெறுமா?

* பதில்: அது தொடர்பாக என்னால் திட்டவட்டமாக எதுவும் கூறமுடியாது. இலங்கை அரசும் விளையாட்டுத்துறை அமைச்சும் - இலங்கை மெய்வல்லுநர் சங்கமும் ஜேர் மன் அரசுடன் மேற்கொள்ளும் பேச்சுக்களின் அடிப்படையிலேயே இவை தொடருமா இல்லையா என்ற முடிவு கிடைக்கும்.

இங்கு வழங்கப்படும் பயிற்சிகள் போல ஏனைய மாவட்டங்களிலும் நடத்தப்பட வேண்டும். விளையாட்டுக்கள் தொடர்பான பயிற்சிகள் உயர்ந்த மட்டத்தில் நடை பெற்று வருகின்றன. அது எமது அரசுடன் பேசி எடுக்கப்படும் தீர்மானத்தில் தான் தங்கியுள் ளது. இது தொடர்பாக அடுத்த ஜனவரி மாதம் தான் எதுவும் கூறமுடியும்.

* கேள்வி: உங்களைப் பற்றிக் கூற முடியுமா?

* பதில்: நான் ஜேர்மன் நாட்டு தேசிய அணி பயிற்றுவிப்பாளராகப் பணிபுரிந்து வருகிறேன். 18 வயதில் தடகளப் போட்டி யில் பங்குபற்றி சாதனைகள் பலவற்றை நிலை நாட்டியிருந்தாலும் ஒலிம்பிக் மற்றும் சர்வ தேசப் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. தற்போது ஜேர்மனியி லுள்ள உயர்நிலைப் பாடசாலை ஒன்றில் தட களப் போதனாசிரியராகக் கடமையாற்றுகின் றேன். அங்கு 800 மாணவர்களும் 125 ஆசி ரியர்களும் இருக்கின்றார்கள்.

அவர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை வழங்கிவருகின்றேன். இப்பொழுது எமக்கு அங்கு பருவகால விடுமுறை. அதனைப் பயன்படுத்தி இங்கு பயிற்சி அளிக்கவந்துள் ளேன். உடற்கல்வி, விஞ்ஞானம் மற்றும் தாவரவியல் ஆகியவற்றில் கலாநிதிப் பட் டம் பெற்றுள்ளேன். (ஐ)

# சிறுவர்தினப் போட்டி முடிவுகள்

கரவெட்டி,ஒக்.25

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் கரவெட்டி கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே சர்வதேச சிறுவர் தினம் மற்றும் முதியோர் வாரம் தொடர்பாக நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**சிறுவர் தினக் கட்டுரை**

பிரிவு 1- ம.சிந்துஜா(வடமராட்சி மகளிர் கல்லூரி), தே.கௌதமி (கரணவாய் ம.வி.), இ.ஆர்த்தியா(விக்னேஸ்வராக் கல்லூரி).

பிரிவு 2 - பா.நிலோஜினி(வடமராட்சி ம.மகளிர் கல்லூரி), தி.சுஜாதா (தேவரையாளி இந்துக் கல்லூரி), சி.ஜெயதாரகா(கம்பர்மலை வித்தியாலயம்).

பிரிவு 3 - மு.மயூரிக்கா(விக்னேஸ்வராக் கல்லூரி), சி.சாளினி(வடமராட்சி ம.மகளிர் கல்லூரி).

**சிறுவர் தினக் கவிதை**

பிரிவு 2 - சி.அனுப்பிரியா (விக்னேஸ்வராக் கல்லூரி), ம.திவ்யா (வடமராட்சி ம.மகளிர் கல்லூரி), சி.கேதினி (கம்பர்மலை வித்தியாலயம்)

பிரிவு 3 - ந.தர்சிகா(விக்னேஸ்வராக் கல்லூரி).

**முதியோர் வாரக் கட்டுரை**

பிரிவு 1- சி.பிரதீப்(கம்பர்மலை வித்தியாலயம்), த.துவாரகன்(விக்னேஸ்வராக் கல்லூரி), சு.தரணிகா(வடமராட்சி ம.மகளிர் கல்லூரி).

பிரிவு 2- சி.பிறேமிலா(வடமராட்சி ம. மகளிர் கல்லூரி), சி.கோபிதா(கம்பர்மலை வித்தியாலயம்), செ.சாருமதி (கரணவாய் ம.வி.)

பிரிவு 3 - ம.குருப்பிரியா(வடமராட்சி ம.மகளிர் கல்லூரி), ம.மதுசூதனன் (தேவரையாளி இந்துக் கல்லூரி), சோ.வருணா (விக்கினேஸ்வராக் கல்லூரி).

**முதியோர் வாரக் கவிதை**

பிரிவு 1- ஈ.இரஞ்சினி(விக்னேஸ்வராக் கல்லூரி), மு.ஜதுநந்தா (வடமராட்சி ம.மகளிர் கல்லூரி) வி.பிறேமிலா (தேவரையாளி இந்துக் கல்லூரி)

பிரிவு 2 - த.இராஜநந்தினி(வடமராட்சி ம.மகளிர் கல்லூரி), வ.பத்மஸ்ரீ (தேவரையாளி இந்துக் கல்லூரி).

பிரிவு 3 - கு.ஷாலினி(வடமராட்சி ம.மகளிர் கல்லூரி), யோ.வித்தியா (விக்னேஸ்வராக் கல்லூரி). (3-70-203)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி/தருமபுரம் இல.1 அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவன்

செல்வன் சூரியபிரகாஸ் கோபிகிருஸ்ணா



2005ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப் பெற்று கண்டாவளைக் கோட் டத்தில் முதலாவது இடத்திலும் கிளிநொச்சி மாவட்டத்தில் 4ஆவது இடத்திலும் சித்தியடைந்ததையும் 2004ஆம் ஆண்டு தமிழ்த்தினப் பாவோதல் போட்டி யில் தேசியமட்டத்தில் வெள்ளிப் பதக்கம் பெற்று வந்ததையும் பாராட்டுவதுடன் இவருக்கு ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி வாழ்த்துகின்றோம்.

உழவன் ஊர்,
தருமபுரம்.

அப்பா, அம்மா, அப்பப்பா,
அப்பம்மா, அம்மம்மா.

(41915)(18-32-16-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*கிளி/தருமபுரம் இல.1 அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி*

**செல்வி அரசரத்தினம் சனோஜினி**

*2005 ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகளைப் பெற்று கண்டாவளைக் கோட்டத்தில் 3 ஆவது இடத்தில் சித்தி அடைந்ததைப் பாராட்டுவதுடன் இவருக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களுக்கு நன்றிகூறி வாழ்த்துகின்றோம்.*

விவேகானந்த நகர், கிளிநொச்சி. (41914)(32-19-16) சித்தப்பா, சித்தி.

**MCS** 324, Palaly Road, Jaffna. (Near Alady Junction)

**G.C.E A/L - GIT**

மாணவருக்கான முன்னோடிக்

**கணனி கருத்தரங்கு**

காலம் : 28/10/2005 மாலை 4.00 மணி
அனுமதி : இலவசம்
இடம் : நிறுவன விரிவுரை மண்டபம்

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் பதிவுகளை முன்கூட்டியே, நேரில் மேற்கொள்ளவும்.

*****Supported by UNDP/JRRP*****

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் ரவிக்குமார்

தொல்புரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ரவிக்குமார் அவர்கள் 22.10.2005 அன்று பிரான்ஸில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - குமரேஸ்வரி தம்பதியரின் அருமைப் புதல்வனும் மஞ்சுளாவின் அன்புக் கணவரும் ஈழவன், நிலவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவீந்திரன் (கண்ணன், இலங்கை மின்சாரசபை - சித்தன்கேணி), நளாயினி (கனடா), திருவேணி (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

சு.ரவீந்திரன் (கண்ணன்)
*சகோதரன்.*

(41911)(32-16-19)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

யாழ்.நகரில் மானிப்பாய் வீதியில் K.K.S. வீதிச் சந்திக்கு அருகில் 2 பரப்புக் காணியும் 4200 சதுர அடி விஸ்தீரணமுள்ள கட்டடமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: குமார் அல்லது கலா T.P. 011 2597183, 011 5364293. (சி-45692)

கொக்குவில் கிழக்கு, பிறவுண் வீதியில் உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S.ஸ்ரீஸ்கந்தராசா, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு (கல்வாரிச் சேர்ச்சுக்கு அருகில்) (41800)

மானிப்பாய் வலி.மேற்கு உடுவில் றோட், சங்குவேலி வீதி, கலட்டி வளவு ஒழுங்கையில் 6 பரப்புக் காணி விற்பனைக்கண்டு. (பனை, தென்னை உள்ளது. நல்ல குடிதண்ணீர் ஊற்று). தொடர்பு: T.P.No.: 011 2507927. (41906)

### வீடு விற்பனைக்கு

நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் (பொற்பதி வீதி) 3 அறை, கோல், குசினி, சாப்பாட்டறை, குளியலறை, Toilet -2, Varandah, மொட்டைமாடி தரம், அழகு நிறைந்த புதிய வீடு நியாயமான விலைக்கு விற்பனைக்குண்டு. குறிப்பு:- நாமகள் ஒழுங்கையில் (12.03.2005) உதயனில் விளம்பரப் படுத்தியதல்ல . தொடர்பு: சு.பரமானந்தன், நாமகள் ஒழுங்கை, கொக்குவில். (41833)

### வீடும், வளவும் விற்பனைக்கு

K.K.S. வீதியில் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் பூநாறி மரத்தடிக்கும் இடையில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியுடன் கூடிய சிறிய வீடு வளவு விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 3151569. (41918)

### வீடு வாடகைக்கு

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகளுடனும் அமைந்த வீடு வாடகைக்குண்டு. N.G.O இற்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு: T.P.No.: 077 6510057 (41921)

### தேவை

திருநெல்வேலியில் போட்டோபிரதி, பிறிண்டிங் அத்துடன் வேறு சேவைகளையும் வழங்கும் நிறுவனமொன்றுக்கு ஆண், பெண் பணியாளர்கள் தேவை. தங்குமிட வசதி தரப்படும்.
உடன்தொடர்பு: 021 222 2478.

(41919)(42-22-16-19)

### பிற்போடப்பட்டுள்ளது

கொக்குவில் சனசமூக நிலைய (பிரம்படி) வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் 15.01.2006 இல் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

(41916)(42-22-19-16) நிர்வாகம்.



**northumbria UNIVERSITY**

*great learning great experience great future*

**லண்டனின் அதி சிறந்த நவீன பல்கலைக்கழகம்**

நொதம்பிரியா பல்கலைக்கழகமானது (Northumbria University) உயர்தரமான பட்டப்படிப்பிற்கும், பட்டதாரிகளின் தொழில்வாய்ப்பிற்கும் தனிநிகர் பெற்று விளங்குகின்றது. Newcastle நகரை மையமாகக் கொண்ட இப்பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் சிறந்த கற்பித்தல், குறைந்த வாழ்க்கைச் செலவு வசதிகளையும், மகிழ்ச்சிகரமான அதி சிறந்த கற்றல் சூழலையும் அனுபவிக்கிறார்கள்.

நொதம்பிரியா பல்கலைக்கழகமானது பல்வேறு துறைகளிலும் மாணவர்கள் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு வருடமும் ஜனவரியிலும் செப்ரெம்பரிலும் அனுமதி வழங்கி வருகின்றது.

* Applied Computing – BSc (Hons)
* Applied Computing Technologies – MSc
* Accounting and Finance – BA (Hons)
* The Newcastle Business School – MBA
* Business and Management
* Business with Finance – BA (Hons)
* Business with Marketing - BA (Hons)
* Business Information Technology
* Engineering
* Microelectronic and Communication Engineering – MSc
* Mechanical Engineering - MSc

இவற்றைப் பற்றிய கருத்தரங்கினை நடத்துவதற்கு **Dr. Gerry Hayden,** சர்வதேச அபிவிருத்தி, கணனியியல் கல்லூரி, பொறியியல் துறை மற்றும் தகவல் விஞ்ஞானத்துறைத் தலைவர் லண்டனிலிருந்து வருகை தருகின்றார்.

**இடம் : நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

**காலம் : 26 ஒக்ரோபர் 2005 (புதன்கிழமை) காலை 10 மணி**

**இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் ஆர்வலர்கள் அனைவரும் திரண்டு வந்து தவறாது கலந்து பயன்பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்துடன் இணைந்து**

**NIIT®** 347 – 2/1, Kasturiyar Road, Jaffna. T.P : 021-2227250, 021-4590567

**enabling the young professional for a better future**

# 'வில்மா' சூறாவளி கியூபாவில் மையம்; இன்று புளோரிடாவைத் தாக்கும் அபாயம்!

மியாமி,ஒக்.25

கரீபியன் கடலில் உருவாகிய 'வில்மா' சூறாவளி கியூபாவின் மேற்குப்பகுதிக் கரையோரங்களைத் தாக்கத் தொடங்கியுள்ளது.

அங்கு பலத்த காற்றுடன் கூடிய கடும் மழை பெய்துவருகிறது. கியூபாவின் கரையோரப் பகுதிகளும் பல கிராமங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கியூபாவின் கரையோரப் பகுதிகளிலிருந்து ஏற்கனவே 6 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வெளியேறிவிட்டனர்.

'வில்மா' சூறாவளி புளோரிடாவை நோக்கி நகர்ந்துவரும் நிலையில், கியூபா மீதான தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இந்த அனர்த்தத்தில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. குறைந்தது 7 பேர் காயமடைந்துள்ளனர். 'வில்மா' சூறாவளி மணிக்கு 185 கி.மீ. வேகத்தில் வீசிவருகிறது.



இப்புயல் இன்று காலையளவில் புளோரிடாவின் தென்மேற்குக் கரையோரப் பகுதிகளையும், புளோரிடாவின் மையப் பகுதியையும் தாக்கும் சாத்தியம் இருப்பதாக அமெரிக்க வானிலை அவதானிப்பு மையம் தெரிவித்துள்ளது.

புளோரிடாவின் கரையோரப்பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் வெளியேறியுள்ளனர்.

எனினும், பலர் வீடுகளை விட்டு வெளியேற மறுத்துவருகின்றனர்.

மெக்ஸிகோவைத் தாக்கிய 'வில்மா' சூறாவளி முற்றாக அங்கிருந்து அகன்றுவிட்டது. அங்கு மீட்புப் பணிகளை மேற்கொள்ள மீட்புப் படையினர் திட்டங்களை வகுத்துவருகின்றனர். தற்போதுதான் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஓரளவு செல்லக்கூடியதாக வுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

## ஆப்கானில் பூகம்பம்: 5 பேர் உயிரிழப்பு!

காபூல்,ஒக்.25

ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பூகம்பத்தில் 5 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர் ஏராளமான வீடுகள் சேதமடைந்தன.

இந்தப் பூகம்பம் பாகிஸ்தான் எல்லையுடன் உள்ள பகுதியில் ஏற்பட்டது. இராணுவ மீட்புக்குழுவினர் பாதிக்கப்பட்ட பகுதிக்கு விரைந்துள்ளனர் என பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் முகமது ஜாகீர் அஸிமி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை இரண்டு நிலஅதிர்வுகள் பதிவாகியுள்ளன. முதல் அதிர்வு ரிச்டர் அளவில் 5.2 ஆகவும் இரண்டாவது அதிர்வு 4.9 ஆகவும் பதிவாகியுள்ளது என்று பாகிஸ்தான் பூகம்ப ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பூகம்பத்தில் ஏற்பட்ட சேத விவரங்கள் முழுமையாகத் தெரியவர வில்லை. ஆனால், இராணுவத் தளபாடங்களுக்குச் சேதமில்லை என்று கூறப்படுகின்றது. (க)

## சூறாவளிக்கு பெயர் வைக்க திணறுகின்றனர் நிபுணர்கள்

மியாமி,ஒக்.25

இந்த ஆண்டில் அடுத்தடுத்து 20இற்கும் மேற்பட்ட சூறாவளிகள் உருவானதால் இனி உருவாகும் சூறாவளிக்கு ஆங்கில எழுத்து வரிசைப்படி புதிய பெயர் வைக்க முடியாமல் விஞ்ஞானிகள் திணறுகின்றனர். இதனால் கிரேக்க மொழியில் பெயர் வைக்கத் தொடங்கியுள்ளனர்.

அட்லாண்டிக் பெருங்கடலில் ஆண்டுதோறும் பத்துக்கும் மேற்பட்ட சூறாவளிகள் உருவாகின்றன. இவற்றுக்கு ஆங்கில எழுத்துகள் 'ஏ முதல் இசட்' வரையிலான எழுத்துகளில் தொடங்கும்படி பெயர் வைக்கிறார்கள். ஆங்கிலத்தில் உள்ள 26 எழுத்துகளில் கியூ, யு, எக்ஸ், வை. மற்றும் இஸட் எழுத்தில் தொடங்கும் பெயர் வைப்பது வழக்கத்தில் இல்லை.

எனவே, எஞ்சிய 21 எழுத்துகளில் தொடங்கும் பெயர்கள்தான் வைக்கப்படும். துரதிஷ்டவசமாக இந்த ஆண்டு அட்லாண்டிக் கடலில் இதுவரை 21 சூறாவளிகள் உருவாகிவிட்டன. அவை பெரும் அழிவையும் ஏற்படுத்தியுள்ளன. இவற்றுக்கு கத்ரீனா, ரீட்டா, டென்னிஸ், வில்மா உட்பட 21 பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தற்போது மேலும் ஒரு சூறாவளி அட்லாண்டிக் கடலில் உருவாகியுள்ளது. இந்த சூறாவளி வடமேற்கு திசையில் நகர்ந்து வருவதாக மியாமியில் உள்ள தேசிய சூறாவளி மையம் எச்சரித்துள்ளது.

இந்தப் புதிய சூறாவளிக்கு ஆங்கிலப் பெயர் வைக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 1933ஆம் ஆண்டுக்குப் பிறகு இப்போதுதான் ஒரே ஆண்டில் 21இற்கும் அதிகமான சூறாவளிகள் ஏற்பட்டுள்ளன. இதனால், இப்போது உருவாகியுள்ள 22ஆவது சூறாவளிக்கு கிரேக்க எழுத்து வரிசைப்படி 'அல்பா' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

அட்லாண்டிக் கடற்பகுதியில் சூறாவளிக் காலம் நவம்பர் 30ஆம் திகதி வரை நீடிக்கும் நிலை இருப்பதால் இன்னும் பல சூறாவளிகள் உருவாக வாய்ப்புகள் இருக்கிறது. அவற்றைக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகளுக்கு பெயர் வைக்கும் சிக்கலும் காத்திருக்கிறது. (க)

## சுரங்கப் பாதை அமைத்து 19 கைதிகள் தப்பி ஓட்டம்!

### கௌதமாலாவில் சம்பவம்

எஸ்குயின்லா, ஒக்.25

தென் அமெரிக்காவின் கௌதமாலா நாட்டின் சிறையில் சுரங்கப் பாதையமைத்து 19 கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர்.

கௌதமாலா நாட்டில் எஸ்குயின்லா என்ற இடத்தில் சிறைச்சாலை உள்ளது. இந்தச் சிறை முன்பு இராணுவத்தினரின் கோட்டையாக இருந்தது. இந்தச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்குக் கடும் நிபந்தனைகள் விதிக்கப்படுவது வழக்கம். அதனால், இந்தச் சிறையை கைதிகள் 'சிறிய நரகம்' என்றே அழைத்தனர். 25 சதுர அடி பரப்பளவு உள்ள அறையில் 40 கைதிகள் தூங்கவைக்கப்படுவது, பலரை வெறும் தரையில் படுக்கவைப்பது போன்ற மோசமான சூழ்நிலை இங்கு உள்ளது.

இந்நிலையில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 19 கைதிகள் சுரங்கப்பாதை அமைத்துத் தப்பிச் சென்றுள்ளனர். இவர்களில் 50 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளும் அடங்குவர். இவர்கள் கொலை மற்றும் கடத்தல் வழக்குகளில் தண்டனை பெற்ற கைதிகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## அமெ. கூட்டுப்படைகள் மீதான தாக்குதலுக்கு ஈராக்கியர்கள் ஆதரவு தெரிவிக்கின்றனராம்

### பிரிட்டனின் ரகசியக் கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது

லண்டன்,ஒக்.25

ஈராக்கில் உள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டன் படைகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதற்கு 45 சதவீத ஈராக்கியர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். இத் தகவல் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் நடத்திய இரகசியக் கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து லண்டனிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கிலப் பத்திரிகை 'சண்டே டெலிகிராப்'பில் தெரிவித்துள்ளதாவது:-

பிரிட்டன்பாதுகாப்பு அமைச்சகம் அமைத்த ஈராக் பல்கலை. ஆராய்ச்சிக் குழு கடந்த ஒகஸ்டில் இரகசியக் கருத்துக் கணிப்பை நடத்தியது. ஈராக்கில் தற்போது பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளின் செயற்பாடுகள், அவர்கள்மீது சதாம்ஆதரவுத் தீவிரவாதிகள் நடத்தும் தற்கொலைத் தாக்குதல்கள் உட்பட பல பிரச்சினைகள் குறித்து ஈராக் மக்களின் மன நிலையைத் தெரிந்துகொள்ள இந்த இரகசியக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

இதில் 45 சதவீத ஈராக்கியர்கள் அமெரிக்க, பிரிட்டன் படையினர் மீது நடத்தப்படும் தற்கொலைத் தாக் குதல்கள் நியாயமானதே என்று தெரிவித்துள்ளனர். 82 சதவீத மக்கள் கூட்டுப் படைகள் ஈராக்கில் தங்கியிருப்பதற்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அமெரிக்க மற்றும் பிரிட்டன் படையினரால் தான் நாட்டின் பாதுகாப்பை மேம்படுத்த முடியும் என்ற கருத்துக்கு ஒரு சதவீதத்தினர் கூட ஆதரவு தெரிவிக்கவில்லை.

ஈராக்கின் தென்பகுதியில் பிரிட்டனைச் சேர்ந்த எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 97 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

-இவ்வாறு பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## 5 பேருக்கு புனிதர் பட்டம் பாப்பரசர் வழங்கினார்

வத்திக்கான்,ஒக்.25

ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த 5 பேருக்கு வத்திக்கானில் நடைபெற்ற விழாவில் புனிதர் பட்டம் வழங்கினார் பாப்பரசர் 16ஆவது பெனடிக்ற்.

இவர் பாப்பரசராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டபின் புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுவது இதுவே முதல் முறை ஆகும். வத்திக் கானிலுள்ள புனித பீற்றர் சதுக்கத்தில் பாப்பரசர் தலைமையில் நடைபெற்ற திருப்பலி நிகழ்ச்சியில், சிலிநாட்டைச் சேர்ந்த பாதிரியார், உக்ரைனைச் சேர்ந்த இரு பாதிரியார்கள், கபூச்சின் சபையைச் சேர்ந்த அருட் சகோதரர் மற்றும் ஓர் அறப்பணியாளர் சபையை நிறுவிய மதகுரு (இருவரும் இத்தாலி) ஆகியோருக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

பாப்பரசரின் அறிவிப்பை அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள், கைகளில் அந்தந்த நாட்டுக் கொடிகளுடன் வாழ்த்தி வரவேற்றனர். (க)

## கிர்கிஸ்தான் எம்.பி. சிறைக்குள் கொலை!

மேஸ்டா,ஒக். 25

கிர்கிஸ்தான் நாட்டுச் சிறைச்சாலைக்குள் வைத்து அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கைதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் கிர்கிஸ்தானும் ஒன்றாகும். இங்கு பெருமளவு சிறைச்சாலைகள் உள்ளன. இவற்றில் 20 ஆயிரத்திற்கும் அதிகமான கைதிகள் உள்ளனர்.

மோல்டா வினோகலா நகரில் உள்ள சிறைச்சாலையில் கைதிகளின் குறைகளைக் கேட்டறிவதற்காக கிர்கிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர் டன்க்பெக் அக்மாத் என்பவர் இரண்டு உதவியாளர்களுடன் சென்றார்.

கைதிகளின் குறைகளைக் கேட்டறிந்து விட்டு சிறைச்சாலையில் அமைந்துள்ள வைத்தியசாலைக்குச் சென்று நோயாளிகளாகவுள்ள கைதிகளை பார்த்துக் கொண்டிருந்தபோது திடீரென கைதிகள் கலவரத்தில் ஈடுபட்டனர்.

கைதிகள் நாடாளுமன்ற உறுப்பினரையும் அவரின் இரண்டு உதவியாளர்களையும் பணயக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டனர். இதைத்தொடர்ந்து கைதிகளுக்கும், பொலிஸாருக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. கைதியொருவர் திடீரெனக் கைதிகள் நாடாளுமன்ற உறுப்பினரையும் அவரது உதவியாளர்களையும் சுட்டுக்கொன்றார்.

இச் சம்பவத்தையடுத்து எதிர்க்கட்சிகள், பிரதமர் பதவிவிலக வேண்டும் எனத் தெரிவித்துள்ளன. (க)

## உலக அரங்கில்

### ஊடகங்கள் மீதான கட்டுப்பாட்டை நீக்கக்கோரி நேபாளத்தில் வழக்கு

நேபாளத்தில் ஊடகத்துறையினர் மீதான புதியசட்டத்தை ரத்துச்செய்யக்கோரி நேபாள ஊடகவியலாளர் அமைப்பு உட்பட 9 அமைப்புகள் நேபாள உச்சநீதிமன்றத்தில் கூட்டாக மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளன.

மக்களுக்குள்ள தகவல் அறியும் அரசியல் சாசன உரிமையை இந்தப் புதிய சட்டம் மீறுகிறது என அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய சட்டம் ஊடகங்களை பொறுப்புடன் செயற்படக்கோருவது மட்டுமே என நேபாள அரசு தெரிவித்துள்ளது. (க)

## தனிநபர்களுக்கு ஆயுதங்கள் தேவையா? பிரேஸிலில் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு

டியோட், ஒக். 25

பிரேஸிலில் தனிநபர்கள் துப்பாக்கிகள் மற்றும் குண்டுகளை வைத்திருக்கலாமா என்பது குறித்து தேசிய அளவிலான மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆயுதங்கள் பெருமளவில் குறைக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் இரண்டு ஆண்டுகளுக்குமுன் கொண்டுவரப்பட்ட ஆயுதக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இந்த வாக்கெடுப்பு நடைபெற்றது.

இந்த வாக்கெடுப்புக்கு ஆதரவாக மக்கள் வாக்களிக்க வேண்டும் என பிரேஸில் அரசும், கிறிஸ்தவத் திருச்சபையும், மனித உரிமை அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன. எனினும், நாட்டில் நிலவுகின்ற குற்றங்களின் எண்ணிக்கையை முன்நிறுத்தி இந்தச் சட்டத்துக்கு எதிராக வாக்களிக்குமாறு ஆயுதங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் பிரசாரம் செய்தன.

கடந்த ஆண்டு பிரேஸிலில் 40 ஆயிரம் பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதன் காரணமாக உலகிலேயே மிக வும் பாதுகாப்பற்ற பகுதிகளில் ஒன்றாகப் பிரேஸில் உள்ளது. வாக்கெடுப்பு நடத்தப்பட முன் நடந்த கருத்துக் கணிப்பில் ஆயுதங்களை வைத்துக்கொள்ளலாம் என பெரும்பாலான மக்கள் தெரிவித்தனர் எனவும் கூறப்படுகிறது. (க)



## இலங்கை மின்சாரசபை - யாழ்.பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
|---|---|
| 2005.10.29 | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம். |
| 2005.11.05 | இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், மருத்துவபீடப் பிரதேசம், பொற்பதி, சங்குவேலி. |
| 2005.11.12 | கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர். |
| 2005.11.19 | உரும்பிராய், கோண்டாவில், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப் பகுதி. |
| 2005.11.26 | புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி. |
| 2005.12.03 | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை. |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின்பொறியியலாளர்,
**இலங்கை மின்சாரசபை,**
**யாழ்.பிரதேச அலுவலகம்,**
**சுன்னாகம்.**
**2005.10.24.**

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
(அ-45910)(42-16-45) இலங்கை மின்சாரசபை

## செயன்முறைப் பரீட்சை நாளை காலையே நடக்கும்

யாழ்ப்பாணம்,ஒக்.25

மோட்டார் வாகன சாரதிகளுக்கான செயல்முறைப் பரீட்சை நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும் என்று மோட்டார் வாகனப் பரிசோதகர் குலஸ் தெரிவித்துள்ளார்.

இந்த செயல்முறைப் பரீட்சை நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

பயிற்சியின் நிமித்தம் கொழும்புக்குத் தான் செல்லவுள்ளதால் இந்த செயல்முறை பரீட்சையின் நேரம் மாற்றப்பட்டுள்ளது என வும் -

குறிப்பிட்ட நேரத்தில் பரீட்சைக்கு வரமுடியாதவர்கள் அன்று பிற்பகல் 3 மணிக்கு மோட்டார் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தமது செயல்முறைப் பரீட்சைக் குரிய பிறிதொரு திகதியை பெற்றுக் கொள்ளுமாறும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203-204)

## மாகியப்பிட்டி அபிவிருத்தி சங்கத்துக்கு நிதியுதவி

வலி.தென்மேற்கு,ஒக்.25

ஐ.நா.அபிவிருத்தித் திட்டம் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்குவதற்கென மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு ரூ.2 லட்சத்தை வழங்கியுள்ளது.

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகம் ஊடாக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இந்த நிதியைப்பயன்படுத்தி முதற் கட்டமாக சங்க உறுப்பினர்களான இருபது பயனாளிகளுக்கு விரைவில் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்க சங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று மாகியம்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஐ.மார்க்கண்டன் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி

**செல்வி சந்திரன் பிரகவி**



2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 127 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். அவரையும் இவருக்கு கல்வியறிவு ஊட்டிய அதிபர் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இப்பாடசாலையில் 16 வருட காலமாக அதிபராக இருந்த

**திரு.கே.வி.குணசேகரம்**

நல்லூர் கோட்டப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றதையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, சகோதரன் (பெற்றோர்).
இராச வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (41920)(45-16-45)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பாலசுப்பிரமணியம் குசலன்



பாலசுப்பிரமணியம் நிருஜன்

தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் யா/இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களான பாலசுப்பிர மணியம் குசலன் 2004 ஆம் ஆண்டு 164 புள்ளிகளையும் பாலசுப்பிரமணியம் நிருஜன் 2005ஆம் ஆண்டு 145 புள்ளிகளையும் பெற்றுச் சித்தியடைந்தனர். இவர்களுக்குக் கல்வியூட்டிய அதிபர் ஆசிரியர்களுக்கு நன்றி கூறுவதுடன் சின்னத்துரை மாமா குடும்பம் (கொழும்பு), கனடா சண்முகநாதன் மாமா குடும்பம், அப்பம்மா ஆகிய பொன்னம்மா (சாவகச்சேரி), செல்வராசா சித்தப்பா குடும்பம் (தாவளை இயற்றாலை), சூரியகுமார் மாமா குடும்பம் (பிரான்ஸ்), சுதா மச்சாள் குடும்பம் (சுவிஸ்), கிருபாகரன் மச்சான் (கனடா), சுதாவதி மச்சாள் குடும்பம் (ஜேர்மனி), இராமலிங்க ஐயர் குடும்பம் (கொடிகாமம்), மகேஸ்வரன் குடும்பம் (கோப்பாய்), கிருஷ்ணராஜா குடும்பம் (கைதடி) ஆகியோர் எருவன் கட்டுப் பிள்ளையார் சக்தி அம்மன் அருளால் மென்மேலும் பல்கலை யும் பெற்று வாழ்வில் உயர்ந்திட வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சாவகச்சேரி. (41898)(46-16-45-42) -அப்பா.



தீபாவளித் திருநாளை முன்னிட்டு அளப்பரிய அன்பளிப்புகள் இனாம்

**WESTERN UNION**
MONEY TRANSFER

வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் **WESTERN UNION** மூலம் பணம் அனுப்பி பணப் பரிமாற்றல் இலக்கம் (MTCN 10இலக்கங்கள்) உங்கள் கைகளில் கிடைத்து விட்டதா?

வங்கிக்கணக்கு தேவையில்லை 24 மணிநேரமும் ஒருசில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணத்துடன் அன்பளிப்பும் கிடைக்க உடன் நாடுங்கள். மேலும் சகல விதமான தொலைபேசி அட்டைகள் Dialog GSM இணைப்புகள் (SIM) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்.

உள்நாட்டு, வெளிநாட்டுக் கடிதங்கள், பொதிகள் உடனுக்குடன் அனுப்பிட




**SRI MURUGAN**
**TELE COMMUNICATION**
**AGENCY POST OFFICE,**
**303, K.K.S. ROAD, JAFFNA.**
**T.P.: 021 222 5392.**

இன்னும் பல சேவைகளையும் அன்பளிப்புகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளவும்.

(C/45909)(42.16.45)


## ஆஸ்பத்திரியின் தேவைகளை மாவை.கேட்டறிந்தார்

யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மாவை.சேனாதி ராசா கடந்த செவ்வாயன்று பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கு நேரில் சென்று அதன் செயற்பாடுகளைப் பார்வையிட்டதுடன் குறைபாடுகளையும் மற்றும் தேவைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து அங்கு விஜயம் செய்த அவர், வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் செல்வி திருத்தேவி திருநாவுக்கரசுவிடம் வைத்தியசாலையின் முக்கிய தேவைகள் மற்றும் வார்ட்டுகள், பிரசவ விடுதி ஆகியவற்றை இயங்கச் செய்வதில் எதிர் நோக்கப்படும் தாமதங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டாரெனத் தெரிவிக்கப் பட்டது. வைத்திய சாலை அபிவிருத்தி சங்கத் தலைவர் க.செல்வத் திரையும் மாவை. சேனாதிராசா எம்.பியிடம் வைத்தியசாலையின் அபிவிருத்தி தேவைகள் பற்றி எடுத்துக் கூறினார். (எ-135)

## செயற்குழுக் கூட்டம்

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் செயற்குழுவில் அங்கம் வகிப்போர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-204-203)


**NORTH LANKA**
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

O/L தகைமையுடன் நீங்களும்
**Trinity University**
இனது பட்டதாரியாகுங்கள்.

**B.Sc. (Computer Science) B.Sc. (Mechanical Eng.)**
**Diploma in MS office, Hardware Eng.(1 month), Visual Basic**

புதிய பிரிவு ஆரம்பம்:
எமது நிறுவனத்தில் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்கள்

28-10-2005 முதல் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

பிரதான வீதி சங்கானை ☎ 0214591647


## மரண அறிவித்தல்

## இராமலிங்கம் சதீஸ்

*(உரிமையாளர், சதீஸ் வீடியோ )*



நுணாவில்கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்டிருந்த இராமலிங்கம் சதீஸ் அவர்கள் நேற்று (24.10.2005) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் இராமலிங்கம் - சாந்தநாயகி தம்பதியரின் அன்பு மகனும் சந்திரசேகரம் - கமலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் சுதர்சினியின் (யூனியன் அஷ்யூரன்ஸ்) அன்புக் கணவரும் மாலவனின் அன்புத் தந்தையும் லதா (ஜேர்மனி), ஐங்கரன் (சிலிங்கோ இன்சூரன்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாலன், நளாயினி, கௌரிபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலசந்திரனின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.10.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*"லதா இல்லம்",*
*கல்லடிமூட்டு ஒழுங்கை,*
*நுணாவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*
T.P.: *0777 252042.* (41924)(42-16-45)

*தகவல்:*
**ச.சுதர்சினி (மனைவி)**
(யூனியன் அஷ்யூரன்ஸ்),
**இ.ஐங்கரன் (தம்பி)**
(சிலிங்கோ இன்சூரன்ஸ்).

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி சுபாஜினி சிவானந்தன்**
அவர்களின் பாசமிகு தந்தை

**கார்த்திகேசு இராஜகோபாலு**

அவர்களின் திடீர் மறைவையொட்டி ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவரின் பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்,
நீர்வேலி.
(41913)(22.16.45.42)

## மரண அறிவித்தல்

## சிவஞானம் சிவகுமார்



கோப்பாய் தெற்கு, மாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் சிவகுமார் அவர்கள் 18.10.2005 செவ்வாய்க்கிழமை பஹ்ரெய்னில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் சிவஞானம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் புவனா, கோமளாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் தெற்கு,*
*மாதா கோயிலடி.* (41912)(18-16-45-42)

*தகவல்:*
சிவஞானம் (அப்பா).

# மிதிவெடி அகற்றப்பட்ட பகுதிகள் பிரதேச செயலர்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.25

நல்லூர் பிரதேச செயலர் பிரிவு செம்மணிப் பிரதேசத்திலும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அச்சுவேலி தம்பளைப் பிரதேசத்திலும் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட பகுதிகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ். செயலகத்தில் இயங்கும் மாவட்ட மிதிவெடி அகற்றும் அலுவலகத்தில் இடம் பெற்றது. இதில் செம்மணிப் பிரதேசத்தில் மிதிவெடி அகற்றப்பட்ட 2 ஆயிரத்து 99 சதுர மீற்றர் பகுதியை நேற்று 10மணியளவில் நல்லூர் பிரதேச செயலரிடமும் -அச்சுவேலி தம்பளை பிரதேசத்தில் வெடி பொருள் அகற்றப்பட்ட 4 ஆயிரத்து 50 சதுர மீற்றர் பகுதியை கோப்பாய் பிரதேச செயலரிடமும் இராணுவத்தினரின் மிதிவெடி அகற்றும் பிரிவின் அதிகாரி மேஜர் கமகே உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட மிதிவெடி அகற்றல் அலுவலகத்தின் திட்டமிடல் செயற்பாட்டு அலுவலர்கள்,இராணுவ அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

(ஒ-ரி)


## முக்கிய அறிவித்தல்

**அனைத்து வீடியோ, புகைப்படப்பிடிப்பாளர்களுக்கும்!**

எம்து சங்க உறுப்பினரான இராமலிங்கம் சதீஸ் நேற்று அகால மரணமடைந்துள்ளார். எனவே, அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள சகல அங்கத்தவர்களையும் நண்பகல் 12 மணிக்கு ஒன்றியத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(41939)(12-15-33)

செயலாளர்,
ஒளிக்கலை ஒன்றியம், யாழ். மாவட்டம்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்
நூற்றாண்டு அதிபர்



அமரர் **சின்னையா குகதாசன்** (M.Sc.) அமரத்துவம் அடைந்துள்ளார். 12 வருட காலமாக உயிரியற் பிரிவு ஆசானாக, பகுதித் தலைவராக இருந்தவர். தொண்டமானாறு வெளிக்கள நிலைய கடல் உயிரின ஆய்வாளராக, மருத்துவ பீட மாணவ உற்பத்தியாளராக துலங்கியவர். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
(சி/45920) (12-15-33) யாழ். - இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



செலிங்கோ காப்புறுதிக் கம்பனியின் சுன்னாகம் கிளைப் பொறுப்பதிகாரி
திரு இ.ஐங்கரனின் அன்புச் சகோதரன்
**இ.சதீஸ்**
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

செலிங்கோ காப்புறுதிக் கம்பனி பொதுப்பிரிவு,
(41936) (12-15-33) யாழ். மாவட்டம்.

## கண்ணீர்க் காணிக்கைகள்



சதீஸ் வீடியோ& போட்டோ உரிமையாளரான
**இராமலிங்கம் சதீஸ்**
அவர்கள் நேற்று அகால மரணமடைந்ததையிட்டு துயருறுவதுடன், அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாணி ரெக்ஸ் (சி/45922) (12-15-33) **உரிமையாளரும்**
சாவகச்சேரி, யாழ்ப்பாணம். **ஊழியர்களும்.**

## கண்ணீர் அஞ்சலிகள்



எமது நிறுவன காப்புறுதி பிரதிநிதி
திருமதி ச.சுதர்சினி அவர்களின் அன்புக் கணவர்
**R.சதீஸ்**
அவர்களின் அகால மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

(41941) (12-15-33)
யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிடெட், முகாமையாளர் மற்றும்
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். உத்தியோகத்தர்கள்.

யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகம்

## பதவி வெற்றிடம்

எமது நிறுனத்தில் 750 பாதையில் வீதிக் கடமைகளில் ஈடுபடுவதற்கு நேரக்கணிப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆண்டு 9 இல் கல்வி கற்று 20 வயதிற்கு மேற்பட்டோர் எதிர்வரும் 27.10.2005 முற்பகல் 11.00 மணிக்கு காரியாலயத்திற்கு நேரில் சமூகம் தருமாறு கேட்டுகொள்கிறோம்.

(41934) பொ.கெங்காதரன்
தலைவர்.

## உடன் தேவை

மோட்டார் உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு ஆள்கள் உடன் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

**டிலக்சன் மோட்டோர்ஸ்**
113, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே. 0777 186210
(41825)

## மணவறை விற்பனைக்கு

புதிதாக செய்யப்பட்ட மணவறை விற்பனைக்குண்டு.

தொடர்பு:- **வ.ஞானம்**
C/O பரராஜசிங்கம், உரும்பிராய் மேற்கு,
(41944) உரும்பிராய். (மூன்று கோவிலடி).

**ராஜா** யாழ்ப்பாணம்

கடைசி வாரம் சூர்யா, அஸின், நயன்தாரா நடித்த
**கஜினி**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30 மட்டும்.
அடுத்த வெளியீடு: விக்ரம், அஸின், வடிவேல் நடித்த
**மஜா**

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடு 3 ஆவது ஜனத்திரள் வாரம்
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை** (சினிமா)
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00

**மனோகரா** யாழ்ப்பாணம்

பார்த்தீபன், வடிவேலு, லட்சுமிராய் நடித்த
**குண்டக்க மண்டக்க**
சிலதினங்கள் மட்டும் (சி-45593)
28.10.05 முதல் காலை 8.00 மணி
யாழ். மாவட்டத்தில் காட்சி காண்பிக்கப்படும்.
முதல் முறையாக
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்
இளைய தளபதி விஜய் வெடிக்கும்
**சிவகாசி**
காட்சிநேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே.)


## கண்ணீர் அஞ்சலி



எமது ஒளிக்கலை ஒன்றிய
உறுப்பினரும் சதீஸ் வீடியோ &
போட்டோ உரிமையாளரும் ஆகிய
**இராமலிங்கம் சதீஸ்**
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர்,
ஒளிக்கலை ஒன்றியம்
(41938) (12-15-33) யாழ். மாவட்டம்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ். போரதனை வெளிவாரிப்பட்டப்படிப்பு ஒன்றியப் பொருளாளர்
செல்வன் R.ஐங்கரனின் அன்புச் சகோதரன்
**R.சதீஸின்**
திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். போரதனை வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம்,
புதிய உயர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(41935) (12-15-33)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக வெளிவாரி கலைமாணி இறுதியாண்டு மாணவன்
செல்வன் R.ஐங்கரனின் அன்புச் சகோதரன்
**R.சதீஸ்**
அகால மரணச் செய்தியறிந்து துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவருடைய ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

(41937) வெளிவாரி கலைமாணி இறுதி ஆண்டு மாணவர்கள்,
(12-15-33) புதிய உயர்கல்லூரி விரிவுரையாளர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னபூரணம் சாந்தலிங்கம்

*(சிவ நிலையம், நாவலடிப்புலம், வேலணைகிழக்கு)*

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி அன்னபூரணம் சாந்தலிங்கம் அவர்கள் நேற்று (24.10.2005) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாந்தலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மருதப்பு - பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகமணி, மீனாட்சி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான அன்னலெட்சுமி, அன்னம்மா மற்றும் சிவசுப்பிரமணியம் (வட்டயமுல்லை மணியம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகநாதன் (கொழும்பு), சிவபாக்கியம் (டென்மார்க்), அம்பிகாதேவி (சுவிஸ்), காலஞ்சென்ற சற்குருநாதன், சிவநாதன் (லண்டன்), சரசலாதேவி (லதா - ஆசிரியை, அல் அஷ்ரப் மத்திய மகாவித்தியாலயம், மாபோலை, வத்தளை) ஆகியோரின் அன்புத் தாயாரும் கன்னிகா பரமேஸ்வரி (கொழும்பு), மகேந்திரன் (டென்மார்க்), இராஜலிங்கம் (சுவிஸ்), ஜெயகௌரி (கொழும்பு), தவராஜேஸ்வரன் (மஹாராஜா கூட்டு நிறுவனம் - கொழும்பு), சிவநேசன் (பிரான்ஸ்), சிவகுமார் (யாழ்ப்பாணம்), சிவகௌரி (கொழும்பு), சிறிகௌரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுபகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவப்பிரியா, இராஜ் நிஷாந்தி, அனுஷா, சற்குருராஜ், ஜனா, சற்குருநாதன், கஜேந்திரன், சிவானுஜன், சிவானுஜா, சிவதனுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் நாளை (26.10.2005) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (41931)(12-15-33)

*இல. 7,7/2 கொலிங்வூட் பிளேஸ்,*
*வெள்ளவத்தை, கொழும்பு-06.*
*தொ.பே.2361476, 0777774575*

தகவல்:
**சண்முகநாதன் (மகன்)**
**(சரசலாதேவி) (லதா-மகள்)**

### கார்த்திகேசு இராசகோபாலு

*(இளைப்பாறிய அதிபர், R.C. பாடசாலை, உரும்பிராய்)*

யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு இராசகோபாலு நேற்றுமுன்தினம் (23.10.2005) ஞாயிறு இரவு காலமானார்.

அன்னார் திருப்பதியின் அன்புக் கணவரும் சிவராஜினி, அருட்செல்வன், ஜெயானி (பிரான்ஸ்), சுபாஜினி (ஆசிரியை, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரேம்குமார் (சவூதி), இரத்தினசிங்கம் (பிரான்ஸ்), சிவானந்தம் (டோகா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சஜித்திரா, சங்கமிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.10.2005) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் இளங்காடு மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (41946) (12-15-33)

*கற்பகப் பிள்ளையார் கோயிலடி,*
*பலாலி வீதி, உரும்பிராய்.*

தகவல்:
**திருமதி இ.திருப்பதி**

### திருமதி சுப்பிரமணியம் சற்குணம்



குப்பிளான், சமாதி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாவும் கொண்ட சுப்பிரமணியம் சற்குணம் நேற்று (24.10.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மனைவியும், சூரியப்பிரபா, காலஞ்சென்ற சுதாகரன், சுசீலா, சுகுமாரன், சுபத்திரா, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சுகந்திரன், சுமதி ஆகியோரின் தாயாரும் இராசலிங்கம், முருகமூர்த்தி, இரத்தினேஸ்வரி, பத்மநாதன், விஜயகுமாரி, விக்கினேஸ்வரி, கணேசமூர்த்தி ஆகியோரின் மாமியாரும் மதிவண்ணன் - லதா (கொலண்ட்), மதினியா, சிவநேசன் (லண்டன்), அனுசியா, சுதர்சன், சுஜிந்தன், பிரசாந், அரவிந்தன், சுதர்சினி, சுகிதா, சுபாகர், ஆதவன், சுந்தர், கஜித்தன், றஜிதா, அகல்யா, ஜனிதா, விதுசன், விஸ்ணு, யதுசன், சுகன்யா, துர்க்கா, யதுசி, கிருஸ்ணா ஆகியோரின் பேர்த்தியும் சகிர்தன், தாரங்கன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2005) செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (41943) (15-12-33)

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

# சந்திரிகா - ரணில் சந்திப்பு பிரதமர் மஹிந்த அதிருப்தி

கொழும்பு,ஒக்.25

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க் கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக் கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருப் பது ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாள ரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்குப் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற் றுத் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்முகாமிலிருக் கும் வேட்பாளரைக் கட்சியின் தலைவரே அரவணைக்கும் சூழ்நிலையில் அது தேர்த லில் தமக்குப் பெரும் பாதிப்பைக் கொண்டு வரலாமென்பதால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறான அதிருப்தியை கொண்டிருக் கிறார் என தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக, தேர்தல் பிரசார மேடைகளில் கருத்துக்களை வெளியிட்டுவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமரின் 'மஹிந்தவின் சிந்தனை' தேர்தல் விஞ்ஞாபனத்தை மறை முகமாக விமர்சிக்க ஆரம்பித்திருக்கின்றமை தொடர்பிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதிருப்தி கொண்டுள்ளாரெனத் தெரிவிக் கப்படுகிறது. பொது மேடைகளில் மறைமுக மாக தம்மை விமர்சிப்பதன் மூலமும், எதிர் முகாம்களிலுள்ள அரசியல் பிரமுகர்களைச் சந்திப்பதன் மூலமும், எதிர்க்கட்சி அரசியல் வாதிகளின் கருத்துக்கள் மற்றும்அரசியல் நிலைப்பாடுகளுக்கு முன்னுரிமையளிப் பதன மூலமும், ஜனாதிபதித் தேர்தலில் தமது காலை வாருவதற்கு ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொள்கிறார் என்றே கருத வேண்டி யுள்ள தாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமக் குசகாக்களிடம் தமது கவலையை வெளியிட் டுள்ளாரென கூறப்படுகிறது.

இந்த நிலையில் இது தொடர்பில் ஜனாதி பதியுடன் நேரடியாக பேச்சு நடத்தி இந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் காண்பதற்கு பிரத மர் மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கிறார் என்றும் அவருக்கு நெருங்கிய வட்டாரங் கள் மேலும் தெரிவித்தன. (க)

## பிரதி அமைச்சர் பதவியை இன்று பைஸர் முஸ்தபா இராஜினாமா

கொழும்பு, ஒக்.25

சுற்றுலாத்துறை பிரதியமைச்சரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பைஸர் முஸ்தபா தனது பிரதியமைச்சர் பத வியை இன்று இராஜினாமாச் செய்யவுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஐ.தே.கட்சி பட்டியலில் போட்டி யிட்டுத் தேர்தலில் வென்று இ.தொ.காவின் சார்பில் தற்போதைய அரசில் பிரதியமைச்சர் பதவியைப் பெற்றவர் பைஸர் முஸ்தபா.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக் கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக் கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு இ.தொ.கா. தீர்மானித்ததையடுத்து அரசில் வகித்த முக் கிய அமைச்சுப் பதவிகளை இ.தொ.காவினர் இராஜினாமாச் செய்தனர். ஆனால், பைஸர் முஸ்தபா மட்டும் இராஜினாமாச் செய்யாமல் பதவியில் நீடித்தார்.

இப்போது கட்சியின் கொள்கைகளைப் பின்பற்றி இன்று தனது பதவியை இராஜி னாமாச் செய்வதற்கு பைஸர் முஸ்தபா தீர் மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அனுப்பவுள்ள பைஸர் முஸ்தபா, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது பெரும்பாலும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கு ஆதரவைத் தெரிவிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## புலிகளின் பகுதியில் வாக்குசாவடியா? ஆட்சேபித்து உயர்நீதிமன்றில் வழக்கு

கொழும்பு,ஒக்.25

இராணுவக் கட்டுப்பாடற்ற வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் வாக்குச்சாவடிகளை அமைப் பதற்கு தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் ஜனா திபதி வேட்பாளர் பீற்றர் நெல்சன் பெரேரா உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க, பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, இராணுவத்தளபதி மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2002ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்த லின்போது ஐரோப்பிய கண்காணிப்பாளர் கள் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடு பட்டிருந்தனர். அப்போது வடக்கு-கிழக்கில் தேர்தல் நீதியான முறையில் நடைபெற வில்லையென்பதை அவர்கள் கூறியிருந்தனர். அதனடிப்படையில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாக்குச்சாவடிகளை அமைப்ப தற்கு தடைவிதித்து தேர்தல் ஆணையாள ருக்கு உத்தரவிடவேண்டுமென்று அவர் தமது மனுவில் மேலும் கோரியுள்ளார்.

## சுவர்ணவாஹினி விளம்பரத்துக்கு தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு

கொழும்பு, ஒக்.25

தேர்தல் பிரசார விளம்பரத்திற்குத் தனது உரை பயன்படுத்துவதைத் தடைசெய்யுமாறு கோரி ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமர சிங்க தாக்கல் செய்த மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

மேற்படி மனுவில் சுவர்ணவாஹினி தொலைக்காட்சியை நடத்தும் ஈ.ஏ.பி. ஊடக வலையமைப்பு குறிப்பிடப்பட்டிருந்தது.

மனுதாரர் தனது மனுவில் இலங்கை இராணுவத்தைக் கலைக்குமாறு தாம் ஆற் றிய உரையுடன் தொடர்புபட்ட சில பகுதி கள் தமது அனுமதி பெறாமலேயே ஜனாதிப தித் தேர்தல் பிரசார விளம்பரமாக ஒளிபரப் பப்பட்டமை தமக்கு அபகீர்த்தியினை ஏற் படுத்தியுள்ளது என குறிப்பிட்டிருந்தார்.

எனவே, அரசியல் பிரசார விளம்பர மொன்றிற்கு மனுதாரரின் உரை பயன்படுத் தப்படுவதைத் தடுக்கும் வகையில் தடையுத் தரவை பிறப்பிக்குமாறு மனுதாரர். சார்பில் ஆஜரான சட்டத்தரணி, நேற்று நீதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி, அரசியல்வாதிகள் மேடையில் ஆற்றும் உரைகளை ஒளிபரப்பாமல் இருப்பதற்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்தால் அது பொதுமக்களுக்குத் தகவல் சென்றடையும் உரிமையை மீறுவதாக அமையும் என்றார்.

வாதப் பிரதிவாதங்களைக் கேட்ட நீதிபதி கே.எச்.சுமித்ரபால தடையுத்தரவை பிறப் பிக்குமாறு கோரப்பட்ட சோமவன்ஸவின் மனுவை நிராகரித்தார்.

SKY COMPUTERS (PVT) LTD.
No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325
Affiliated with Irish International University (U.K)
On Line Courses
MS Office XP
Desk Top Publishing
Only 2000/=
3 Months
மற்றைய நிறுவனங்களை விட, முற்றிலும் வேறுபட்ட பயிற்சி முறை இலகுவான கட்டணமுறை, தரமான ஆசிரியர்கள்
Unlimited Practical Hours
E - mail :
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead

SKY COMPUTER SYSTEM.
89A, Kandy Road, Jaffna.
Tel: 0773 276250
For all your Computer Requirements
15,000/=
Pentium IV
Genuine intel Dealer
Pentium III
Pentium II
Pentium I
* COMPUTER SALES
* COMPUTER REPAIR
* COMPUTER PARTS
* COMPUTER MAINTANACE
E-Mail: skymathy@sltnet.lk

### பொ.ஐ.மு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரம் குறித்தும், ஜனாதிபதித் தேர்தலை நீதி யாகவும், நேர்மையாகவும் நடத்துவது தொடர் பிலும் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார் எனத் தெரிகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ள விஞ்ஞாபனத்தில் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு மற்றும் எதிர்க்கட்சித் தலைவருடன் நேற்று நடத்திய பேச்சுகள் போன்றவை குறித்தும் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது என எதிர்பார்க்கப்படுகின்றது.

'மஹிந்த சிந்தனை' என்ற பெயரில் பிரத மர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருக்கும் தேர்தல் விஞ்ஞாபன யோசனைகள் அவரு டைய தனிப்பட்ட கருத்துகளா அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியினுடைய கருத்துகளா என்பதை ஆராய்ந்து தீர்மானிப் பதும் இன்றைய சந்திப்புக்கு ஜனாதிபதி ஏற் பாடு செய்ததற்கான காரணங்கள் என்று கூறப்படுகின்றது. (க)

### பிரஸல்ஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தலைவன்!'', ''தமிழர்களின் ஏகப் பிரதி நிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே!'', ''ஐரோப்பிய ஒன்றியமே மீளப்பெறு மீளப் பெறு! விடுதலைப் புலிகளின் பயண வர வேற்பு மறுப்பை மீளப்பெறு!'' என்பன உட் பட பல்வேறு வாசகங்களும் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர் கள் ஆர்ப்பரித்தனர்.

ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் வாழும் ஈழத் தமிழர்கள் ஆயிரம் ஆயிரமாக பிர ஸல்ஸில் கூடி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர். தமிழீழ தேசியக் கொடியைத் தாங் கியவாறு சிவப்பு, மஞ்சல் நிறத்திலான ஆடைகளை அணிந்தவாறும் அவர்கள் காணப்பட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியிடையே ஈழத் தமிழர்களின் உரிமை முழக்கத்தை வலியுறுத்தும் கோரிக்கை மனுவை ஐரோப் பிய ஒன்றியப பிரதிநிதிகளிடம் எழுக தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் கையளித்தனர். பின் னர் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

### ஓட்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து புறப்பட்டுச்சென்ற மினிபஸ்ஸுமே நேருக்கு நேர் மோதிக்கொண்டன .

இதில் ஓட்டோ சிதிலமானது. அதிலி ருந்த சாரதி உட்பட நால்வரும் படுகாயம டைந்தனர். அப்பகுதியில் மிதிவெடி அகற் றும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் காய மடைந்த நால்வரையும் தமது அம்புலன்ஸ் வாகனத்தில் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். காய மடைந்தவர்களில் நுணாவில் கிழக்கைச் சேர்ந்த இராமலிங்கம் சதீஸ் (வயது 32) என்ற ஒரு பிள்ளையின் தந்தை வழியில் உயிரிழந்தார். ஓட்டோ சாரதியான சாவகச் சேரியைச் சேர்ந்த சண்முகவடிவேல் சுதா கரன் (வயது 23) மற்றும் மட்டுவில் தெற் கைச் சேர்ந்த மகேந்திரன் பிரசாத் (வயது 23) வரணியைச் சேர்ந்த வைத்திலிங்கம் விஜ யேந்திரன் (வயது 23) ஆகியோர் யாழ். வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க் கப்பட்டனர். விபத்தில் உயிரிழந்தவரின் சட லம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர் களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலீஸார் விபத்து தொடர் பாக விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(ஓ-15-31-75)

### மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து தாங்கள் வந்தனர் என அவர்கள் பொலீ ஸாரிடம் விளக்கம் அளித்தனர்.

எனினும், இவர்கள் உரிய முறையில் தங் களை அடையாளப்படுத்தவில்லை என்றும் சில சந்தேகநபர்கள் முரணான தகவல்களை வழங்கியுள்ளனர் எனவும் தங்காலை பொலீ ஸார் தெரிவிக்கிக்கின்றனர்.

இவர்கள் 11 பேரும் தடுத்து வைக்கப் பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (க)

### கார்த்திகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடையே இந்துக்களின் முக்கிய விரத தினங் கள் தொடர்பாகக் குழப்பநிலைஇருக்கின் றது.

இதன் காரணத்தினால் இந்தியாவில் இவ் விரத தினங்கள் எத்தினங்களில் நடக்கின் றன என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்புகொண்டு கேட்டதன் பிரகாரம், பின் வரும் தினங்களில் பின்வரும் விரதநாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன என்பதை தெரி வித்துக் கொள்கின்றோம்:-

திருவண்ணாமலை, அருணாச்சலேஸ் வரர் ஆலயத்தில் கார்த்திகைதீபம், 13.12.2005 அன்று மாலை நடைபெற இருக்கின்றது.

சிதம்பரம், தில்லை நடராஜர் ஆல யத்தில் திருவெம்பாவை 04.01.2006 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அங்கு திருவாதிரை ஆருத்திரா தரிசனம் 13.01.2006 அன்று கொண்டா டப்படவிருக்கின்றது.

மேலே குறிப்பிட்ட தினங்களில் இவ் விரத நாள்களை அனுஷ்டிக்கும்படி இந்து கலாசார அமைச்சு அறிவித்தல் விடுக்கின்றது.

மேலே குறிப்பிட்ட தினங்களைக் குறிப் பிடுகின்ற பஞ்சாங்கத்தை ஏனைய விரத நாள்கள், நல்ல நேரங்கள் பார்ப்பதற்கும் பயன்படுத்துவதும் சரியாக இருக்கும் என்று எமது அமைச்சு ஆலோசனை வழங்குகின் றது.

- இவ்வாறு அமைச்சின் ஆலோசகர் மகேஸ்வரி வேலாயுதம் நேற்று வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிவித்தலில் தெரிவிக் கப்பட்டிருக்கின்றது. (க)

### ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் விஞ்ஞாபனத்தை நாட்டு மக்க ளுக்கு வெளியிட்ட கையோடு, அதன் பிரதி ஒன்றை இணைத்து ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அந்த விஞ்ஞாபனத்தில் தாம் முன்வைத் துள்ள யோசனைகள் குறித்து ஜனாதிபதியு டன் கலந்துரையாடுவதற்கான சந்திப்பு ஒன் றுக்கு முன்மொழிந்திருந்தார்.

அந்த யோசனைகள் விரிவாக ஆராயப் பட்டன. நாட்டின் அதி பிரச்சினைக்குரிய விவகாரமான போர் மற்றும் சமாதானம் பற் றிய விடயத்துக்குத் தீர்வு காண்பதற்கு அனைத்துப பெரிய கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை இருவருமே ஏற்றுக்கொண்டனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது நீதியும், நேர்மையுமான வாக்களிப்பு இடம் பெறுவதை உறுதிப்படுத்துவதன் அவசியத் தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார். இது தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடவடிக் கைகள் குறித்து ஆராயப்பட்டு இணக்கம் காணப்பட்டது.

முதல் நடவடிக்கையாக -

வடக்கு - கிழக்கிலும் நாட்டின் இதர பகுதிகளிலும் நியாயமான வாக்களிப்பு இடம்பெறுவதை உறுதிபடுத்துவதற்குப் பின் பற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிர தான வேட்பாளர்களையும், அவர்களின் பிரதிநிதிகளையும் ஜனாதிபதி குமாரதுங்க கால ஒழுங்கு தவறாமல் அழைத்து, சம் பந்தப்பட்ட அதிகாரிகள் சகிதம் மீளாய்வு செய்யவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு வாரத் துக்கு முன்னர் அரசின் வரவு - செலவுத் திட் டத்தை முன்வைப்பதற்குத் திட்டமிடப்பட்டி ருப்பது தொடர்பான தமது கட்சியின் ஆட் சேபனையை எதிர்க்கட்சித் தலைவர் வெளிப் படுத்தினார்.

நவம்பர் 8ஆம் திகதி வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பது எனத் தமது அமைச் சரவை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது என் பதை ஜனாதிபதி குமாரதுங்க, விக்கிரமசிங் கவுக்கு தெரியப்படுத்தினார்.

எனினும், இந்தத் தீர்மானத்துக்கு ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி ஆட்சேபனை தெரி வித்த காரணங்கள் குறித்துத் தாம் கலந்துரை யாடுவார் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

-இவ்வாறு ஜனாதிபதி செயலக அறிக்கை தெரிவித்தது.

### இலங்கைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''இதனைக் கூறுவதால் நான் இலங்கைத் தமிழர்கள் பற்றி மட்டுமே பேசுவதாகவும் தமிழக மக்கள் மீது எனக்கு எவ்வித அக்கறை யும் இல்லை எனவும் சிலர் தவறான பிரசா ரத்தை மேற்கொண்டு வருகிறார்கள். தமிழ கத்தின் திராவிட இயக்கக் கொள்கைகளை பலர் இன்று மறந்துவிட்டனர். மாறாக மறு மலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமே அந் தக் கொள்கைகளைப் பாதுகாத்து வருகின் றது'' - என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாகத் தான் யாருடனும் விவாதிக்க தயார் எனத் தெரிவித்த வைகோ, தமிழர்க ளுக்கு எங்கு அநீதி நிகழ்ந்தாலும் அதனைத் தட்டிக்கேட்க தான் தயாராகவுள்ளார் என் றும் கூறினார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.